
குடிமைப் பயிற்சி
IV
T.S. உமாபதி M.A., L.T.
தி நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-1

குடிமைப் பயிற்சி

நான்காம் புத்தகம்

(நான்காம் பாரத்திற்குரியது)

ஆசிரியர்:

T. S. உமாபதி, M. A. L. T., (Dip.-in-Geog.)


தலைமை ஆசிரியர், சி. அப்துல் ஹகீம் இந்து முஸ்லிம்
உயர்நிலைப்பள்ளி, சென்னை.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,


6, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1

பதிப்புரிமை] 1951 [விலை ரூ. 1.


உள்ளுறை




1906




1931



1916



1931 ஆகஸ்ட் 1



1921



1947 ஆகஸ்ட் 15

குடிமைப் பயிற்சி

நான்காம் புத்தகம் - நான்காம் பாரத்துக்குரியது

---

1. நமது நாட்டுக்கொடி

முன்னர் அறியப் பெற்றவை:

“தாயின் மணிக் கொடி பாரீர்! — அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! (தாயின்)

கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்! — எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்;
நம்பற் குரியர் அவ்வீரர் — தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்.” (தாயின்)

என்பன பாரதியாரவர்களின் பாரத நாட்டுக் கொடி வணக்கப் பாடலின் சில அடிகள். அவற்றால் நாம் நமது நாட்டுக் கொடியைத் தாழ்ந்து, பணிந்து, புகழ்ந்திடவும், நமது உயிரையும் ஈந்து அதைக் காத்திடவும் கடமைப்பட்டுள்ளோம் என்பது புலனாகின்றதன்றோ?

இங்ஙனம் நமது உயிரினும் சிறந்த கொடி முதன் முதல் 1906-ஆம் ஆண்டில் தோன்றிய வரலாற்றையும், பிறகு அதன்கண் 1916, 1921, 1931, ஆகிய ஆண்டுகளில் தோன்றிய மாறுதல்களையும் நீங்கள் அறிவீர்கள்.

அதன் இன்றைய அமைப்பு 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் உருப்பெற்றதென்பதும் நீங்கள் அறிந்ததே. அதன்கண் காணப்படும் கேசரி நிறம் நமது நாட்டு விடுதலைக்காகப் பாரதநாட்டுத் தியாகிகள் சிந்திய இரத்தத்தையும், அவர்கள் காட்டிய வீரத்தையும் குறிக்க அமைந்ததென்பதையும், வெண்மை நிறம் நாம் எப்போதும் சமாதானத்தையே நாடி நிற்கின்றோம் என்பதைக் காட்ட அமைந்ததென்பதையும், பச்சை நிறம் நமது நாட்டுச் செழுமையைக் குறிக்க அமைந்ததென்பதையும் அறிவீர்கள். அன்றியும், நமது கொடியின் இடையில் பொறிக்கப்பட்டுள்ள சக்கரம் நமது தருமத்தையும், நீதியையும் குறிக்கும் ஆஞ்ஞா சக்கரமாக அமைந்திருப்பதும் நீங்கள் அறிந்ததே.




1. ஊர்வலத்தில் நமது கொடியைத் தாங்கிச்செல்லும் முறை.

நமது நாட்டுக்கொடியைக் கேசரி நிறம் மேலே இருக்கும்படி பறக்கவிட வேண்டுமென்பதும் முன்னரே கூறப்பட்டது. கொடியைப் பறக்கவிடும்போது பள்ளி மாணவர்கள் எவ்வாறு நின்று வணக்கம் செலுத்த வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இனி நமது நாட்டுக் கொடியின் பெருமையைக் காத்தற்குரிய செய்திகளைக் கவனிப்போம்:


1. கொடியைச் சூரியன் தோன்றும்போது பறக்க விட்டுச், சூரியன் மறையும்போது இறக்கிவிட வேண்டும். கொடியை ஏற்றும்போது சுறு சுறுப்பாக ஏற்ற வேண்டும்; இறக்கும்பொழுது மெல்லப் பணிவு தோன்றும் முறையில் இறக்க வேண்டும். கொடியை விசேஷ தினங்களில் மட்டுமே பறக்கவிடல் வேண்டும்.

2. ஊர்வலங்களில் நமது தேசியக் கொடியைப் பிற கொடிகளோடு தாங்கிச் செல்ல நேர்ந்தால், அது மற்றக் கொடிகளின் வலப் புறத்திலாவது அல்லது முன் னணியிலாவது இருத்தல் வேண்டும். படம் : 1



2. நமது கொடி வலப்பக்கம் இருப்பதைக் கவனி.

3. சுவர்களின் மீது நமது தேசியக்கொடி வேறு கொடிக்குக் குறுக்கே இருக்கும்படி வைத்து அலங்கரிக்க



படம் 3 : நமது கொடி மத்தியில் இருப்பதைக் கவனி.

வேண்டுமானல் 'நமதுகொடி வலப்பக்கம் பறக்கும்படி அமைக்கப்படவேண்டும். (படம் : 2)


4. பல கொடிகளை வரிசையாக அமைத்து அலங் கரிக்க விரும்பினுல் நமதுகொடி மத்தியில்அல்லது உயரத் தில் இருத்தல் வேண்டும். (படம் : 3)

5. ஒரே கம்பத்தில் நமது நாட்டுக் கொடியுடன் பிற கொடிகளையும் பறக்க விட வேண்டுமானால், நமது கொடி உச்சியிலும், பிற கொடிகள் கீழும் இருத்தல் அவசியம். படம்: 4 அன்றியும், அக்கொடிகள் ஏற்றப்படும்பொழுது நமது தேசீயக்கொடி முதலில் ஏற்றப்படவேண்டும்; இறக்கும்பொழுது இறுதியாக இறக்கப்படல் வேண்டும்.



படம் 4: நமது நாட்டுக்கொடி மேலே இருப்பதைக் கவனி.

6. வீடுகளின் அல்லது அலுவலகங்களின் சாளரங்களிலும், கைப்பிடிகளிலும் நமது தேசீயக் கொடி கட்டப்பட்ட கொம்பைக் கட்ட வேண்டுமானால், கேசரி நிறம் மேலே இருக்கும்படி கட்டப்படல் வேண்டும்.



படம் 5: சாளரத்திலிருந்து நமது கொடி பறக்கவேண்டிய முறை.

7. கொடிக் கம்பத்திலும், கொம்புகளிலும் கட்டப்படாமல் கொடி மட்டும் கட்டடங்களுக்கு உட்புறத்திலோ அன்றி வெளிப்புறத்திலோ கட்டப்பட வேண்டுமானால், குறுக்கு வசத்தில் இருக்கும் போது கேசரி நிறம்மேலே இருக்கும் படியும், நெடுக்கு வசத்திலிருக்கும் போது அதை நோக்கி நிற்பவர்க்கு இடப்பக்கம் கேசரிநிறம் இருக்கும்படியும் கட்டப்பட வேண்டும். அலங்காரத்துக்காக வெண்மை,பச்சை, கேசரிநிறத் துணிகள் கட்டப்படவேண்டுமானால், தேசீயக்கொடிகளை உபயோகிக்காமல் அலங்காரத்துக்குரிய துணிகளை உபயோகிக்க வேண்டும்.




படம் 6: கட்டடங்கள் இடையில் நமது கொடியைப் பறக்கவிடவேண்டிய முறை.

8. தெருக்களில் இரண்டு கட்டடங்களுக்கு இடையில் கொடியைப் பறக்கவிடவேண்டுமானால், கொடி நெடுக்கு வசத்தில் தொங்கவிடப்படவேண்டும். கிழக்கு மேற்குத் தெருவில் கேசரி நிறம் வடக்கு நோக்கியும், தெற்கு வடக்குத் தெருவில் கேசரி நிறம் கிழக்கு நோக்கியும் இருக்கவேண்டும்.

9. கூட்டங்களில் தேசீயக் கொடியை உபயோகிக்கும் முறைகள் இரண்டுண்டு. கம்பத்தில் தொங்கவிடப்பட்ட கொடியானால், அக்கம்பம் பேச்சாளர் இருக்கும் மேடையின் வலப்புறம் இருக்க வேண்டும். கம்பமின்றிக் கொடியை மட்டும் கட்டவேண்டுமானால் பேச்சாளருக்குப் பின்புறச் சுவரில் அவர் உயரத்துக்கு மேலே கேசரி நிறம் மேலிருக்குமாறு குறுக்கு வசத்திற் கட்டப்படவேண்டும்.

10. சிலைத் திறப்பு விழாவில் தேசீயக்கொடி தனிக் கௌரவம் பெறத் தக்கது. சிலையின் பின்புறத்தில் சற்று உயரத்தில் கொடி நெடுக்காகவோ குறுக்காகவோ தனியே கட்டப்படல்வேண்டும்.



படம் 7: சிலையின் பின்புறத்தில் கொடி கட்டப்பட்டுள்ள முறையைக் கவனி.

11. பொதுவாகக் கொடியைப் பறக்க விடும்போது கொடிக் கம்பத்தின் உச்சியில் கொடி பறக்க வேண்டும். ஆனால் ஏதேனும் துக்க நிகழ்ச்சியைக் குறிப்பதற்குக் கொடியைக் கொடிக் கம்பத்தின் இடைப் பாதியிற் பறக்க விடவேண்டும். அங்ஙனம் பறக்க விடுவதற்கு முன், கொடியைக் கம்பத்தின் உச்சிக்குஏற்றிப் பிறகு தாழ்த்தி இடையிற் கட்ட வேண்டும். மாலையில் கொடியை இறக்கும்போதும், முதலில் கம்பத்தின் உச்சிவரையில் ஏற்றிப் பிறகுதான் இறக்க வேண்டும்.

சில சமயங்களிற் கடந்துபோன துக்க நினைவு நாளைக் குறிக்கக் கொடியைக் கொடி மரத்தின் பாதியிற் பறக்க விடுவது வழக்கம். அச்சமயங்களில் கொடி முற்பகலில் மட்டும் அரைக்கம்பத்தில் பறத்தல் வேண்டும். நடுப் பகலில் கொடியை உயர்த்திக் கம்பத்தின் உச்சியிற் பறக்கவிடவேண்டும்.

12. துக்க நிகழ்ச்சி சம்பந்தமாகக் கொடியை ஊர்வலமாகக் கொண்டு செல்ல நேரிடில், அப்போது கொடி அது கட்டப்பட்டுள்ள கழியின் இடையிற் கட்டப்படாமல் உச்சியில்தான் கட்டப்படவேண்டும்.



படம் 9. கறுப்பு நாடாக்கள் தொங்குவதைக் கவனி.



படம் 8. அரைக் கம்பத்தில் கொடி பறத்தல்.

ஆனால் கொடிக்கழியின் உச்சியில் இரண்டு கறுப்பு நாடாக்கள் கட்டித் தொங்க விடப்பட வேண்டும்.

13. தொழுகைக் கூட்டங்களில் தேசியக்கொடி கூட்டத்தில் முன் வரிசையிலிருப்பவர்க்கு வலப் பக்கத்தில் இடம் பெற வேண்டும். தொழுகை சம்பந்தமான பிற கொடிகள் இருந்தால் அவை கூட்டத்து முன் வரிசைக்கு இடப் புறத்தில் இடம்பெற வேண்டும்.

14. தேசியக் கொடி ஊர் வலமாக எடுத்துச் செல்லப்படுப்படும் போது, அங்குக் குழுமி இருக்கும் மக்கள் கவனிப்புநிலையில் நின்று வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டவர்கள். அங்ஙனம் வணங்கும் போது கொடி நாம் நிற்கும் இடத்துக்கு நேரில் வரும்போதுதான் வணக்கம் செலுத்த வேண்டும்.

தேசீயக் கொடி சம்பந்தமாகச் செய்யத் தகாச் செயல்கள்:

பொதுவாகத் தேசீயக்கொடி நமது வணக்கத்துக்கு உரியது என்பதை நாம் அறிவோம். ஆதலால், கொடி சம்பந்தமாக நாம் செய்யத் தகாச் செயல்கள் பல உண்டு. அவற்றை நினைவில் வைத்து நமது கொடியை நாம்

பெருமைப் படுத்தவேண்டும். அத்தகைய செயல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு கவனியுங்கள்:

1. சூரிய மறைவுக்குப் பிறகு கொடியைத் தாழ்த்தாமல் இருத்தல் கூடாது.

2. கூட்டங்கள் நிகழும்போது மேடையை அலங்கரிக்கவோ, பேச்சாளர் மேசையை அலங்கரிக்கவோ தேசியக் கொடியை உபயோகித்தல் கூடாது.

3. சிலைத் திறப்பு, படத்திறப்பு விழாக்களில் சிலையை மூடிவைக்கவும், படத்தை மூடிவைக்கவும் தேசியக் கொடியை உபயோகிக்கக் கூடாது.

4. எக்காரணம் பற்றியும் தேசியக்கொடியை அலட்சியம் செய்யக் கூடாது; பிறர் அலட்சியம் செய்வதையும் அனுமதித்தல் கூடாது.

5. கேசரி நிறம் கீழிருக்கும்படி கொடியைப் பறக்கவிடக்கூடாது.

6. தேசியக் கொடி எக்காரணம் பற்றியும் தரையைத் தொடும்படி விடுவது கூடாது.

7. தரையின்மீதோ, தண்ணீரின் மீதோ கொடியை இழுத்துச் செல்லுதல் கூடாது.

8. எப்பொருளும் எச்சின்னமும் தேசியக்கொடியை விட உயரத்திலோ, அன்றிக் கொடியின் மீதோ வைக்கப்படுவது கூடாது.

9. தேசியக் கொடிகளை அலங்காரச் சீலைகளாக உபயோகிக்கக் கூடாது.

10. வண்டி, ரயில், படகு முதலியவற்றின் பக்கங்களுக்கு அலங்காரச் சீலைகளாகத் தேசியக்கொடிகளை உபயோகிக்கலகாது. மோட்டார்காரின் முன் புறத்தில் மட்டும் அதைப் பறக்க விடலாம்.

11. கொடியை உன் தலை உயரத்துக்குத் தாழப் பிடித்துச் செல்லாதே.

12. தேசியக் கொடியின் மீது எதையும் எழுதாதே.

13. தேசியக் கொடியைப் பந்தயங்களில் உபயோகிக்கும் உடையின் பகுதியாக வைத்துத் தைக்காதே.

14. படுக்கை, தலையணை, கைக்குட்டை முதலியவற்றின் மீது தேசியக் கொடியைப் பொறித்துச் சித்திரிக்காதே.

15. கொடிக் கம்பத்தில் கொடியைத் தவிர எவ்விதமான வஸ்துக்களையும் கட்டித் தொங்கவிடாதே.

குறிப்பு: நமது நாட்டுக்கொடி உபயோகிக்கமுடியாதபடி பழையதாகிவிட்டாலும், அல்லது கிழிந்து விட்டாலும், அதை அலட்சியமாகக் குப்பையில் எறிந்து விடக்கூடாது. அதைப் பிறர் காணுதபடி எரித்துவிடுவதே செய்யத்தக்கதாம்.

இங்கு மற்றொரு முக்கிய விஷயத்தையும் நீங்கள் அறிதல்வேண்டும். "ஜனகணமன" என்னும்தொடக்கத்தை உடைய பாட்டு நமது தேசிய கீதம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதை நாம் பாடும்போதும், அல்லது வேறிடங்களில் அது பாடப்படும்போதும் செய்யவேண்டியது ஒன்றுண்டு. அக்கீதம்பாடப்படும்போது உட்காராமலும், நடவாமலும் நின்று வணக்கம் செலுத்த வேண்டுவதே அது. அது இந்திய மக்கள் எல்லாரும் மேற்கொள்ள வேண்டிய கடமை. நமது நாட்டில் வாழும் பிற நாட்டவர் கூட மேற்கொள்ள வேண்டுவது. இதை நமது நாட்டவர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை; கற்றவர்களுள்ளும் பலர் அறியவில்லை. மாணவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுவதே இல்லை. சில ஆசிரியர்களும் இதற்கு விலக்கன்று

நாம் ஒரு கூட்டத்துக்கோ, அன்றிக் கச்சேரிக்கோ, அன்றிப் படக்காட்சிக்கோ போகின்றோம் என்று வைத்துக்கொள்வோம். அவற்றின் இறுதியில் தேசிய கீதம் பாடப்படும்போது, அங்குக் கூடியுள்ள மக்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனித்திருக்கிறீர்களா ? தேசிய கீதம் தொடங்கப்பட்ட உடனே எல்லாரும் மிக்க பரபரப்புடனே வீடு நோக்கிச் செல்லத் தொடங்குகிறார்கள். கூட்டம் கலைந்த பிறகு செல்வதற்காகச் சற்று நிற்பவர்களும் சளசள வென்று வம்பளந்து கொண்டு நிற்கின்றார்கள். இவற்றைப்போன்றமடமைமிக்கச் செயல்கள்வேறெவையுமில்லை.

இன்று முதல் தேசீய கீதம் எங்குப் பாடப்பட்டாலும், உங்களுக்கு எத்துணை அவசர காரியமிருப்பினும் அதைப் பொருட்படுத்தாமல், தேசீய கீதம் பாடப்படும் இடத்தில் 'உஷார்' நிலையில் நின்று, மரியாதை செலுத்திவிட்டுப் பாட்டு முடிந்த பிறகு, அந்த இடத்தை விட்டகல வேண்டும். அன்றியும், தேசீய கீதம் பாடப்படும்போது அருகில் உள்ளவருடன் பேசுவது கூடாது. மௌனமாகவும் மரியாதையாகவும் நிற்கவேண்டும். இதுவே நாட்டுப்பற்றுள்ள நற்குடி மகனுக்கு அடையாளம்.


அயல் நாடுகளின் கொடிகள் :

நமது நாட்டுக் கொடியின் தோற்றம், வரலாறு, அமைப்பின் பொருள், அதை உபயோகிக்கும் முறைகள் முதலியவற்றை அறிந்தோம். இனி, பிற நாடுகள் சிலவற்றின் கொடிகளைப்பற்றித் தெரிந்துகொள்வோம்: 10-ஆம் படத்தில் எட்டு நாடுகளின் கொடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொன்றின் அமைப்பையும் கவனிப்போம்:

கிரீஸ் :

பண்டைக் காலத்தில் ஐரோப்பாவில் நாகரிகம் நனியோங்கி முன்னணியில் நின்றது கிரீஸ் நாடே என்று ஐரோப்பிய வரலாறு கூறுகின்றது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு ஆண்டுகட்கு முன்னரே கிரேக்கர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தனர் என்று நமது நாட்டு வரலாறும் கூறுகின்றது. இந்நாட்டுக் கொடியின் இன்றைய அமைப்பைக் கவனிப்போம் :

படத்தைக் கவனித்தால், கிரீஸ் நாட்டின் கொடி ஒன்பது குறுக்குப் பட்டைகளும், இடப்புறத்தலைப்பில் ஒரு சிலுவையும் பெற்றிருப்பதை அறியலாம். இப்பட்டைகளுள் ஐந்து நீலவண்ணம் உடையவை. அவற்றின் இடையே உள்ள நான்கும் வெண்மை நிறம் உள்ளவை. இடப்புறத் தலைப்பில் உள்ள சிலுவை போன்ற அமைப்பு வெண்மை நிறம்; அதன் அடிப்படை நீலவண்ணமுள்ளது.



படம் : 10

இத்தாலி :

பண்டைக் காலத்தில் கிரீஸ் நாட்டின் பெருமை குறையத் தொடங்கியபோது, முன்னேற்ற முற்ற மற்ெெரு ஐரோப்பிய நாடு இத்தாலி. ரோம் என்னும் பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டு இத்தாலியை ஆண்ட சீஸர், அகஸ்டஸ் போன்ற பேரரசர்கள் அக்காலத்தில் பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்டுவந்தார்கள். அதற்கு ரோம சாம்ராஜ்யம் என்ற பெயர் வழங்கி வந்தது. படத்தில் இத்தாலி நாட்டுக் கொடியின் அமைப்பைக் கவனியுங்கள். அது மூன்று பாகங்களாய் பிரிக்கப் பெற்றுள்ளது. மத்திய பாகத்தில் கேடயம் போன்றதோர் அமைப்பும், அதன் இடையில் சிலுவை போன்ற அமைப்பும் காணப்படுகின்றன. இவ்வகை அமைப்புகளை உடையதாகத் திகழ்ந்தது சிறிது காலத்துக்கு முன்பு வரையில் இந்தக் கொடி. இப்போது நடுவில் உள்ள கேடய அமைப்பும், சிலுவை அமைப்பும் நீக்கப் பெற்றுவிட்டன. இத்தாலியக் கொடி இக்காலத்தில் பச்சை, வெண்மை, சிவப்பு ஆகிய மூன்று வண்ணங்களை உடைய மூன்று பகுதிகளாகக் காட்சி அளிக்கின்றது. இவ்வண்ணங்களுள் கொடிக் கம்பத்தை யொட்டி இருப்பது பச்சை வண்ணம்; அதை அடுத்து வெண்மையும், கடைசியில் சிவப்பும் அமைக்கப் பெற்றுள்ளன.

கனடா :

கனடா என்பது வட அமெரிக்காவின் வட பாகத்தில் உள்ள நாடு என்பதை நீங்கள் அறிவீர்கள். இது பிரிட்டிஷ் பொதுநலக் குடியாட்சி அமைப்புக்குட்பட்டது. இந்நாட்டின் கொடியைப் படத்திற் பாருங்கள். இது சிவப்பு நிற அடிப்படையை உடையது. இதன் இடப்புறத் தலைப்பில் ' யூனியன் ஜாக் ' இடம் பெற்றுள்ளது. கொடியின் வலப்பாதியின் மத்தியில் கேடயம் போன்ற அமைப்புள்ள நாட்டுச் சின்னம். இக் கேடயத்தின் மேல் பாகத்தில்

சிவப்பு நிறமும், கீழ்ப்பாகத்தில் கடல் நீர் போன்ற நீல வண்ணமும், இடையில் இருண்ட நீல வண்ணமும் இடம் பெற்றுள்ளன.

துருக்கி :

துருக்கி நாட்டுக்கொடியின் அமைப்பைப் படத்தில் பாருங்கள். இதன் அடிப்படை வண்ணம் சிவப்பு. கொடித் தம்பத்தை யடுத்து இக்கொடியின் இடப் பாகத்தின் இடையில் வலப்புறத்தை நோக்கிப் பிறை உருவம் அமைக்கப்பெற்றுள்ளது. இப்பிறையின் எதிரில் ஐந்து முனைகளை உடைய நட்சத்திரம் இடம் பெற்றுள்ளது. இப்பிறையும் நட்சத்திரமும் வெண்மை நிறம் உள்ளவை.

ஆஸ்திரேலியா :

ஆஸ்திரேலியாவும் பிரிட்டிஷ் குடியாட்சிப் பொதுநல அமைப்புக்குட்பட்டது. இதன் அமைப்பைப் படத்திற் பாருங்கள். ஆஸ்திரேலியாவின் கொடி நீலநிற அடிப் படையை உடையது. அதன் இடப்புறத் தலைப்பில் 'யூனியன் ஜாக்' இடம் பெற்றுள்ளது. அதற்குக் கீழே ஆறுமுனைகள் உடைய பெரிய நட்சத்திரம் இடம் பெற்றிருக்கிறது. கொடியின் வலப்பகுதியில் ஐந்து நட்சத்திரங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் மூன்று யூனியன் ஜாக்கின் எதிரில் முக்கோணமாக உள்ளன. அவற்றுள் வலப்புறம் உள்ள நட்சத்திரத்தின் கீழே இரண்டு நட்சத்திரங்கள் தென் மேற்குத் திசையில் அமைந்திருப்பதைக் கவனியுங்கள்.

இலங்கை :

இந்நாடு நமது நாட்டைப் போலச் சமீப காலத்தில் சுதந்தரம் அடைந்துள்ளது. இதன் கொடியின் அமைப்பைப் படத்திற் கவனியுங்கள். இதன் பெருமையைக்குறிக்கத்தக்க சின்னங்களையும், வண்ணங்களையும் உடைய புதிய கொடி இந்நாட்டவரால் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

ஆதலால், இலங்கையின் ஒரு பகுதியாகிய கண்டியில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்த கண்டி மன்னர்கள் உபயோகித்து வந்த ஒரு கொடி தற்காலிகமாக இங்கு இப்போது உபயோகிக்கப்படுகிறது. மஞ்சள் வண்ணம் உள்ள அடிப்படையில் சிவப்பு வண்ணமுள்ள நீண்ட சதுரம் ஒன்று அமைக்கப்பெற்றுளது. இந்நீண்ட சதுரத்தின் இடையில் மஞ்சள் வண்ணத்தால்ஆக்கப்பெற்றதும்,வலப்பக்க முன்னங்காலில் வாளாயுதம் தாங்கி உள்ளதுமான ஒரு சிங்கம் காட்சியளிப்பதைக் கவனியுங்கள்.

பர்மா:

இலங்கையைப் போல, இந்தியாவைப்போலப் பர்மாவும் 1947-ல் சுதந்தரம் பெற்ற நாடு. அந் நாட்டின் கொடி முழுமையும் சிவப்பு நிறம் அமைந்தது. கொடியின் இடப்புறத் தலைப்பில் நீல நிறமுள்ள நீண்ட சதுரத்தில் ஐந்து முனைகளை உடைய ஒரு பெரிய நட்சத்திரமும், அம்முனைகளுக்கிடையே ஒவ்வொன்றாக ஐந்து சிறிய நட்சத்திரங்களும் அமைக்கப்பெற்றிருப்பதைக் கவனியுங்கள். இந்த நட்சத்திரங்கள் ஆறும் வெண்மை நிறம் உள்ளவை.

பாகிஸ்தான் :

இந்திய யூனியனுக்கு இருப்பது போலப் பாகிஸ்தானுக்கும் ஒரு நாட்டுக்கொடி உண்டு. அது முழுமையும் பச்சை நிறமுள்ளது. மத்தியில் இளம் பிறை இடம் பெற்றுள்ளது. இப்பிறை கொடிக்கம்பத்தை நோக்கி அமைந்திருக்கும். பிறையின் மத்தியில் ஐந்து முனைகளையுடைய ஒரு நட்சத்திரம் இடம் பெற்றிருப்பதைப் படத்திற் பாருங்கள். பிறையும், நட்சத்திரமும் வெண்ணிறமுள்ளவை.

இக்கொடிகளைப்பற்றிப் படித்தறிந்துகொள்வதோடு அமையாமல், அவற்றை நினைவில் வைத்தலும் அவசியமா

தும். இக்கொடிகள் நம் நாட்டில் பெரிய தலை நகரங்களில் அவ்வந் நாட்டின் இராயபாரிகள் தங்கியுள்ளமாளிகைகளில் பறக்க விடப்பட்டிருக்கும். அன்றியும், நம் நாட்டுத்துறை முகங்களுக்கு வரும் அந்நாடுகளின் கப்பல்களிலும் பறக்க விடப்பட்டிருக்கும். அவற்றை நீங்கள் காணும்போது அக்கொடிகள் இன்னின்ன நாடுகளுக்கு உரியவை என்று தெரிந்துகொள்ளவேண்டும்.

2. நடை ஒழுங்கு

"சித்திரமுங் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும், தயையும்,
கொடையும் பிறவிக் குணம்."

என்பது ஔவையார் அருளிய பாடல். அதன்கண் அம்மையார் என்ன கூறுகின்றார் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். மக்களின் பண்புகளுள் சில பிறவிக் குணத்தால் தோன்றுவன என்றும், சில பழக்கத்தினால் பெறப்படுவன என்றும் அம்மையார் கூறுவது சிந்திக்கத் தக்கது. "நித்தம் நடையும் நடைப்பழக்கம்" என்பதால் அறியத் தக்கது யாது? இவ்வினாவுக்கு விடை காண்பதே இப்பாடத்தின் நோக்கம்.

நீங்கள் தினந்தோறும் பள்ளிக்கூடம் தொடங்கும் போது தொழுகை மண்டபத்துக்குப் போகின்றீர்கள். எவ்வாறு போகின்றீர்கள்? ஒரு சிறிதும் ஒழுங்கின்றி ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு ஓடுகின்றீர்கள். அது ஒழுங்கின்மையைத் தெரிவிக்கிறது. இத்தகைய ஒழுங்கின்மை அருவருக்கத் தக்கது. நீங்கள் ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்புக்குச் செல்லும் பொழுதும், பள்ளியிலிருந்து விளையாட்டு வெளிக்குச் செல்லும் பொழுதும், உல்லாசப் பிரயாணங்கள் செய்யும் பொழுதும் பலர் சேர்ந்து செல்கிறீர்கள் அல்லவா? பலர்

சேர்ந்து செல்லும் பொழுது நீங்கள் அமைதியாகவும், ஒருவர் பின் ஒருவராகவும் செல்லும் முறையே நடை ஒழுங்கு எனப்படும். நீங்கள் இளம்படையினர் என்பதை மறத்தல் கூடாது. நீங்கள் வெளியே செல்லும் போது ஒருவர் பின் ஒருவராகவோ அல்லது இருவர் பின் இருவராகவோ ஒவ்வொரு குழுவின் பின்னே குழுத் தலைவன் வர, நிமிர்ந்து கம்பீரமாகச் செல்லும் நடை ஒழுங்கைக் காண்பவர் திகைக்க வேண்டும். அவ்வாறு செல்வதே உங்களுக்கும், உங்கள் பள்ளிக்கும் பெருமை யாகும்.

வாய்மொழிக் கட்டளைகள் :

மாணவர்களே, நீங்கள் குடிமைப் பயிற்சி சம்பந்தமாகப் பல விளையாட்டுகளில் ஈடுபடுகின்றீர்கள் அல்லவா? அத்தருணத்திலும், உல்லாசப் பிரயாணங்கள் செய்கின்ற தருணத்திலும், தேகப் பயிற்சி செய்யும்போதும் நீங்கள் உங்கள் குழுத் தலைவன், அல்லது வகுப்புத் தலைவன், அல்லது பள்ளி மாணவத்தலைவன் முதலியவர்களுள் ஒருவருடைய கட்டளைகளை அறிந்து நடக்கவேண்டுவது அவசியம். அக்கட்டளைகள் யாவை என்பதை அறிவோம்:

Fall in : நீங்கள் இங்குமங்கும் சிதறி இருக்கும் போது இக்கட்டளை இடப்படும். அப்போது நீங்கள் ஒரு விநாடிகூட தாமதிக்காமல் வேகமாக ஓடி, வரிசையாக நிற்கவேண்டும். எனவே இக்கட்டளைக்கு ‘வரிசையில் நில்’ என்பது பொருளாகும்.

Attention or alert : நீங்கள் வரிசையில் நிற்கும் போது சுறு சுறுப்பாக நிற்பதில்லை அல்லவா? எனவே தலைவர் இக்கட்டளைகளில் ஏதேனும் ஒன்றைச் சொல்லுவார். அப்போது நீங்கள்

உங்கள் கால்களைச் சேர வைத்துக்கொண்டு, கைகளை நேரே தொங்கவிட்டுக்கொண்டு செங்குத்தாகவும், சுறு சுறுப்பாகவும் நிற்கவேண்டும். தொங்கவிடப்பட்டுள்ள கைகளை மூடிக்கொண்டிருக்க வேண்டும். எனவே இக்கட்டளைக்குச் 'சுறுசுறுப்பாக நில்' என்பது பொருளாகும்.

Stand at ease : நீங்கள் சுறுசுறுப்பு நிலையில் இருக்கும்போது இக்கட்டளை இடப்படும். அப்போது சேர்ந்துள்ள கால்களை அகற்றி வைக்க வேண்டும். நேரே தொங்கிக்கொண்டிருக்கும் கைகளை ஒன்றின் மீதொன்று இருக்குமாறு பின் புறத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இரண்டு கால்களுக்கிடையில் ஏறத்தாழ முக்கால் அல்லது ஓரடிதூரம் இருக்கவேண்டும். இக்கட்டளைக்குச் "சிறிது தளர்ந்து நில்" என்பது பொருளாகும். இக்கட்டளையை 'Easy' என்று ஒரே சொல்லால் கூறுவதும் உண்டு.

Eyes front : "நேரே பார்" என்பது இக்கட்டளையின் பொருளாகும். சுறுசுறுப்பு நிலையில் நிற்கும் போது கண்கள் தரையை நோக்காமல் நேரே நோக்கவேண்டும்.

Eyes right : இக்கட்டளை "வலப் பக்கம் பார்" என்னும் பொருளுடையது. சுறுசுறுப்பு நிலையில் இக்கட்டளை இடப்படும். அப்போது அதே நிலையில் நின்று, முகத்தைமட்டும் வலப்பக்கம் திருப்பவேண்டும். ஒவ்வொருவன் பார்வையும் தனக்கு அடுத்தவனுக்கு அடுத்துள்ளவன் மோவாய் மீது விழவேண்டும்.

Eyes left: இக்கட்டளை மேலே கூறப்பட்டது போன்றதே. ஆனால், இடப்பக்கம் முகத்தைத் திருப்ப வேண்டும்.

Sit easy : இக்கட்டளைக்குச் "சௌகரியமாக உட்கார்" என்பது பொருள். ஆனால், வரிசையிலேயே உட்காரவேண்டும். வரிசையை விட்டு அகலக் கூடாது.

Quick march : இக்கட்டளை ஒருவர் பின் ஒருவர் ஒரே வரிசையாகவோ அல்லது இரண்டு மூன்று முதலிய வரிசைகளாகவோ நிற்கும்போது தரப்படும். அன்றியும் சுறுசுறுப்பு நிலையிலும் இருத்தல் வேண்டும். இக்கட்டளையிடப்பட்டவுடனே எல்லாரும் ஏக காலத்தில் இடக்காலை முன் வைத்து நடக்கவேண்டும். அப்போது வலக்கை முன்னே செல்லும். இக்கட்டளைக்குச் "சுறு சுறுப்பாக நடவுங்கள்" என்பது பொருள்.

Double march : இக்கட்டளை கொடுக்கப்பட்டால் நடந்து கொண்டிருப்பவர் ஓடவேண்டும். இக்கட்டளைக்கு "ஓடுங்கள்" என்பது பொருள்.

Right turn : இக்கட்டளை நீங்கள் நிற்கும் போதும், நடக்கும் போதும், ஓடும் போதும் தரப் படலாம். இதற்கு "வலப் பக்கம் திரும்பு" என்பது பொருள். இக்கட்டளையைச் சுருக்கமாக "Right" என்று கூறுவதும் உண்டு.

Left turn : இக்கட்டளை மேலே தரப்பட்டதைப் போன்றதே. ஆனால் 'இடப் பக்கம் திரும்பு' என்னும் பொருள் உடையது.

Dismiss : இக்கட்டளை 'வரிசையை விட்டுக் கலைந்து செல்லலாம்' என்று பொருள்படும்.

ஊதுகுழலை ஊதிக் கட்டளை இடுதல் :

மேலே விளக்கப்பட்ட கட்டளைகளை வாய்மொழியால் தராமல் ஊதுகுழலால் (Whistle) ஊதியும் கொடுக்கலாம்

1. — ஒரே தரம் சிறிது நீட்டி ஊதினால், கூச்சல் இல்லாமல் நில்; சுறுசுறுப்பாக நில்; என் கட்டளையை எதிர்பார்த்து நில்; கவனி என்றெல்லாம் பொருள் படும்.

2. — — — — ஒன்றன் பின் ஒன்றாகப் பல தரம் நீண்ட ஒலி எழுப்பினால் "முன்னேறி நில்" "தொலைவில் போய் நில்" "விரிந்து நில்" என்றெல்லாம் பொருள் படும்.

3. - — - — - இவ்வாறு குறுகிய ஒலியும் நீண்ட ஒலியும் ஒன்றன் பின் ஒன்றாக மாறி மாறி எழுப்பினால் "ஜாக்கிரதை", "உங்கள் கடமைகளைக் கவனியுங்கள்" என்று பொருள்படும்.

4. - - - - பல முறை அழுத்தமான குறுகிய ஒலிகளை எழுப்பினால், "ஒன்று கூடுங்கள்", "வரிசையில் வந்து நில்லுங்கள்", "நெருங்கி நில்லுங்கள்" என்று பொருள்படும்.

5. - - - — இவ்வாறு மூன்று தடவை குறுகிய ஓசையையும், ஒரு தரம் நெடிய ஓசையையும் எழுப்பினால் தலைவர்கள் வந்து கூடவேண்டும்.

கை அல்லது கொடியால் சைகை காட்டல்:

1. முகத்திற்கு நேரே கையை அல்லது கொடியை நிறுத்திப் பக்கத்துக்குப் பக்கம் அசைத்தால் "இருக்கும் நிலையில் இருங்கள்", "பரவாயில்லை", "ஒன்றுமில்லை" என்று பொருள்படும்.

2. கையை அல்லது கொடியைத் தலைக்கு மேலே நேரே தூக்கி நிறுத்தினால், "ஓடாதே," "நில்" என்று பொருள்படும்.

3. கை விரல்களை மூடினாலும், கொடியை மேலும் கீழுமாக அசைத்தாலும், "ஓடுங்கள்" என்று பொருள் படும்.

4. கையை அல்லது கொடியைத் தூக்கி நிறுத்திப் பக்கத்துக்குப் பக்கம் மிக நிதானமாக அசைத்துக் காட்டினால், "விரிந்து நில்லுங்கள்," "பரவி நில்லுங்கள்" என்று பொருள்படும்.

5. கையை அல்லது கொடியை மேலே தூக்கி நிறுத்தி, பக்கத்துக்குப் பக்கம் துரிதமாக அசைத்தால் "நெருங்கி நில்லுங்கள்," "ஒன்று சேருங்கள்," "இங்கே வாருங்கள்" என்று பொருள்படும்.

6. கையையோ அல்லது கொடியையோ ஏதேனும் ஒரு திசையை நோக்கிக் காட்டினால், "அந்தத் திசை நோக்கிச் செல்லுங்கள்" என்பது பொருள்.

மேலே கூறப்பட்ட வாய்மொழிக் கட்டளைகள், ஊது குழலால் அளிக்கப்பெறும் கட்டளைகள், கையால் அல்லது கொடியால் காட்டப்படும் கட்டளைகள் ஆகியவற்றை எல்லாரும் அறிந்திருந்தால்தான் அவை பயன்படும். ஆதலால் அவற்றை நன்கு பழக்கிக்கொள்ளுங்கள்.

3. முதலுதவி

சிறு காயங்களுக்கும், எலும்பு முறிவுகளுக்கும் என்னென்ன முதலுதவிகள் அளிக்க வேண்டும் என்று முன் வகுப்புகளில் நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிறீர்கள். இப் பாடத்தில் மேலும் சில ஆபத்துகளுக்குச் செய்ய வேண்டிய முதலுதவிகளைப் பற்றிப் படிப்போம்:

தீப்பற்றிக் கொள்ளுதல் :

வீடுகளில் தீப் பிடித்துக்கொண்டால் நாம் செய்ய வேண்டிய கடமைகள் இரண்டு உண்டு. தீப்பிடித்துக் கொண்ட வீட்டினுள் அகப்பட்டுக்கொண்டவரை வெளியேற்றுவது முதல் கடமை. நெருப்புப் பிடித்துக்கொண்டவர்களுக்கு முதலுதவி அளித்தல் இரண்டாவது கடமை. முதலில் வீடுகளில் தீப்பிடித்துக்கொண்டால் என்ன செய்வது என்பதைக் கவனிப்போம்:

வீடுகளில் நெருப்புப் பிடித்தால் என்ன செய்வது ?

1. இரவில் நெருப்புப் பற்றிக் கொண்டால் முதலில் அவ்வீட்டினுள் இருப்பவரை எழுப்பி எச்சரிக்கவேண்டும்.

2. தீப்பற்றிக் கொண்ட வீட்டைச் சுற்றியுள்ள வீடுகளில் இருப்பவரையும் எழுப்பி எச்சரிக்கவேண்டும். அவ்வீடுகளின் மீது எளிதில் தீ பரவாதபடி அவற்றின் கூரைகளின் மீது தண்ணீரை ஊற்றச் சொல்லவேண்டும்.

3. தீப்பற்றியதைக் கண்டவுடனே அருகில் உள்ள போலீஸ் நிலையத்துக்கோ, அல்லது நெருப்பணைக்கும் இயந்திர நிலயத்துக்கோ ஓடிச் செய்தியைத் தெரிவிக்க வேண்டும்.

4. தீப்பிடித்த வீடு மாடி வீடாக இருந்தால், மேலே உள்ளவரைக்கீழே இறக்க ஏணிகளையும், ஏணிகள்சார்த்த முடியாத நிலயில், மேலே இருப்பவரைக் கீழே குதிக்கச் செய்து அவர்களைத் தாங்கிப் பிடிக்கப் பெரிய கித்தான்களையும் விரைவில் சேகரிக்க வேண்டும்.

5. நெருப்பணைக்கும் படை வந்தால், நெருப்புப் பற்றிய இடத்தைச் சூழ்ந்துள்ள மக்களை அப்புறப்படுத்தி அவர்கள் மீண்டும்அங்குச்செல்லாமல்தடுப்பது அவசியம். இப்படித் தடுப்பதற்குக் கையாள வேண்டிய முறை ஒன்றுண்டு. நீங்கள் தீயணைக்கும் இயந்திரத்தின்இருபுறங்களிலும் வரிசையாக நின்று ஒருவர் கை அடுத்தவர் இடுப்பைச் சுற்றி இருக்குமாறு பற்றிக் கொண்டு, தலையைக் கூட்டத்தின் பக்கம் சாய்த்து, அவர்களை எட்டிப்போகும்படி எச்சரிக்க வேண்டும்.

6. தீப்பற்றிய வீட்டில் மயக்கமுற்றுக் கிடப்பவரையோ அல்லது நெருப்புப் பற்றிக்கொண்டவரையோ காப்பாற்ற அவ்வீட்டினுள் செல்ல நேர்ந்தால், நாம் கையாள வேண்டியமுறைகள் சில உண்டு. பெரியகம்பளத்துணியை

நனைத்து அதில் துவாரம் செய்து தலையை நுழைத்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டு போனால் நெருப்பு எளிதில்



படம் 11 :


நம்மை அணுகாது. கம்பளத் துணி கிடைக்காவிடில் நனைத்த துணியை மூக்கின்மீது போட்டுக்கொண்டு குனிந்து கொண்டோ அல்லது மண்டியிட்டு நகர்ந்து கொண்டோ போகவேண்டும்.



படம் 12 :

7. தீப்பற்றிய வீட்டினுள் சிக்கி மயக்கமுற்றிருப்பவரை 12-ஆம் படத்தில் காட்டியுள்ளபடி தோளின்மீது சுமந்து கொண்டோ அல்லது 11-ஆம் படத்தில் உள்ள படி மயக்கமுற்றோரின் தோளில் கயிற்றைப் பிணித்து அவர் மார்பு மேலிருக்கும்படி படுக்க வைத்துக் கயிற்றை நம் கழுத்தில்மாட்டி இழுத்துக்கொண்டோ வரலாம்.

8. தீப்பற்றியவர்களை வைத்திய சாலைக்கு அல்லது டாக்டர் வீட்டுக்குக் கொண்டுபோக இருவர் சேர்ந்து, அடுத்த பக்கத்தில் காட்டியுள்ளபடி முக்கைப் பீடமோ அல்லது நாற்கைப் பீடமோ அமைத்துத் தூக்கிச்செல்லலாம்.



படம் 13:



9. டோலிகளைக் கொண்டும் காயம்பட்டவரைத் தூக்கிச் செல்லலாம். கதவுகளின் மீது வைக்கோலையோ அல்லது துணியையோ பரப்பி டோலியாக உபயோகிக்கலாம். இரண்டு மேற் சட்டைகளின் கைகளில் கழிகளை மாட்டி டோலியாக அமைத்துக் கொள்ளலாம். எவ்வகையாகத் தூக்கிச் சென்றாலும் நோயாளியின் வலி அதிகரிக்காமல் கவனித்துக்கொள்ள வேண்டும்.

படம் 14: நாற்கை பீடம்

தீப்பிடித்தவருக்குச் செய்யவேண்டிய முதலுதவி :

1. ஒருவரைத் தீப்பிடிப்பதென்றால் முதலில் அவர் உடையில்தான் தீப் பிடிக்கும். அவரை நிற்கவிடாமல் உடனே படுக்கவைக்க வேண்டும். தீப்பற்றிக் கொண்டவர் நின்றாலும், நடந்தாலும், ஓடினாலும் தீ மேல் நோக்கிப் பரவும். கீழே படுக்க வைக்கப்பட்டவரை ஒரு கம்பளத் துணியில் சுருட்டித் தரையின் மீது மெல்ல உருட்ட



படம் 15 : படம் 16

வேண்டும். கம்பளி கிடைக்காவிட்டால் கோணியை உபயோகிக்கலாம். கம்பளியால் சுருட்டி உருட்டியவுடனே தீ அணைந்து விடும். உடனே அவரை வைத்தியசாலைக்கு அல்லது டாக்டர் வீட்டுக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றும் முறை :

நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றுவது எளிதன்று. இதற்குச் சில பழக்கங்கள் அவசியம். அவற்றுள் நீந்தத் தெரியாதவர்கள் கையாள வேண்டியவை சில ; நீந்தத் தெரியாதவர்கள் ஏறத்தாழ இருபது அங்குல நீளமுள்ள ஒரு பிரம்பின் ஒரு நுனியில் ஒன்றரை அல்லது இரண்டு பவுண்டு பளுவுள்ள குண்டைக் கட்டிப் பிடித்துக் கொள்ள வேண்டும். மற்றொரு முனையில் மிக நீண்ட சணல் சரட்டைக் கட்டி அதன் முனையை மற்றொரு கை

யில் பிடித்துக் கொள்ள வேண்டும். ஏறத்தாழ இருபது கஜ தூரத்தில் உள்ள ஓர் உருட்சியான கல்லின் மீது குண்டை வீசவேண்டும். உங்களில் யார் அக்கல்லின் வெகு அருகில் வீசுகிறார்களோ அவர்களே தேர்ச்சியடைந்தவர்கள். இதில் உருட்சியான கல் நீரில் மூழ்கியவரின் தலையென்று கருதவேண்டும். இவ்வாறே உயிர்காப்பாற்றி என்னும் மிதக்கும் கருவியையும் ஒரு குறியை நோக்கி எறிந்து பழகவேண்டும்.

நீந்தத் தெரிந்தவர் நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றச் சில முறைகளைக் கையாள வேண்டும். நீரில் விழுந்தவர் மூன்று முறை நீர் மட்டத்துக்கு வருவர் என்று பலர் சொல்ல நாம் கேட்கிறோம். ஆனால் அது உண்மையன்று. நீரில் விழுந்தவரை யாராவது உடனே காப்பாற்று விட்டால் இறப்பது நிச்சயம். நீரில் விழுந்து தவிக்கின்றவர் கையில் எது கிடைத்தாலும் பலமாகப் பற்றிக் கொள்வர். ஆதலால் அவரைக் காப்பாற்றச் செல்பவர் அவர் பிடியில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. ஒரு வேளை அகப்பட்டுக் கொண்டால் உடனே விடுவித்துக் கொள்ள வேண்டும். நீந்தத் தெரிந்தவர் தண்ணீரில் மூழ்கியவரின் பின்புறமிருந்து அவருடைய முழங்கையையோ அல்லது கழுத்தின் பின்புறத்தையோ அல்லது தலைமயிரையோ அல்லது கையால் மார்பைச் சுற்றியோ பிடித்து இழுத்து வர வேண்டும்.

நீரில் மூழ்கியவருக்கு முதலுதவி :

நீரில் மூழ்கியவர் நீரினின்றும் எடுக்கப்பட்டுவிட்டதனாலேயே அவர் பிழைத்து விட்டார் என்று எண்ணிவிடக் கூடாது. நீரில் மூழ்கியவர் தண்ணீரைக் குடித்துவிட்டிருப்பார். அது நுரையீரலில் நுழைந்து தங்கிவிடும். அதனால் மூச்சு விடுவது தடைப்படும். மூச்சு விடாமல் நீண்ட நேரம் இருந்தால் இருதயம் வேலை செய்யாது.

அப்போது இரத்த ஓட்டம் நின்றுவிடும். இரத்த ஓட்டம் நின்றுவிட்டால் மரணம் சம்பவிப்பது நிச்சயம்.

ஆதலால் முதலில் நுரையீரலில் தங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற வேண்டும். அதற்கு முதலில் வாயில் சிக்கி இருக்கக் கூடிய மண், பாசி முதலியவற்றை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்த முடியாதபடி பற்கள் கிட்டிக்கொண்டிருந்தால், வாயை அழுத்தித் திறந்து பற்களுக்கு இடையில் ஒரு மரச்சக்கையை வைக்க வேண்டும். பிறகு நீரில் மூழ்கியவரின் உடைகளை முதலில் தளர்த்திவிட்டுத் தலை தொங்கும் நிலையில் இருக்கும்படி பிடித்துக்கொள்ள வேண்டும். கூடுமானால் முன்னும் பின்னும் அசைத்தல் நலம். அப்போது உள்ளிருக்கும் நீர் வெளிப்படும். நீர் வெளிப்பட்ட பிறகு, மூச்சு வருமானால் நோயாளியைக் கம்பளத்தால் போர்த்திவிட்டு ஓய்வு எடுக்கச் செய்யவேண்டும். உள்ளிருந்த நீர் வெளிப்பட்ட பிறகும் மூச்சு வரவில்லையானால், செயற்கைச் சுவாச முறையைக் கையாளவேண்டும்.



படம் 17 : ஷாபர் செயற்கைச் சுவாசமுறை

செயற்கைச் சுவாச முறைகள் பல உண்டு. அவற்றுள் மிகவும் எளியமுறை ஷாபர் என்பர் கண்டுபிடித்த முறையே யாகும். நோயாளியைக் கவிழ்ந்து படுக்கச் செய்து,

அவர் உடலினுள்ளிருந்து காற்றை வெளியேற்றுவதும், உட்புகச் செய்வதுமே இம்முறையாம். கவிழ்ந்திருக்குமாறு நோயாளியைப் படுக்கச் செய்து, முகம் பக்கவாட்டமாக இருக்கும்படி திருப்பி விட்டு 17 ஆம் படத்தில் உள்ளபடி கைகளை நீட்டிவைக்க வேண்டும். முதல் உதவி அளிப்பவர் நோயாளியின் பக்கத்தில் படத்தில் காட்டியுள்ளபடி



படம் 18: செயற்கைச் சுவாசமுறை.

அமர வேண்டும். நோயாளியின் இடுப்புக்கு மேலும் முதுகின் கீழ்ப்பாகத்திலும் இரண்டு கைகளையும் விரல்கள் விலாப்பக்கம் இருக்கும்படி வைத்து, கைகளின்மீது முழு உடலின் பாரமும் தாங்கும்படி ஊன்றிக் கொண்டு மண்டியிட்டு எழுந்து, மீண்டும் உட்காரவேண்டும். உட்காரும் போதும் கைகளை எடுத்தல் கூடாது. இவ்வாறு நிமிஷத்துக்குப் பன்னிரண்டு முதல் பதினாறு தடவை வரையில் பத்து நிமிஷ நேரம் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதால் புப்புசங்கள் சுருங்கி விரியும். இதனால் நோயாளி சுவாசிக்கத் தொடங்குவார். சுவாசிக்கத் தொடங்கியவுடனே உடம்பைக் கம்பளியால் போர்த்தவேண்டும். வெந்நீர் நிரப்பிய புட்டிகளைத் தொடைகளின் இடையிலும், அக்குளிலும் வைக்கவேண்டும். சூடான காப்பி கொடுக்கலாம். எக்காரணம் பற்றியும் மயக்கந்தரக்கூடிய பானங்களைத் தரக்கூடாது.

மின்சார அதிர்ச்சிக்கு முதலுதவி :

உலகில் உள்ள பொருள்களுள் மின்சாரம் மிகச்சக்தி வாய்ந்தது. அச்சக்தி வெளிப்படும் இடத்தில் நமது கை படுமானால் உடனே உடலில் உள்ள நரம்புகள் எல்லாம் அதிர்ச்சியடையும். வெளிப்படும் மின்சாரத்தின் சக்தி குறைந்ததாக இருந்தால் அந்த இடத்தில் கையை வைக்க நேர்ந்தவர் தம் கையை எடுத்துவிட முடியும். ஆயினும் அதிர்ச்சி மட்டும் ஏற்படுவது நிச்சயம். மின் சாரத்தின் சக்தியின்அளவு மிக்குள்ள இடத்தில் தவறி எவரேனும் கையை வைத்துவிட்டால் கையை மீண்டும் வாங்கமுடியாது. அந்நிலையில் உள்ளவருக்கு அருகில் உள்ள வர் உதவியளிக்க முற்பட்டு, ஆபத்தில் சிக்கியுள்ளவரின் கையைப் பற்றினால், அவரும் அகப்பட்டுக்கொள்வார். ஆபத்துக்குட்பட்டு மரணமடைந்தவனைத் தொட்டா லும் அதே கதிதான் நேரும். அதற்குக் காரணம் மின் சார சக்தி ஒரு மனிதன் உடலின் வழியே பாவி அவனைத் தொடும் பிறர் உடலிலும் பாயும். ஆதலால் மின்சாரத்தால் பற்றப்பட்டவர்களை அவசரப்பட்டுத் தொடவே கூடாது. அப்படித் தொடவேண்டிய அவசியம் ஏற்பட்டால், தொடுகின்றவர் காலில் ரப்பர் பூட்சும் கைகளுக்கு ரப்பர் கை உறைகளும் போட்டுக்கொள்ள வேண்டும். அல்லது நன்றாகக் காய்ந்த, சிறிதும் ஈரமற்ற மரப்பலகையின் மீது நின்றுகொண்டுதான் தொடவேண்டும். இல்லாவிடில் எத்தனைபேர் தொட்டாலும் அத்தனைபேரும் சிக்குண்டு மரணமடைய வேண்டியதுதான்.

மின்சார அதிர்ச்சி பெற்றவருக்கு அளிக்கும் முத லுதவி தீப்பற்றியவருக்குத் தருவது போன்றதேயாம். அதாவது, சூடான காப்பி உள்ளுக்குக் கொடுத்துக் கம்பளப் போர்வையால் நன்றாக மூடவேண்டும்.

கட்டுத்தறியிலிருந்து அறுத்துக்கொண்டு ஓடும் மிருகங்களை எவ்வாறு நிறுத்துவது ?

சில சமயங்களில் பசு, எருது, எருமை, குதிரை முதலிய மிருகங்கள் கட்டுத் தறிகளிலிருந்து கயிற்றை அறுத்துக்கொண்டு பைத்தியங்கொண்ட மாதிரி ஓடுவது உண்டு. இவற்றால் குழந்தைகள், பெண்கள், வயோதிகர்கள் முதலியவர்களுக்குத் துன்பம் ஏற்படுவதுண்டு. அத்தகைய மிருகங்களை நிறுத்தவேண்டுமானல், செய்யவேண்டுவது யாது? "கோம்புளதற் கைந்து, குதிரைக்குப் பத்து முழம்," என்னும் பொன்மொழியை நாம் அறிவோம். ஆதலால், இங்ஙனம் ஓடும் மிருகங்களை அவற்றின் எதிரிற் சென்று மடக்குவது தவறு. ஏனெனில், மாடாக இருந்தால் முட்டிவிடும்; குதிரையாக இருந்தால் கடித்துவிடும்.

முன்புறம் செல்லாமல்பின்புறம் செல்வதும் நன்றன்று. ஏனெனில், குதிரை வெகுவேகமாக உதைக்குந் தன்மை உடையது; மாடும் உதைக்கக்கூடியதே. ஆதலால் நாம் செய்யத்தக்கதுயாதெனின் அவ்வாறு ஓடும் மிருகங்களின் பக்கத்திலேயே ஓடி, அவற்றின் கயிறுகளைப் பற்றிநிறுத்துவதேயாம். கயிற்றைப் பற்றிக்கொண்ட பின், அவற்றின் பலம் நம் பலத்தை விட அதிகமாதலால், நேரே இழுத்து நிறுத்த முயலாமல், பக்க வசமாக இழுத்து நிறுத்த வேண்டும். ஓடும் வழியில் வீடுகளிருந்தால் அவற்றின் பக்கம் மிருகங்களைத் திருப்புவது நலம். அப்படி நிறுத்தும் போது அவை ஒருவேளை எதிர்க்க முயன்றாலும் உடனே அவற்றின் பக்கத்தில் வேகமாக நெருங்கி விடவேண்டும்.

வெறிநாய் துரத்தினல் என்ன செய்வது ?

நாய் வெறி கொண்டு மனிதரைக் கடிக்கத் தொடங்கி விட்டால் அதன் வழியில் எதிர்ப்படும் எல்லாரையும் கடிப்பது நிச்சயம். வெறிகொண்ட நாயை அதன் விகாரத் தோற்றத்தாலும், அது நம்மை நோக்கி ஓடி வருவதாலும் எளிதில் அறிந்துகொள்ளலாம். அங்ஙனம் ஓடிவரும்

நாயைக் கண்டு பயந்து நாம் ஓடத் தொடங்குவது கூடாது. ஓடுவோமானால், அது நிச்சயமாக நம்மைக்கடித்து விடும். ஆதலால் மனத்துணிவோடு அதை எதிர்த்து நிற்பதே அறிவுடைமையாம். அவ்வாறு எதிர்த்து நிற்பவர் ஒரு விநாடிகூடத் தாமதியாமல் தமது மேல்சட்டையையோ, அங்கவஸ்திரத்தையோ கையில் சுற்றிக்கொண்டு நாய் நம் அருகில் வந்தவுடனே, அதன் முகத்துக்கு நேரே கையை நீட்டினால், அது வாயைப் பிளந்து கொண்டு அத் துணியைக் கௌவும். அப்போது முழுபலத்தோடு அதன் வாயின் கீழ்ப்புறம் காற்பந்து உதைப்பது போல உதைக்க வேண்டும். உதை பட்டவுடனே சில நாய்கள் திரும்பி ஓடிவிடும். சில நாய்கள் மீண்டும் கடிக்க வரும். நமக்குத் தக்க உதவி கிடைக்கும் வரை அது எத்தனை முறை கடிக்க வந்தாலும் இம்முறையையே கையாள வேண்டும். காற்பந்து உதைக்கும் பழக்கமுள்ள உங்களுக்கு இது பெரிதல்ல. ஆனால் மனத்துணிவுதான் வேண்டும். மனத் துணிவு இல்லாவிடில் நாயாற்கடியுண்டு துன்பமடைய வேண்டியதுதான். நாய் கடித்தால் காலம் தாழ்த்தாமல் வைத்தியசாலைக்குச் சென்று 'இஞ்செக்ஷன்' செய்து கொள்ள வேண்டும்.

4. உற்றுநோக்கலும் சுவடு கண்டுபிடித்தலும்

"ஊன்றிப் பார்த்தல், ஊகித்தறிதல், அறிந்தவற்றை நினைவில் வைத்தல் ஆகியவற்றைக் காட்டிலும் சிறந்த கல்வி எதுவுமில்லை," என்பன ஓர் ஆங்கில அறிஞரின் பொன்மொழிகள். இறைவர் நமக்குக் கண், காது, மூக்கு முதலிய ஐம்பொறிகளை அருளியுள்ளார். இவற்றால் அறியப்படும் காணல், கேட்டல், மோத்தல் முதலிய ஐம்புலன்களை மக்கள் மேனிலை யெய்துவதற்கும், இன்பமாக வாழ்வதற்கும் பெருந்துணை புரிகின்றன. ஆனால் எல்லா மக்களிடத்தும் இப்புலனறிவு ஒரே அளவினதாய் இருப்பதில்லை. ஒவ்வொருவரும் தத்தம் பொறிகட்கு அளிக்கும் பயிற்சிக்கு ஏற்றவாறுதான் அவரவர் புலனறிவு காணப்படும். ஆதலால், நாம் நம்முடைய பொறிகட்குத் தக்க பயிற்சி அளித்தல் வேண்டும். ஐம்பொறிகளுள் கட்பொறியே தலைமையானது. அதற்கு அடுத்தபடி காது. ஆதலால், இவ்விரண்டு பொறிகட்கும் தக்க பயிற்சி அளிக்க வேண்டும். இங்ஙனம் பயிற்சி அளிக்காதவர் கண்ணிருந்தும் குருடராகவும், காதிருந்தும் செவிடராகவும் இருக்கக் காண்கிறோம். இவ்வுண்மையை விளக்க ஓர் எடுத்துக்காட்டைக் கவனிப்போம்:

ஒரு நாள் நான் எங்கள் பள்ளியில் ஐந்தாம் பாரமாணவர்கட்கு ஆங்கிலம் கற்பித்துக் கொண்டிருந்தேன். பாடத்தில் 'கேடயம்' என்னும் சொல்லைக் குறிக்கும் 'ஷீல்டு' (Shield) என்னும் ஆங்கிலச் சொல் இடம் பெற்றிருந்தது. "ஷீல்டை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?" என்று கேட்டேன். "பார்த்திருக்கிறோம்," என்ற பதில் எல்லார் வாயினின்றும் எழுந்தது. "எங்கே ?" என்று வினவினேன். "மியூஸியத்தில்," என்ற பதில் கிடைத்தது. உடனே, "நீங்கள் அனைவரும் கண்ணுள்ள குருடர்கள்," என்று

நான் கூறியபோது, அவர்கள் திகைத்தார்கள். தாங்கள் சரியான விடை கூறியதாக எண்ணி மகிழ்ந்திருந்த அவர்களுடைய முகங்கள் மாறிவிட்டன. "நீங்கள் இருக்கும் இந்த அறையின் சுவர்களைக் கவனியுங்கள்," என்றேன். எல்லாரும் சுற்றிப்பார்த்தனர். ஒரு சுவரில் அந்த வகுப்பில் அதற்கு முன்னாண்டில் படித்த மாணவர்கள் உதைபந்து போட்டியில் வெற்றி பெற்று, அதற்குப் பரிசாகப் பெற்ற 'ஷீல்ட்' மாட்டப்பட்டிருந்ததைக் கண்டார்கள். அப்போதுதான் நான் அவர்களைக் கண்ணுள்ள குருடர்கள் என்று கூறியதன் உண்மையை உணர்ந்தார்கள். இங்ஙனம் மாணவர்களுள் பெரும்பாலார் தாங்கள் செல்லும் இடங்களில் இருக்கும் பொருள்களைக் காணாமலும், அடிக்கடி கூறப்படும் விஷயங்களைக் கேளாமலும் குருடர்போலவும், செவிடர் போலவும் காலம் கழிப்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் கூறலாம்.

ஒரு நாள் நானும், என் நண்பர்கள் சுந்தரம், இராசா என்னும் இருவரும் செங்கற்பட்டுக்கு மோட்டார் பஸ்ஸில் போய்க்கொண்டிருந்தோம். எங்கள் எதிரில் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர், பால் கறக்கும் தொழில் செய்பவர் என்றும், பல்லாவரம் போகிறார் என்றும் நண்பர் சுந்தரம் எங்களிடம் ஆங்கிலத்திற் கூறினார். நான் அதை ஆமோதித்தேன். நண்பர் இராசா, "அவர் உங்களுக்குத் தெரிந்தவரா?" என்றார். சுந்தரம் 'இல்லை' என்றார். 'பிறகு நீ ஜோஸ்யம் சொல்கிறாயா?" என்றார் இராசா. "நான் ஜோஸ்யம் கூறவில்லை. ஆனால் நான் கூறுவதுதான் உண்மை," என்றார் சுந்தரம். உடனே இருவரும் தலைக்கு ஒரு ரூபாய் பந்தயம் வைக்க முற்பட்டனர். நான் மத்தியஸ்தன்; என்னிடம் இரண்டு ரூபாய்களும் தரப்பட்டன. உடனே நான் எதிரில் அமர்ந்திருந்தவரை நோக்கி, "தாங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?" என்றேன். எங்களுக்கிடையே ஆங்கிலத்தில் நடைபெற்ற விவாதத்

தைக் கவனித்துக்கொண்டு வந்த அவர், சிறிதும் தயங்காமல், "பால் கறப்பது என் தொழில்," என்று பதில் கூறினார். அடுத்தபடி, "இப்போது தாங்கள் எங்குச் செல்கிறீர்கள்"? என்று கேட்டேன். அவர், "பல்லாவரம் போகிறேன்," என்று பதிலளித்தார். உடனே நான் "சுந்தரம் பந்தயத்தில் வெற்றி பெற்றார்," என்று முடிவு கூறி, அவரிடம் இரண்டு ரூபாயைக் கொடுத்துவிட்டேன்.

பந்தயத்தில் தோல்வியுற்ற நண்பர் இராசா என்னை நோக்கி, "நீரும் சுந்தரம் கூறியது உண்மைதான்," என்று கூறினீர்களே, அதற்குக் காரணம் என்ன?" என்று வினவினார். "எதிரில் அமர்ந்திருப்பவருடைய கைப் பெருவிரல்கள் இரண்டையும் கவனித்துப் பாரும். ஒவ்வொரு விரலின் முட்டியிலும் இரண்டு காய்ப்புகள் இருப்பதைக் கவனியும். இத்தகைய காய்ப்புகள் பால் கறப்பவர்கள் பெருவிரல்களிற் காணப்படும். ஆதலால், அவர் பால் கறக்கும் தொழில் செய்பவர் என்று அறிந்தோம். இரண்டாவதாக இன்று வெள்ளிக்கிழமையாதலின் பல்லாவரத்தில் மாட்டுச் சந்தை கூடுவது வழக்கம். பால் கறக்கும் தொழிலினரான அவர் அங்குதான் செல்ல வேண்டும் என்றும் யூகித்தோம். மூன்றாவதாக அவர் இடுப்பைக்கவனியும். பணத்தைப் பாதுகாப்பதற்காகப் 'பெல்ட்' போன்ற அரைப்பையைக் கட்டிக்கொண்டிருக்கின்றார். மாட்டுச் சந்தைக்கு நிரம்பப் பணம் கொண்டு செல்பவர் இத்தகைய அரைப் பையைக் கட்டிக்கொண்டிருப்பர். இக்காரணத்தாலும் அவர் பல்லாவரத்திற் கூடும் மாட்டுச் சந்தைக்குப் போகின்றார் என்று முடிவு கட்டினேம். நண்பரே, இவை ஊன்றி நோக்கும் வழக்கம் உள்ள எவரும் எளிதில் அறிந்துகொள்ளத் தக்கவையே; இதில் வியத்தற்குரியது ஒன்றுமில்லையே," என்று விஷயத்தை விளக்கினேன். நண்பர் இராசா இவற்றைக் கேட்டு மகிழ்ந்தாரெனினும் ஒரு ரூபாய் தோற்றுவிட்ட விஷயத்தில் மட்டும் அவர் மனம் சற்றுத் துன்புற்றதென்பதை

நாங்கள் அறிந்தோம்; பிறகு அதைத் திருப்பிக் கொடுத்து விட்டோம்.

இவ்வாறு புலன்களின் நன்னறிவும், ஊன்றிப் பார்க்கும் வழக்கமும், ஊகித்தறியும் திறமையும் உடையவர்கள் தங்களுக்கும், பிறர்க்கும் பயனுள்ளவராவார்கள். இத்தகைய திறமை வாய்ந்தவர்கள் புரிந்த அருஞ்செயல்கள் வியத்தற்குரியன. அவற்றுள் சிலவற்றைக் கவனிப்போம்:

அரேபியாவில் ஒரு பிரபுவினிடம் ஓர் அடிமை இருந்தான். அவனுக்கு ஒரு கண் குருடு. ஆயினும், அவன் ஊன்றிப் பார்த்து ஊகித்தறியும் திறமை உள்ளவன். ஒரு நாள் அவனும் அவன் எஜமானரும் ஓர் ஊருக்குப் பிரயாணம் செய்தார்கள். இடைவழியில் சூரியன் மறையும் நேரமாகி விட்டது. அப்போது அவ்வடிமை பிரபுவை நோக்கி, "நாம் சற்று விரைவாக நடந்தால் நமக்கு மூன்றல்லது நான்கு மைல் தூரத்தில் ஒரு கொழுத்த கழுதையை ஓட்டிக்கொண்டு செல்லும் இரண்டு பிரயாணிகளோடு சேர்ந்து கொள்ளலாம்,' என்று கூறினன். இரண்டு கண்களையும், கூரிய பார்வையையும் பெற்றிருந்த அப்பிரபுவின் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் ஒருவரும் காணப்படவில்லை. அப்படி யிருக்க, ஒரு கண் பொட்டையாக இருந்த தமது அடிமை, தங்களுக்கு முன் மூன்று மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்த பிரயாணிகளையும் கழுதையையும் எங்ஙனம் கண்டறிந்து கொண்டான் என்பது பிரபுவுக்கு வியப்பாக இருந்தது. ஆயினும் உண்மையை அறிந்துகொள்ள விழைந்த அவர், தமது அடிமையின் விருப்பப்படியே விரைவாக நடந்தார். இருள் சூழ்வதற்குள் தமது அடிமை கூறியபடி தங்களுக்கு முன்னே சென்றுகொண்டிருந்த பிரயாணிகள் கழுதையுடன் ஓரிடத்தில் தங்கி இருக்கக் கண்டார்; அளவற்ற வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டார். தம் அடிமை அவர்களைப்பற்றி எவ்வாறு அறிந்து கொண்டான் என்பதைத் தெரிந்து கொள்ள விழைந்தார்.

அப்போது அவ்வடிமை தமது எஜமானருக்குக் கீழ்வருமாறு கூறினான்: "நாம் நடந்து வரும்போது பாதையைக் கூர்ந்து கவனித்துக்கொண்டு வந்தேன். ஓரிடத்தில் ஒரு கழுதையின் காற்சுவடுகள் பலவற்றைக் கண்டேன். அவை யாவும் ஓரே அளவினவாக இருந்தபடியால் அவை எல்லாம் ஓரே கழுதையின் சுவடுகளே என நிச்சயித்தேன். அன்றியும், அவ்விடத்தில் அக்கழுதை புரண்டிருந்ததைக் கண்டேன். புரண்ட இடத்தில் மணல் மிகுதியாய் பறிக்கப்பட்டிருந்தபடியால், அக்கழுதை உடல்வன்மை உள்ளதாக இருத்தல் வேண்டும் என நிச்சயித்தேன். மேலும் அந்த இடத்தில் மனிதர் இருவர் காற் சுவடுகளே இருந்தமையால், அக்கழுதையை ஓட்டிக்கொண்டு சென்றவர் இருவர் என்பதை நிச்சயித்தேன். காற்று மிகுதியாக வீசும் இப்பகுதியில் அச்சுவடுகள் மறையாமல் இருந்தமையால், அவர்கள் நீண்ட நேரத்துக்குமுன் செல்லவில்லை யென்றும், சிறிது நேரத்துக்கு முன்புதான் சென்றிருக்க வேண்டுமென்றும் ஊகித்து மூன்று அல்லது நான்கு மைல் தொலைவில் அவர்கள் சென்றுகொண்டிருக்க வேண்டும் என நிச்சயித்தேன்," என்று கூறி முடித்தான். இவற்றைக் கேட்ட அவனது எஜமானர் அவனுடைய ஊன்றி நோக்கும் திறமையையும், ஊகித்தறியும் நுட்பமதியினையும் பெரிதும் பாராட்டி மன மகிழ்ந்தார்.

இதுவன்றி ஊன்றிப்பார்த்து ஊகித்துணரும் வன்மைக்கு எடுத்துக் காட்டாக மற்றொரு நிகழ்ச்சியைக் கவனிப்போம்: ஐரோப்பிய நாடுகளிற் பிரசித்தியுற்று விளங்கிய திருடர் தலைவன் ஒருவனைப் பிடிப்பதற்காகப் பிரெஞ்சுத் துப்பறியும் நிபுணரான வாலண்டைன் என்பவர், அத்திருடன் இங்கிலாந்தில் இருப்பதாக அறிந்து அங்குச் சென்றார். ஏற்கெனவே அங்குச் சென்றிருந்த அத்திருடன், ஒருநாள் ஒரு பாதிரியாரிடம் மிக்க விலை உயர்ந்த ஒரு பொருள் இருந்ததை அறிந்து, அதை அபகரிக்க எண்ணித் தானும் பாதிரியைப்போல வேடம் பூண்டு

அப்பாதிரியாருடன் உரையாடிக்கொண்டே சென்றான். கூரிய அறிவு படைத்த அவ்வுண்மையான பாதிரி, தம்மைப்போல் வேடமணிந் திருந்தவன் திருடன் என்பதையும், அவனை வாலண்டைன் தேடி அலைந்துகொண்டிருந்ததையும் அறிந்து, அத்திருடனை அத்துப்பறிபவருக்குக் காட்டிக்கொடுக்க நிச்சயித்தார்.

ஆதலால், அவர் அத்திருடனுடன் உரையாடிக்கொண்டே ஒரு சிற்றுண்டிச் சாலையில் நுழைந்தார். தமக்கும் திருடனுக்கும் காப்பி கொண்டுவரும்படி கூறினார். காப்பியை முழுதும் குடிக்காமல், சிறிது காப்பியை வெள்ளைவெளேலென்றிருந்த சுவரின்மீது ஊற்றிக் கறையாக்கினார். பிறகு வெளியே செல்லும்போது, தெருப்பக்கம் இருந்த சாளரத்தின் கண்ணாடி ஒன்றைத் தமது குடையால் தாக்கி உடைத்துவிட்டார். அவர் செயல்களைக்கண்ட சிற்றுண்டிச்சாலை சொந்தக்காரர் அவரைப் பித்தரென்று எண்ணி, வசைபாடி அனுப்பிவிட்டார். அப்பகுதியிற் சுற்றிக்கொண்டிருந்த வாலண்டைன் அச்சிற்றுண்டிச் சாலையின் அருகில் வந்தபோது, அப்போதுதான் உடைபட்டிருந்த சாளரத்தைக் கவனித்தார். அதில் ஏதேனும் விசேஷமிருக்கலாமென ஊகித்து உள்ளேசென்றார். காப்பி கொண்டு வரும்படி சொல்லிவிட்டு அமர்ந்த அவர், சுவரின் மீது காப்பி வீசப்பட்டிருந்ததைக்கண்டு, வேலையாளை விசாரித்தபோது, அச்செயல் அப்போது அங்கு வந்து சென்ற இரண்டு பாதிரிகளுள் ஒருவர் செய்ததென அறிந்தார். பாதிரிகளின் அடையாளங்களைக் கேட்டபோது, அவர்களுள் ஒருவன் திருடர் தலைவனாகத்தான் இருத்தல்வேண்டுமென நிச்சயித்தார்; உடனே அவர்கள் சென்ற வழியைக் கேட்டறிந்து அவ்வழியே சென்றார். அங்கொரு பழக்கடையில் வைக்கப்பட்டிருந்த பழத்தட்டுகளில், 'டஜன் ஆப்பிள் ஒரு ஷிலிங்' என்று எழுதியிருந்த விலை அட்டை, ஆரஞ்சுப் பழத் தட்டிலும், 'டஜன் ஆரஞ்சு இரண்டு ஷிலிங்' என்று

எழுதி இருந்த விலை அட்டை, ஆப்பிள் தட்டிலும் செரு கப்பட்டிருந்ததை வாலண்டைன் கண்டார். அங்கும் ஏதோ விசேஷம் உண்டென எண்ணிப் பழக்கடைக்கார ரைப்பார்த்து, "ஏனையா இவ்விலை அட்டைகள் மாற்றி வைக்கப் பட்டுள்ளன?" என்றார். அப்போதுதான் அதைக் கவனித்த கடைக்காரர், "ஆ! இக்குறும்பு அப்பாதிரிப்பயல் கள் செய்ததாக இருக்கவேண்டும்," என்று பதிலளித்தார். உடனே வாலண்டைன் அவர்கள் சென்ற வழியைக் கேட் டறிந்து, மேலும் தமக்கு கிடைத்த அத்தகைய அடையா ளங்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே போய் இறுதி யில் திருடர் தலைவனைக் கைது செய்து புகழுற்றார்.

இதனால் நாம் அறிவது யாது? வாலண்டைனின் ஊன்றிப்பார்க்கும் பழக்கமே அவருக்கு வெற்றி தேடித் தந்தது என்பதே. ஆதலால், நாம் ஊன்றிப் பார்க்கப் பயிலு தல் வேண்டும். இப்பயிற்சி நமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும். இது முதலில் சற்றுக் கஷ்டமாகவே இருக்கும்; படிப்படியாக எளிதாகிவிடும். இத்தாலி நாட்டில் புலன் பயிற்சி அளிக்கும் சங்கம் ஒன்று இருக்கிறதாம். அச்சங் கத்தின் உறுப்பினர் சிறு சிறு குழுவினர்களாக வெளியே செல்வார்களாம். சில இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டுச் சங்கத்துக்குத் திரும்பிவந்து, தாங்கள் வழியில் ஊன்றிப் பார்த்தவற்றையும், கேட்டவற்றையும்பற்றி ஒருவரை யொருவர் கேள்விகள் கேட்பார்களாம். "நாம் சென்ற மூன் றாவது தெரு எது? அத்தெருவின் மத்தியில் சென்று கொண்டிருந்தபோது நம் எதிரில் வந்த மோட்டாரின் எண் என்ன? நம்மைக் கடந்து சென்ற மோட்டாரின் நிறம் என்ன? தெருவின் இறுதியில் எத்தனை பேர் நின்றிருந் தனர்? ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்? அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயம் என்ன?"—இவை போன்ற கேள்விகள் கேட்கப்படுமாம். இத்தகைய முறையை நீங்களும் கையாண்டால் உங்கள் கட்புலனும்,

செவிப் புலனும் நுட்பமான பயிற்சியைப் பெற்றுச் சிறந்து விளங்கும் என்பது திண்ணம். முயன்று பாருங்கள்.

---

5. தேசப்படம் எழுதலும் படித்தலும்

தேசப் படம் என்றால் என்ன? தேசப் படத்துக்கும் சித்திரப் படத்துக்கும் உள்ள வேற்றுமை என்ன? என்பனவற்றை நீங்கள் முதலில் அறிதல் வேண்டும். சித்திரப் படம் என்பது நீளம், அகலம், உயரம் ஆகிய மூன்று அளவுகள் உடையது. உதாரணமாக, ஒரு புத்தகத்தின் சித்திரத்தை நீங்கள் வரைவதாக பாவித்துக்கொள்வோம். நீங்கள் வரையும் சித்திரத்தில், புத்தகத்தின் நீளம், அகலம், கனம் ஆகிய மூன்றையும் காட்டுவீர்கள் அல்லவா? தேசப்படம் என்பது இத்தகையது அன்று. நீங்கள் அந்தப் புத்தகத்தின் சித்திரத்தை வரைந்தீர்களோ. அதே புத்தகத்தைக் கீழே வைத்து, அதன் மீது உங்கள் பார்வை மேலிருந்து செங்குத்தாக விழும்படி பார்த்தால், அப்புத்தகத்தின் நீள அகலங்களை நீங்கள் காணமுடியுமே யன்றி, அதன் கனம் உங்கள் கண்ணிற்படாதல்லவா? அதே புத்தகத்தை ஒரு வெள்ளைத் தாளின் மீது வைத்து, ஒரு பென்சிலால் அப்புத்தகத்தையொட்டிக் கோடு வரைந்த பிறகு, புத்தகத்தை எடுத்துவிட்டுப் பார்த்தால், அவ்வெள்ளைத் தாளின் மீது புத்தகத்தின் நீள அகலங்களைக் காட்டும் ஒரு நீண்டசதுரத்தின் வடிவத்தைக் காண்பீர்கள் அல்லவா? இதுவே அப்புத்தகத்தின் தரைப் படமாகும். தரைப்படத்துக்குக் கிடைப்படம் என்பது வேறு பெயர். இவ்வாறே நீங்கள் ஓர் ஆகாய விமானத்தில் ஏறிக்கொண்டு வானிலிருந்து கீழுள்ள நிலப் பகுதியைப் பார்த்தால், அங்கிருக்கும் மலைகளும் ஆறுகளும் நீண்ட கோடுகளாகவும், ஏரிகள் குன்றுகள் முதலியவை சிறு வட்டங்களாகவும், வீடுகள் முதலியன புள்ளிகளாகவும்

தோன்றுமன்றோ? இவற்றை வானிலிருந்தபடி உங்கள் கண்ணிற் படுகின்ற மாதிரி ஒரு தாளின் மீது குறித்தால், அதுவே நீங்கள் காணும் நிலப்பகுதியின் தேசப் படமாகும். உங்கள் பள்ளிகளில் உபயோகிக்கப்படும் தேசப் படங்களும் இங்ஙனமே தோற்றம் அளிப்பதை நீங்கள் அறிவீர்கள்?

தேசப்படங்கள் வரையும் முறை எக்காலத்தில், எந்நாட்டவரால் கண்டுபிடிக்கப்பட்டது என்று திட்டமாகக் கூறமுடியாது. முதன் முதல் இத்தாலி நாட்டில் உள்ள ரோம் நகரத்தில் ஆட்சிபுரிந்தவர்கள்தாம் தேசப்படம் வரையும் முயற்சியை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் வரைந்த படங்கள் தனித் தேசப் படமாக இல்லாமல் சித்திரப்படங்கள் நிறைந்த தேசப் படமாக இருந்தன. அதன் பின்னர் பதினைந்தாம் நூற்றாண்டில் புதிய கடல் மார்க்கங்களையும், நாடுகளையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் தாங்கள் சென்ற வழிகளையும், தாங்கள் கண்ட இடங்களையும் குறித்துத் தேசப்படங்கள் வரையத் தொடங்கினார்கள். அவைகளும் நி[illegible]மான தேசப்படங்களாக அமையவில்லை. பிறகு பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்து முதலிய நாடுகளில் திருத்தமான தேசப்படங்களைத் தயாரிக்க முயன்று ஓரளவுக்கு வெற்றிகண்டார்கள்.

இக்காலத்தில் பலவகையான தேசப்படங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிய வேண்டும். அவற்றுள் ஆர்ட்னன்ஸ் சர்வே தேசப்படங்கள் (Ordnance Survey Maps) குற்றமற்ற ஒழுங்கான படங்களாகக் கருதப்படுகின்றன. 'ஆர்ட்னன்ஸ்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குப் பீரங்கிப்படை என்பது பொருள். எனவே, இராணுவ இலாகாவைச் சேர்ந்த தரைநூல் வல்ல அறிஞர்கள் அந்தந்த இடங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள அமைப்புகளைத் தகுந்த உபகரணங்களின் உதவியால் ஆராய்ந்து,

வரைந்த படங்களுக்கு 'ஆர்ட்னன்ஸ் சர்வே' படங்கள் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

ஆர்ட்னன்ஸ் சர்வே தேசப்படங்கள் இரண்டு வகையான அளவைகள் கொண்டவை; ஒன்று ஓர் அங்குலப் படம் என்று கூறப்படுகிறது. மற்றொன்று ஆறு அங்குலப் படம் என்று வழங்கப்படுகிறது.

தேசத்தில் ஒருமைல் தூரத்தைத் தேசப்படத்தில் ஓர் அங்குல தூரமாகக் குறிக்கப்படுவது ஓரங்குலப்படம் எனப்படும். அங்ஙனமே தேசத்தில் ஒருமைல் தூரத்தைத் தேசப் படத்தில் ஆறு அங்குல வீதத்தில் குறிக்கப்படுவது ஆறங்குலப் படமாகும். இத்தகைய படங்கள் உலகத்தில் உள்ள எல்லா நாடுகளிலும் உண்டு. நமது நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் இத்தகைய ஆர்ட்னன்ஸ் சர்வே படங்கள் வரையப்பட்டுள்ளன. இப்படங்கள் ஒரு குறிப்பிட்ட ஜில்லா அல்லது தாலுக்காவைக் குறிக்க வரையப்பட்டவை அன்று. பொதுவாக இரண்டு அட்சரேகைகளுக்கும், இரண்டு தீர்க்க ரேகைகளுக்கும் இடையில் உள்ள இடங்களைக் குறிக்க வரையப்பட்டவை. ஆதலால், நீங்கள் வசிக்கும் இடத்தின் படம் வேண்டுமானால், அதன் அட்ச, தீர்க்காம்ச எல்லைகளைக் குறித்து, நமது இராச்சியத்துத் தலைமைச் சர்வே காரியாலயத்துக்கு எழுதி, அவற்றை விலைக்குப் பெறலாம்.

இனி இத்தேசப்படங்களில் கையாளப்பட்டு வரும் சில முக்கிய விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுவது அவசியம். அவற்றுள், முதலாவதாகத் திசைகளைப்பற்றி அறியவேண்டும். பொதுவாகத் தேசப்படங்கள் உண்மையான வட திசையை அடிப்படையாகக் கொண்டு வரையப்படுகின்றன. ஆதலால் நீங்கள் இப்படங்களை உபயோகிக்கும் போது, உங்கள் திசைகாட்டியின் உதவியால் அவற்றை உண்மை வடதிசையில் பொருத்தி வைத்துக் கொண்டே உபயோகிக்கவேண்டும்.

இரண்டாவதாகத் தேசப்படங்களில் கவனிக்கவேண்டியது **தூரம்**. ஆர்ட்னன்ஸ் சர்வே தேசப் படங்கள் எல்லாவற்றிலும் வீத அளவு ஒரே மாதிரியாகக் குறிக்கப்பட்டிருப்பதில்லை. சில படங்களில் ஒரு மைலுக்கு ஓர் அங்குல வீத அளவு கொடுப்பட்டிருக்கும். சில படங்களில் $\frac{1}{63360}$ என்ற அளவு கொடுக்கப்பட்டிருக்கும். எத்தகைய அளவு கொடுத்திருந்தாலும், அதைக் கண்டு நீங்கள் திகைப்புறவேண்டியதில்லை. இந்த அளவுக்கு ஆங்கிலத்தில் ரேப்ரசன்டேட்டிவ்பிராக்ஷன் (Representative Fraction) என்பது பெயர். இதைச் சுருக்கமாக 'ஆர். எப்' (R. F.) என்று கூறுவதுண்டு. விளக்கத்திற்காக ஓர் எடுத்துக் காட்டைக் கவனிப்போம்: ஒரு தேசப்படத்தின் கீழ் $\frac{1}{63360}$ என்னும் பின்னம் கொடுக்கப்பட்டிருந்தால், படத்தில் ஓர் அங்குல தூரம், அப்படத்தால் குறிக்கப்படும் நிலப்பரப்பின்மீது 63360 அங்குல தூரத்தைக் குறிக்கிறது என்று அறிந்து கொள்ளவேண்டும். 63360 அங்குலங்கள் கொண்டது ஒரு மைல்தூரம் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, இப்பின்ன அளவு (R. F. $\frac{1}{63360}$) ஒரு மைலுக்கு ஓர் அங்குல வீத அளவையே குறிக்கின்றதென்பது தெளிவாகிறது. இதுவன்றிச் சில படங்களின் கீழே நேர்க்கோடு வரைந்து அதை மைல்களாகவும், பின்னங்களாகவும் 'வீத அளவு' குறிக்கப்பட்டிருக்கும். இத்தகைய அளவைகளைப்பற்றி நீங்கள் முன் வகுப்பில் படித்தீர்கள்.

இத்தகைய அளவுகளைக் கொண்டு படங்களில் தூரங்களை அறிவது எளிதே. இரண்டிடங்களுக்கு இடையில் உள்ள தூரத்தை நேர் அளவாகக் கண்டறிவதுஎளிதெனினும், வளைந்து வளைந்து செல்லும் ஒரு சாலை அல்லது ஒரு ஆறு போன்றவைகளின் தூரத்தைக் கண்டு பிடிப்பதிற் சிறிது சிரமம் ஏற்படலாம். இதற்கு எளிய முறை, ஒரு நூலைக்கொண்டு, அளக்கவேண்டிய வளைவுகளின் மீது

சங்கேதக் குறிகள் - Conventional Signs

குறிப்பு

M; U; T; P. முனிசிபாலிட்டி; யூணியன்; தந்தி நிலையம்; தபால் நிலையம்	==== :::::: மற்றச் சாலைகள்
H; D; S. மருத்துவச்சாலை; டிஸ்பென்ஸரி; போலீஸ் ஸ்டேஷன்	- - - - - - முக்கிய வண்டிப் பாதை
O; RO; C. போலீஸ் ஔட்போஸ்ட்; ரிஜிஸ்டர் ஆபீஸ்; சத்திரம்	———— முனிசிபல் எல்லை
லோகல்பண்டு சத்திரம்; காட்டிலாக்கா பங்களா	-·-·-·- ஜில்லா எல்லை
பிரயாணிகள் தங்குமிடம் (Travellers' Bungalow); மராமத்து இலாக்கா பங்களா (P.W.D. Bungalow)	-·····-····· தாலுக்கா எல்லை
எலக்ட்ரிக் பவர் ஸ்டேஷன்; எலக்ட்ரிக் சப்ஸ்டேஷன்	ரிசர்வ் காடுகள்
நிலையம் உள்ள இரயில் பாதை	பாலம் உள்ள ஆறு
-x-x-x- தந்திக் கம்ப வரிசை	ஆறு, லாக், அணைக்கட்டு, கால்வாய்
மைல்கல் உள்ள கப்பியிட்ட பெரிய சாலை	(G); கவர்ன்மெண்ட்; கலங்கரை விளக்கம்
மைல்கல் உள்ள கப்பியிட்ட இரண்டாந்தரச் சாலை	பட்டணம் அல்லது கிராமம்; ஏரி; சதுப்பு நிலம்
மூன்றாந்தரச் சாலை கப்பியிட்டதும், இடாததும்	▲ 490 கடல் மட்டத்துக்கு மேல் உயரம்



படம்: இது செங்கற்பட்டு ஜில்லாவின் ஒரு பகுதி.
முன் பக்கத்தில் காணப்படும் சங்கேதக் குறிகளை இப்படத்தில் பாருங்கள்.

பொருத்தி அளவெடுத்தபின், அந்நூலை அடிக்கோலின் மீது பொருத்தித் தூரத்தை அறிந்துகொள்வதாகும்.

தேசப்படங்களில் நாம் முக்கியமாக அறிந்திருக்க வேண்டிய மற்றொரு அமிசம் இடக்குறிப்பு. ஆர்ட்னன்ஸ் சர்வே தேசப் படங்கள் அட்ச, தீர்க்காமிசங்களை அடிப் படையாகக்கொண்டே வரையப் பட்டவை என்று முன்னமே கூறப்பட்டது. அட்சாமிசங்கள் பூமத்திய ரேகையை (0°) ஆரம்பக் கோடாகக்கொண்டு, அதற்கு வடக்கில் 90 கோடுகளும், தெற்கில் 90 கோடுகளும் வரையப்படுகின்றன என்பதும், 90° என்பது துருவங்களைக் குறிக்கும் என்பதும் நீங்கள் அறிவீர்கள். ஆகவே 90 வட அட்சங்களும், 90 தென் அட்சங்களும் உள்ளன. தீர்க்க ரேகைகளின் தொகை 360 என்பதும், இவை கிரீன்விச் ரேகையை (0°) ஆரம்பக்கோடாகக்கொண்டு அதற்குக் கிழக்கில் 180 தீர்க்க ரேகைகளும், மேற்கில் 180 தீர்க்க ரேகைகளும் வடக்கு தெற்காகத் துருவங்களின் மூலம் வரையப்படுகின்றன என்பதும் நீங்கள் அறிவீர்கள். எனவே தேசப்படங்களைப் பார்க்கும்போது அவற்றின் அட்ச, தீர்க்காமிசங்களைக் கவனித்து அறிதல் அவசியமாகும். தேசப்படத்தில் இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவி யாக இருப்பவை இவைகளே யன்றோ?

சங்கேதக் குறிகள்:

இறுதியாக ஆர்ட்னன்ஸ்சர்வே தேசப்படங்களில் நாம் அறியவேண்டியவை சங்கேதக் குறிப்பு (Conventional signs) களாகும். இக்குறிப்புகள், மேலே கூறப்பட்டவை போலன்றித் தேசத்துக்குத் தேசம் மாறுபட்டுக் காணப் படும். நமது நாட்டு ஆர்ட்னன்ஸ் சர்வே படங்களில் உள்ள குறிப்புகள் ஐரோப்பிய நாட்டுப் படங்களிற் காணப்படும் குறிப்புகளினின்று வேறுபடும். இக்குறிப்புகளுள் முக்கிய மானவை 42-ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. அவற்றைக்

கவனியுங்கள். இவற்றுள் சம உயரக் கோடுகள் தவிர மற்றக் குறிப்புகள் அனைத்தையும் நீங்களேபார்த்துத்தெரிந்து கொள்ளலாம். தேசப் படத்தில் பூமியின் உயரத்தைக் காட்டக் கோடுகள் வரையப்படுகின்றன. இவை கடல் மட்டத்துக்கு மேல் ஒரே உயரமுள்ள இடங்களின் மூலம் வரையப்பட்டுள்ள கோடுகள். இவை பொதுவாக ஐம்பதடி உயரத்துக் கொன்றாக வரையப்பட்டிருக்கும். சில படங்களில் நூறு அடிக்கொன்றாக வரைவதும் உண்டு. இவை மெல்லிய கோடுகளாகவும், இவற்றையொட்டி 2000,2050, 2100 போன்ற எண்கள் குறிக்கப்பெற்றும் காணப்படும்.

இச்சமஉயரக் கோடுகளை நாம் நன்கு கவனித்தால் அநேக விஷயங்களை அறிந்துகொள்ள முடியும். நில அமைப்பை அறிய இவை பெரிதும் பயன்படுகின்றன. பொதுவாக இக்கோடுகள் ஒன்றை ஒன்று நெருங்கி உள்ள இடங்கள் சற்றுச் செங்குத்தான சரிவைப் பெற்றிருக்கும். ஒன்றுக்கொன்று தூரமாக அமைந்துள்ள இடங்களின் அமைப்பு மிக இலேசான சரிவைப் பெற்றிருக்கும் என்று அறிந்து கொள்ளலாம். ஆகவே ஓரிடத்தின் மேடு பள்ளங்களை அறிந்துகொள்ளச் சம உயரக்கோடுகள் பெரிதும் துணைபுரிகின்றன. இவை யன்றி யாறுகள், ஏரிகள், கிணறுகள், கோவில்கள், சாலைகள், காடுகள், இரயில் பாதைகள் போன்ற பிற குறிப்புகளை அறிய ஆர்ட்னன்ஸ் ஸர்வே படங்களின் கீழேயே சங்கேதக் குறிகள் கொடுக்கப் பட்டிருக்கும். அவற்றை நீங்கள் 43-ஆம் பக்கத்தில் உள்ள படத்தில் கவனித்து எளிதில் அறிந்து கொள்ளலாம்.

பல வகையான தேசப்படங்கள்:

மேலே விவரிக்கப்பட்ட தேசப்படங்களிலிருந்து மக்களுக்குப் பல வகைகளில் பயன்படத்தக்க பலவகையான தேசப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றுள் ஸ்தல யாத்திரை செய்பவர்கட்கும், நாட்டைச் சுற்றிப்பார்க்க விரும்பும் பிரயாணிகட்கும் பயன்படும் 'டூரிஸ்ட்' தேசப்

படங்களும் (Tourist maps), மோட்டார் ஓட்டுபவர்கட்குப் பயன்படக்கூடிய (Motorist maps) சாலைப்படங்களும் மிக வும் முக்கியமானவை. நீங்கள் உங்கள் பள்ளியிலும், புத்தகங்களிலும் காணும் தேசப்படங்கள் வேறானவை.

தேசப் படங்கள் வரைதல்:

இனி, நீங்கள் தேசப்படங்கள் வரையக் கையாளக் கூடிய முறைகளைக் கவனிப்போம்: நீங்கள் விரும்பும் ஓர் இடத்தின் படத்தை வரைவது அவ்வளவு எளிய காரிய மன்று. ஆயினும், நீங்கள் அவ்வேலையில் ஈடுபட்டுச் செய் யும்போது நிச்சயமாக மகிழ்ச்சி அடைவீர்கள்.

நீங்கள் வரையும் படங்கள் ஆர்ட்னன்ஸ் சர்வே தேசப் படங்களைப் போல அத்துணை சரியாக இராது என்பது நிச் சயம். அவற்றில் இருப்பவை போலச் சம உயரக் கோடுகளை யும், அட்சாமிசங்களையும் குறிப்பதும் முடியாத காரியம். எனினும், நீங்கள் வரையும் படங்களில் திசையும், உத்தேச மாகத் தூரமும், சங்கேதக் குறிகளும் இடம்பெறச் செய் வது எளிதே.

உங்கள் கிராமத்தின் படம் வரைய நீங்கள் உத்தேசித் தால், அதற்குக் கீழ்க் கண்ட முறைகளைக் கையாள வேண் டும்: தேசப்படம் தயாரிப்பது ஒருவர் இருவரால் இய லாத காரியம். உங்கள் வகுப்பில் உள்ளவர்கள் குடிமைப் பயிற்சி முறைப்படி சில குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருப் பீர்கள் அல்லவா? ஒவ்வொரு குழுவினரும் தேசப்படம் வரைவதற்கு இன்றியமையாத் திசைகாட்டி, அளவுநாடா, பெரிய தாள்கள், பென்சில்கள் முதலியவற்றோடு புறப்பட வேண்டும். புறப்படுவதற்கு முன்னரே, நீங்கள் தயாரிக்க விரும்பும் படத்தின் வீத அளவை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். உங்கள் ஊரில் நான்கு தெருக்கள் உள்ளன என்று வைத்துக்கொள்வோம். ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு தெருவின் படம் வரையத் தொடங்கவேண்டும்.

முதலில் உங்கள் காகிதத்தில் திசைகாட்டும் கருவியைக்கொண்டு, வடக்குத் திசையைக் குறித்துக் கொள்ள வேண்டும். பிறகு காகிதத்தின் அடிப்பாகத்தில் குறுக்குக் கோட்டை வரைந்துகொண்டு அதை நீங்கள் புறப்படும் இடமாகக் குறிக்கவேண்டும். அங்கிருந்து நீங்கள் செல்லும் திசையில் சாலை அல்லது தெருவின் நீளத்தையளந்து குறித்துக்கொண்டே போகவேண்டும். கோவில், குளம், சத்திரம், வெளியிடம், சந்தைமேடு முதலியன இருந்தால் அவற்றை ஆங்காங்குக் குறிக்கவேண்டும். உதாரணமாக, நீங்கள் ஓரிடத்திற் புறப்பட்டு வடக்கு நோக்கி அளந்து கொண்டு போவதாகப் பாவித்துக்கொள்வோம். நீங்கள் புறப்படும் இடத்தில் சாலை 30 அடி அகலம் இருக்கிறது. அதை அளந்து, முன்னரே உங்களால் நிர்ணயிக்கப்பட்ட வீத அளவின்படி குறிக்கவேண்டும். 600 அடி தூரம் சென்ற பிறகு, சாலை அகன்று 40 அடி இருக்குமானல், அங்கு அதையும் வீத அளவுப்படி குறிக்கவேண்டும். 700 அடி தூரம் சென்றபின் மேற்குப் பக்கத்தில் ஒரு குளம் இருக்கிறதெனில் அதை அங்குக் குறிக்கவேண்டும். இங்ஙனமே உங்கள் ஊரின் நான்கு வீதிகளையும் அளந்து, அவற்றின் இடையில் உள்ள பாகங்களையும் அளந்து படம் வரைந்து நான்கு படங்களையும் முறைப்படி ஒன்றோடொன்று ஒட்டிப் பார்த்தால் உங்கள் கிராமத்தின் படம் அமைந்திருக்கும் அழகைக்கண்டு நீங்கள் அகம் மகிழாது இருக்க முடியாது. இம்முயற்சியை மேற்கொள்வீர்களாக.

6. வழி கண்டுபிடித்தல்

வழி கண்டுபிடித்தல், தடம் பற்றல், சுவடு பின்பற்றல் என்பவை ஒரே பொருளைக் குறிப்பன. பெரிய விழாக் களிலும்,புதிய ஊர்களிலும் சிறுவர், சிறுமியர் வழிதவறித் துன்புறுவதைப் பற்றி நாம் அறிவோம். பெரியவரும் இதற்கு விலக்கானவர் அல்லர். மலைகளின்மீதும் கூட்டுப் பாதைகளிலும் வழி தவறி துன்புற்றவர்களைப் பற்றிய வரலாறுகள் பல உண்டு. குடிமைப்பயிற்சித் திட்டப் படி உங்கள் குழுவினருள் ஒரு குழுவினர் எங்கேனும் முன்னே செல்லும்போது, பின்னே வருபவர் உங்கள் தடத்தைப் பின்பற்றி வருவதற்காக உபயோகிக்க வேண்டிய குழூஉக் குறிகளைப்பற்றி நீங்கள் அறிவீர்கள். இப் பாடத்தில் நீங்கள் அறியவேண்டுவது அவற்றைப் பற்றி யன்று; சில புதிய விஷயங்களை அறிதல் வேண்டும்.

நாம் ஒரு புதிய பட்டணத்தைச் சுற்றிப் பார்க்கும் போதும், ஒரு மலையின் மீது ஏறி இறங்கும்போதும், கூட்டுப்பாதைகளிற் சென்று திரும்பும்போதும் மேற் கொள்ளவேண்டியவற்றைப் பற்றி இங்கு அறிவோம்: தென்னிந்தியாவிலுள்ள சென்னை, மதுரை போன்ற பெரிய பட்டணங்களுக்கு முதன் முறையாகச் செல்லு கின்றவர்கள் புகைவண்டி நிலையத்திலிருந்தோ, அல்லது தாங்கள் தங்கி இருக்கும் விடுதியிலிருந்தோ புறப்பட்டுப் பட்டணத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு, தாங்கள் புறப்பட்ட இடத்துக்குவந்து சேர்ந்துவிடுவது எளிதன்று. ஆதலால் இத்தகைய பட்டணங்களில் தாங்கள் புறப்படும் இடத்திலிருந்து செல்லும் வழிகளில் உள்ள கோவில்கள், சினிமாக் கட்டடங்கள், உத்தியோக நிலையங்கள், உயர்ந்த மரங்கள், தந்திக்கம்பங்கள் முதலியவற்றை எளிதில் அடையாளந் தெரிந்துகொள்ளக்கூடிய மாதிரி நன்கு கவனிக்கவேண்டும். பகல் நேரமாயின் சூரியன் உள்ள

திசையையும் கவனித்துக்கொள்வது நல்லது. ஒரு சாலையினின்று மற்ருெரு சாலையில் திரும்பும்போது வலப்புறம் திரும்புகின்ருேமா, இடப்புறம் திரும்புகின்ருேமா என்றும் கவனித்துக்கொள்ள வேண்டும். இரவாக இருப்பின் கடைகளையும், அவற்றில் எரியும் விளக்குகளையும், கோவில் கோபுரத்தின் மீது எரியும் விளக்குகளையும், கவனித்து அடையாளம் அறிந்துவைத்துக்கொள்வது நலம். இவற்றைக்காட்டிலும் மிக முக்கியமானது, கூடுமான வரையில் தெருக்களின் பெயர்களைக் கவனித்து அவற்றை நினைவில் வைத்துக்கொள்வது.

இனித் திறந்த வெளிகளின் மூலமும், காடுகளின் மூலமும் செல்லவேண்டியவர்கள் அனுசரிக்க வேண்டிய முறைகளைக் கவனிப்போம்: பொதுவாக, மனிதன் நேரே செல்வதாக நினைத்து நடக்கும்போதெல்லாம், அவன் தன்னை அறியாமலே சிறிது சிறிதாக வலப்புறம் தள்ளி நடந்துகொண்டிருப்பான். அன்றியும், நேரே போக எண்ணிச் செல்கின்றவர்கள் வழியிற் குறுக்கிடும் பள்ளங்கள், முட்புதர்கள் முதலியவற்றைச் சுற்றிக்கொண்டு போகும் போது தாங்கள் செல்லவிரும்பும் திசையினின்று தவறி விடுவது சாதாரணம். ஆதலால் காட்டுவழியிற் செல்லும் போதும், மிகப் பரந்த வெளிகளின் மூலம் செல்லும் போதும் சில நிலக் குறிப்புகளும், மரக் குறிப்புகளும் மிகவும் அவசியமாகும். அன்றியும் புறப்படும் நேரமும், அப்போது சூரியன் உள்ள திசையையும் கட்டாயமாகக் கவனித்துக் கொள்வது மிக்க நன்மை பயக்கும்.

இனி மலைகளின் மீது ஏறி இறங்கும்போது கவனிக்க வேண்டியவற்றைப் பற்றி ஆராய்வோம்: நாட்டிலும், காட்டிலும் செல்பவர் கவனிக்கவேண்டியவற்றைக் காட்டிலும், மலைமீது செல்பவர் கவனிக்க வேண்டிய எச்சரிக்கை விதிகள் முக்கியம். அவையாவன: மலையின் மீது ஏறிச் செல்லும்போது பாதையின் இருபுறங்களிலும் மரம், செடி,

கொடிகள் இருந்தால், அவற்றுள் எளிதில் அடையாளம் கண்டு கொள்ளக்கூடியவற்றை நன்கு கவனிக்கவேண்டும். வழியோரத்தில் இருக்கும் செடிகளின் கிளைகளை ஒடித்தும், நீண்ட புற்கள் இருப்பின் அவற்றின் முனைகளை முடிந்தும் விட்டுக்கொண்டு போவது தடம் பற்றுவதற்குச் சிறந்த அடையாளங்களாகும். அன்றியும், குறுக்குப் பாதைகள் வருகின்ற இடங்களில் ஏதேனுமொரு அடையாளம் இட வேண்டுவது மிக்க அவசியமாகும். பாதைகளிற் செடி கொடிகள் இல்லாவிடில் கற்களைக் குவித்து வைப்பதும், அடுப்பைப்போல அடுக்கிவைப்பதும் நல்ல அடையாளங் களாம். புதிதாக மலையின் மீது யேறுகின்றவர்கள் இத்தகைய அடையாளங்களைச் செய்துகொண்டு போகாவிட்டால், இறங்கி வரும்பொழுது எளிதில் வழி தவறிவிடுவார்கள். அன்றியும் குறுக்குப் பாதைகள் வருமிடங்களில் வழி தவறுவது நிச்சயம். இத்தகைய நிகழ்ச்சிகள் பல உண்டு. அவற்றுள் ஒன்று ஈண்டுத் தரப்படுகிறது.:

1932-ல் நாங்கள்—இந்நூலாசிரியர் உள்ளிட்ட முப்பதின்மர்—தரைநூல் பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருந்தோம். அப்போது நாங்கள் பல கல்விப் பிரயாணங்கள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவற்றுள் நகரி மலையேற்றமும் ஒன்று. பகல் ஒருமணிக்கு மாணவர் (பலர் பி. ஏ. பட்டமும், சிலர் எம். ஏ. பட்டமும் பெற்றவர்.) முப்பதின்மரும், ஆசிரியர் மூவரும் நகரி மலையின் அடிவாரத்தை அடைந்தோம். அவர்களுள் சில பொறுப்புகளை மேற்கொண்டிருந்த யானும், நண்பர் நால்வரும் இரவு உணவுக்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுச் சற்றுப் பின்னால் சென்றோம். மலை ஏறவேண்டிய வழி ஒற்றையடிப்பாதை ஆதலால் அனைவரும் ஒருவர் பின் ஒருவராகச் சென்றோம். ஏறிச் செல்லும்போது எங்களுக்குமுன் சென்றவர்களுக்கோ, பின்னே சென்ற எங்களுக்கோ வழியில் அடையாளங்களை அமைத்துக் கொண்டுபோக வேண்டுமென்ற எண்ணம் எழவில்லை.

காரணம், எல்லாரும் உயர்படிப்புள்ள அறிஞர். ஆதலால் வழியை எளிதில் அறிந்து செல்லமுடியும் என்ற ஆணவம்.

பின்தங்கிச் சென்ற நாங்கள் ஐவரும் மிக விரைவாக ஏறிச்செல்ல நேர்ந்தது. ஐவரும் நல்ல உடல் உரம் உள்ளவர்களாதலால், துன்பத்தைப் பொருட்படுத்தாமல், முன்னே சென்றவர்களோடு சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு ஓட்டமும் நடையுமாகச் சென்றுகொண்டிருந்தோம். வழியில் ஓரிடத்தில் காய்ந்திருந்த புல் தீப் பிடித்து எரிந்து கொண்டிருந்தது. அது எங்கள் ஆசிரியர்களுள் ஒருவர் புகை பிடித்து எறிந்த சிகரெட்டுத் துண்டின் நெருப்பால் ஏற்பட்டிருக்க வேண்டுமெனப் பேசிக் கொண்டே சென்றோம். முன்னே சென்றவர்கள் மலை உச்சியை அடைவதற்குள் நாங்கள் அவர்களோடு சேர்ந்துகொண்டோம். சுமார் மூன்று மணிக்கு மலை உச்சியை அடைந்த நாங்கள், அங்குள்ள ஒரு கோவிலின் அருகில் அமர்ந்து, எங்களிடமிருந்த சிற்றுண்டியைத் தின்று விட்டுக் காப்பியைப் பருகினோம். பிறகு எங்கள் ஆசிரியர்களுள் ஒவ்வொருவரும் தரைநூல் சம்பந்தமான பல விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். மணி ஐந்துக்கு மேலாகிவிட்டது.

மலையினின்று இறங்கத் தொடங்கினோம். ஆனால், கடைசியாகச் சென்ற நாங்கள் ஐவரும், கால்வலி அதிகமாக இருந்தபடியால், மேலும் சற்று நேரம் இளைப்பாறி விட்டுப் புறப்படத் தீர்மானித்தோம். மற்றவரும் உடன்பட்டனர். அவர் புறப்பட்டுச் சுமார் அரைமணி நேரம் கழித்த பின் நாங்கள்ஐவரும் புறப்பட்டோம்.விரைவாகவே இறங்கி வந்தோம். ஆனால் முன்னே சென்றவர்கள் எங்கள் கண்ணிற் படவில்லை. எங்களிடம் ஊது குழல் இல்லை. நாங்கள் மிக்க பலசாலிகளாதலால், முன்னே சென்றவர்கள் எங்களைப் பற்றிய கவலை ஒரு சிறிதும் கொள்ளாமல் எங்கும் தாமதியாமற் போய்விட்டார்கள்.

நாங்கள் எத்துணை வேகமாக நடந்தும் முன்னே சென்றவர்களைக் காணக் கூடவில்லை. இறுதியாகச் சிறிது நீர் தேங்கி இருந்த ஒரு பள்ளத்தாக்கை அடைந்தோம். அங்குதான் நாங்கள் வழிதவறிவிட்டோம் என்பதை உணர்ந்தோம். அப்போது சூரியன் மறைந்துவிட்டது. இருள் சூழத் தொடங்கிவிட்டது. சிறிது நேரம் இன்னது செய்வதெனத் தோன்றாமல் திகைத்தோம். நற்காலமாக, நாங்கள் மலையேறிய போது சிகரெட்டு நெருப்பால் புல் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. முற்றிலும் இருள் சூழ்ந்து கொள்வதற்கு முன், எங்குப் புகை கிளம்புகிறதெனக் கூர்ந்து கவனித்தோம். புகை எழும் இடம் தெரிந்தது. ஆனால் அது வெகு தொலைவிற் காணப்பட்டது. எனினும், கண்ணிழந்தவன் கண்பெற்றாற்போல மகிழ்வெய்தி, அத்திசையை நோக்கி நடந்தோம். மேடு, பள்ளம், முள், புதர் முதலிய இடையூறுகளைக் கணக்கிட்டுக் கூற முடியாது. சில இடங்களில் ஐந்தாறடி ஆழமுள்ள இடங்களிற் குதித்தோம். சில இடங்களில் அவ்வாறே பாறைகளைப்பற்றி ஐந்தாறடி உயரம் ஏறினோம். இறைவன் அருளால் இறுதியில் புகை கிளம்பிய இடத்தை அடைந்தோம். அங்கிருந்து 'கூ, கூ' என்னும் ஒலியை எழுப்பிக்கொண்டே மெல்ல நடந்தோம். இதற்குள் சிலர் எங்களைத் தேடிக் கொண்டு விளக்குடன் எதிரே வந்தனர். அவர்களுடன் சேர்ந்து கீழே சென்றோம்.

இதனால் நாம் அறிவது யாது? மலையேறிச் செல்லும் போது, ஏற்ற அடையாளங்களை அமைத்துக்கொண்டு செல்லவேண்டும். அன்று அங்குப் புற்புதர்கள் தற்செயலாய்த் தீப்பற்றி எரிந்திராவிடில் எங்கள் கதி என்னவாகி இருக்குமென்று கூறமுடியாது. ஆதலால், மலையின் மீதோ, அன்றிக் காட்டிலோ வழி தவறிவிட்டால், ஊது குழலை ஊதியும், தழைகளைச் சேகரித்து நெருப்பிட்டுப் புகை கிளப்

ரியும் நாம் இருக்கும் இடத்தை அறிவிக்க வேண்டும். அப்போதுதான் நம்மைத் தேடி வருபவர் நமக்குத் துணைபுரிய முடியும்.

இவையன்றி, நீங்கள் வசிக்கும் பட்டணங்களிலும், கிராமமாக இருந்தால் அருகில் உள்ள பட்டணங்களிலும் டாக்டர் வீடு, மருந்துக் கடை, வைத்திய சாலை, போலீஸ் ஸ்டேஷன், போலீஸ் இன்ஸ்பெக்டர் வீடு, மருத்துவத் தாதியர் வீடு, தந்தி தபால் அலுவலகம், பஸ் முதலிய வாடகைவண்டிகள் நிற்குமிடம், புகை வண்டி நிலையம் முதலிய இடங்களுக்கு நீங்கள் நன்றாக வழி அறிந்திருக்க வேண்டும். நீங்கள் அறிந்திருப்பதோடு, பிறருக்குச் சரியான அடையாளங்கள் கூறி அவற்றிற்கு வழிகாட்டத் தெரிய வேண்டும். அப்போதுதான் எதிர் பாராமல் ஏற்படக் கூடிய இன்னல்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். வீட்டில் இரவில் திடீரென்று எவரேனும் பிரசவ வேதனையுற்றால், அந்த நேரத்தில் அண்டையிற் போய் மருத்துவர் வீட்டுக்கும், மருத்துவத்தாதி வீட்டுக்கும் வழி கேட்பது மடமையாகும். அல்லது திடீரென ஏதோனும் திருட்டு, கலகம் முதலியன ஏற்பட்டால் போலீஸ் ஸ்டேஷன், அல்லது போலீஸ் இன்ஸ்பெக்டர் வீடு முதலியவற்றை அறிந்திருந்தால் எத்துணை நலமாக இருக்கும்? திடீரென ஒரு வீட்டுக்குத் தீ பிடித்தால் நெருப்பணைக்கும் இயந்திரம் இருக்கும் இடத்திற்கு அந்நேரத்தில் வழி கேட்டறிய முயன்றால், இயந்திரம் வரு முன், வீடு சாம்பலாகிவிடும். ஆதலால், இம்முக்கிய இடங்களை நீங்கள் நன்கு அறிந்திருந்தால் உங்களுக்கும், பிறருக்கும் பெருந்துணையாக இருக்கும் என்பது நிச்சயம்.

7. தேசியப் பாடல்கள்

(1) நாட்டு வணக்கம்

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே !—அதன்
முந்தையர் ஆயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே !—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே !—இதை
வந்தனை கூறி மனதிலி ருத்தியேன்
வாயுற வாழ்த்தேனோ !—இதை
(பல்லவி) வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !
என்று வணங்கேனோ!

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே!—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே— அவர்
கன்னியராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே!—அவர்
பொன்னுடல் இன்புற நீர்விளை யாடிஇல்
போந்ததும் இந்நாடே!—இதை
(பல்லவி) வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !
என்று வணங்கேனோ !

— பாரதியார்

(2) பாரத சமுதாயம்

இராகம்-பியாக் : ஏகதாளம்

பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே!—வாழ்க ! வாழ்க !
பாரத சமுதாயம் வாழ்கவே!—ஜய ! ஜய ! ஜய ! (பாரத

அநுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத்துக் கோரு புதுமை!—வாழ்க ! (பாரத

சரணங்கள்

1, மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ?
மனிதர் நோவ மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி யுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனி யுண்டோ?—நம்மிலந்த
வாழ்க்கை இனி யுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு !
கனியுங் கிழங்கும் தானியங் களும்
கணக்கின்றித் தரு நாடு !—இது
கணக்கின்றித் தரு நாடு ! - நித்த நித்தம்
கணக்கின்றித் தரு நாடு !—வாழ்க! (பாரத

2. இனியொரு விதி செய்வோம்;—அதை
எந்த நாளும் காப்போம்.
தனியொருவனுக் குண விலையெனில்
ஜகத்தினை அழித்திடு வோம் —வாழ்க! (பாரத

3. எல்லாரு மோர்குலம் எல்லாரும் மோரினம்
எல்லாரும் இந்திய மக்கள்.
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!—வாழ்க ! (பாரத

—பாரதியார்

(3) ஆங்கிலப் பயிற்சி

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளி தாசன் கவிதைபு னைந்ததும்,
உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்
ஓர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்,
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணம் கண்டதும்,
இம்பர் வாழ்வி னிறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்,
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்,
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்,
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும், தர்மம் வளர்த்ததும்,
பேர ருட்சுடர் வாள்கொண் டசோகனார்
பிழை படாது புவித்தலம் காத்ததும்,
வீரர் வாழ்த்த மிலேச்சர் தந்தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்,
அன்ன யாவு மறிந்திலர் பாரதத்(து)
ஆங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்,
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்,
பின்னர் நாமுறு பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்.
என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே.

— பாரதியார்

(4) கொடி வணக்கம்

கொடி வணக்கமது செய்வோம்;—நாட்டின்
குறைகள் நீங்கியினி உய்வோம்;
முடி வணங்கியதைப் போற்றி—அதன்
மூன்று நிறக்குறி சாற்றி (கொடி) 1
பச்சை யானஒரு தோற்றம்—நமக்குப்
பக்தி வேண்டுமெனச் சாற்றும்;
இச்சையான பொருள்கூடப்—பக்தி
இருக்க வேணுமதை நாட, (கொடி) 2
தூய்ய வெள்ளை நிறக்காட்சி—உண்மை
துலங்கு மென்பதற்குச் சாட்சி;
வாய்மையாக நிற்கும் மர்மம்—சத்யம்
மதங்கள் யாவினுக்கும் தர்மம். (கொடி) 3
காவியின் வர்ண மந்தக்காவி—உலகின்
துக்கப் பூட்டினுக்குச் சாவி;
சிறையும் வீடுமதற்கொன்றே—என்னும்
சேதி ஓதுவதற் கென்றே. (கொடி) 4

—அரசவைக்கவிஞர் இராமலிங்கம்பிள்ளை.

(5) நாட்டுரிமை

"இந்திய நாடிது என்னுடை நாடு"
என்று தினந்தினம் நீயதைப் பாடு.
சொந்த மில்லாதவர் வந்தவர் ஆளத்
தூங்கிக் கிடந்தது போனது மாள.
வந்தவர் போனவர் யாரையும் நம்பி
வாடின காலங்கள் ஓடின தம்பி!
இந்தத் தினமுதல் "இந்திய நாடு
என்னுடை நாடெ"ன்ற எண்ணத்தைக் கூடு. 1

"முத்தமிழ் நாடென்றன் முன்னையர் நாடு
முற்றிலும் சொந்தம் எனக்''கெனப் பாடு.
சற்றும் உரிமையில் லாதவர் ஆளச்
சரிசரி என்றது போனது மாளா.
பத்தியின் அன்பினில் பணிபல செய்வோம்;
பயப்பட்டு யாருக்கும் பணிந்திடல் செய்யோம்;
சத்தியம் சாந்தத்தில் முற்றிலும் நின்றே
சடுதியில் விடுதலை அடைந்தோம் நன்றே. 2

—அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

(6) இளந்தமிழர்க்கு அறிவுரை

அன்பினோடு அறிவுசேர்ந்த ஆண்மைவேண்டும் நாட்டிலே;
அச்சமற்ற தூயவாழ்வின் ஆற்றல்வேண்டும் வீட்டிலே;
இன்பமான வார்த்தைபேசி ஏழைமக்கள் யாவரும்
எம்முடன் பிறந்தபேர்கள் என்றஎண்ணம்வேண்டுமே.
துன்பமான கோடிகோடி சூழ்ந்துவிட்ட போதிலும்
சோறுதின்ன மானம்விற்கும் துச்சவாழ்வு தொட்டிடோம்
என்பதான நீதியாவும் இந்த நாட்டில் எங்ஙனம்
இளந்தமிழா என்றும்நின்று ஏடெடுத்துப் பாடுவாய்.
தமிழனென்ற பெருமையோடு தலைநிமிர்ந்து நில்லடா!
தரணியெங்கும் இணையிலாஉன் சரிதைகொண்டு சொல்லடா!
அமிழ்தமென்ற தமிழினோசைஅண்டமுட்ட உலகெலாம்
அகிலதேச மக்களுங்கண் டாசைகொள்ளச் செய்துமே
கமழ்மணத்தின் தமிழில்மற்ற நாட்டிலுள்ள கலையெலாம்
கட்டிவந்து தமிழர்வீட்டில் கதவிடித்துக் கொட்டியே
நமதுசொந்தம் இந்தநாடு நானிலத்தில் என்றுமே
நல்லவாழ்வு கொள்ளச்சேவை செய்துவாழ்க நீண்டநாள்!

—அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

(7) தேசத் தொண்டு

பல்லவி

தேசத் தொண்டுகள் செய்திடுவோம்;
தெய்வம் துணைவரக் கைதொழுவோம். (தே)

சரணங்கள்

நம்முடை நாட்டை நாமாள
நன்மைகள் முன்போல் இனிமீள
எம்முடை இராச்சியம் இதுவென்றே
இந்தியர் மகிழ்ந்திடச் செயவென்றால் (தே)

வரிகளை எல்லாம் குறைத்திடவே
வரும்படி விளைவுகள் நிறைந்திடவே
விரிகிற பொதுப்பணச் செலவையெல்லாம்
வெட்டிச் சிக்கனம் தொட்டிடவும் (தே)

பணத்தின் பெருமையைப் போக்கிவைப்போம்;
பண்டங் களின்விலை தூக்கிவைப்போம்;
குணத்தின் பெருமைகள் இல்லாத
குலமும் பிறஇனிச் செல்லாது. (தே)

மனிதனை மனிதன் ஏய்ப்பதையும்
மக்களைப் போரில் மாய்ப்பதையும்
தனிஒரு வழியில் தடுத்திடஓர்
தருமமும் உலகினில் தழைத்திடவே (தே)

தாழ்ந்தவ ரென்பவர் இங்கில்லை
தரித்திரம் நமக்கினிப் பங்கில்லை
வாழ்ந்திடும் வரையில் புகழ்செய்வோம்;
வானிலும் உயர்வாய் வாழ்ந்திடுவோம். (தே)

—அரசவைக் கவிஞர். இராமலிங்கம் பிள்ளை

(8) இன்பத் தமிழ்

இன்பந் தருந்தமிழில் அன்பு பிறந்த துண்டு
துன்பம் இனியு முண்டோ ?
சொல் சொல் சொல் பகையே !
முன்பு துருப்பிடித் திருந்த படைக் கலமாம்
முத்தமிழ் ஒளி அறிந்து
செல் செல் செல் பகையே !

—இன்பந்தருந் தமிழில்

தெள்ளும் தமிழில் இசைத் தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ் மறவர்
யாம் யாம் யாம் பகையே !
துள்ளும் பகை முடித்துக் கூத்திடு வோம் தமிழர்
கொள்கை நிறை வடைந்து
போம் போம் போம் பகையே!

—இன்பந் தருந் தமிழில்

—பாரதி தாஸன்

தமிழ்

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும்கூர் வாளும் போலே

—வெண்ணிலாவும் வானும் போலே

வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ

—வெண்ணிலாவும் வானும் போலே

வையகமே உய்யு மாறு
வாய்ந்த தமிழ் என்அரும்பேறு!
துய்யதான சங்க மென்னும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
கையிலே வேலேந்தி (தம்)
கடல் உலகாள்மூ வேந்தர்
கருத் தேந்திக் காத்தார் அந்தக்
கன்னல் தமிழும் நானும் நல்ல

—வெண்ணிலாவும் வானும் போலே,

—பாரதிதாஸன்.

(10) ஆண் பெண் நிகர்

ஆண் உயர் வென்பதும் பெண் உயர் வென்பதும்
நீணிலத் தெங்கணும் இல்லை!
வாணிகம் செய்யலாம் பெண்கள்!—நல்
வானூர்தி ஓட்டலாம் பெண்கள்!
(ஆணுயர் வென்பதும்)
ஏணை அசைத்தலும் கூடும்; - அதை
யார் அசைத்தாலுமே ஆடும்!
வீணை மிழற்றலும் கூடும்; - அது
மெல்லியின் விரலுக்கா வாடும்?
நாணமும் அச்சமும் வேண்டும் - எனில்
ஆணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும்.
(ஆணுயர் வென்பதும்)
--பாரதி தாஸன்

(11) எங்கள் வளநாடு

சிவனிருக்கும் இமயமலை எங்கள் வள நாடு!
திருமாலின் ஏழுமலை எங்கள் வளநாடு!
தவமுனிவர் பொதிகைமலை எங்கள் வள நாடு!
சண்முகனார் பழனிமலை எங்கள் வள நாடு!
முத்திரைக்கும் கடலுடுத்த தெங்கள் வள நாடு
முதுகுமரி தவம்வளர்ப்ப தெங்கள் வள நாடு!
எத்திசையும் கப்பல்விட்ட தெங்கள் வள நாடு
எல்லையிலாத் தொழில் புரியும் எங்கள் வள நாடு
ஏற்றுமதிச் சரக்குகளால் இறக்குமதிப் பொன்னால்
என்றென்றுந் திருவிளங்கும் எங்கள் வள நாடு!
நாற்றிசையும் நல்ல புகழ் பெற்ற தெங்கள் நாடு!
நாகரிகத் தில்முதன்மை யுற்ற தெங்கள் நாடு!
தெய்வபத்தி பிறந்ததுவும் எங்கள் வள நாடு!
தேசபத்தி சிறந்ததுவும் எங்கள் வள நாடு!
வையகத்தில் வாழும்வகை காட்டு மெங்கள் நாடு!
மங்கலநன் மனையறத்திற் பொங்கும் வள நாடே!
—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

(12) பிள்ளை ஒழுக்கம்

அன்பை வளர்க்க வேண்டும் - கிளியே !
அறிவைப் பெருக்க வேண்டும் ;
உன்போற் பிறரை யெண்ணி - கிளியே !
உதவி புரிய வேண்டும்.
தெய்வ நினைப்பு வேண்டும் - கிளியே!
தேச நினைப்பு வேண்டும்.
மெய்மை ஒழுக்கம் வேண்டும் - நெஞ்சில்
வீர உறுதி வேண்டும்.
அன்னை சொற் கேட்க வேண்டும் - தந்தை
ஆணைக் கிணங்க வேண்டும்.
தன்னை வணக்க வேண்டும் - பிறர்
தம்மை மதிக்க வேண்டும்.
ஆசிரி யர்க்க டங்கிக் - கிளியே !
அறிவை வளர்க்க வேண்டும்.
தேசம் வாழும் தொழிலில் - மிக்கத்
திறமை ஓங்க வேண்டும்.
காலை மாலை தோறும் - கிளியே !
கடவுள் வணக்கம் வேண்டும்.
வேலை தன்னில் உள்ளம் - ஊன்றி
வெற்றி ஓங்க வேண்டும்.
பிரிய மான கிளியே - தமிழ்
பேசுஞ் செல்வக் கிளியே!
பெரிய ளாகி நாளும் - நல்ல
பேர் சிறந்து வாழ்வாய்!

--யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

8. கிராமப்பாடல்கள்

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் வழங்கிய நம் தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் வாழ்ந்த மக்கள் இசையில் ஆர்வமுற்று அதன் பயனை நன்கு அனுபவித்தவர்கள். பண்டைக் காலத்தில் எதற்கும் பாட்டுத்தான்; குழந்தையைத் தூங்கவைக்கப் பாட்டு; கலியாணம் நடந்தால் பாட்டு; எவரேனும் இறந்தால் பாட்டு; ஊஞ்சலாடப் பாட்டு; கும்மியடிக்கப் பாட்டு; அம்மனை ஆடப் பாட்டு; ஏற்றம் இறைக்கப் பாட்டு; மாடுமேய்க்க, பிணையடிக்க, ஏர் ஓட்ட, வண்டி செலுத்த, நெல்குற்ற, சுண்ணாம்பு இடிக்க எல்லாவற்றுக்கும் பாட்டுதான். அவை இப்போது மறைந்து வருகின்றன: அவற்றுள் சில கீழே தரப்பட்டுள்ளன:

பாரத நாடகம்—விராட பர்வம்

குறிப்பு: பாண்டவர் மாறுவேடம் பூண்டு, விராடதேசத்தில் அஞ்ஞாதவாசம் செய்துகொண்டிருந்தனர். அப்போது அவர்கள் அங்கிருப்பதை எல்லாருக்கும் தெரியக்காட்டி, மீண்டும் அவர்களைக் காட்டுக்கு அனுப்ப ஒரு சூழ்ச்சி செய்கிறான் துரியோதனன். அதன்படி திரிகர்த்தன் என்ற அரசனை அனுப்பி விராட நாட்டு மாடுகளை மடக்கிவரச் செய்கிறான். திரிகர்த்தனுடன் போர் செய்ய விராடன் செல்கிறான். அதே சமயத்தில் விராட நாட்டைத் தென்திசையில் தாக்குகின்றனர் துரியோதனாதியர். அத்தருணத்தில் தனக்கு ஒரு சாரதி இருந்தால் தான் ஒருவனே சென்று பகைவரை விரட்டிவரக்கூடும் என்று வீம்பு பேசுகிறான் விராடமன்னன் மகனாகிய **உத்தரன்**. அதுகேட்ட பேடியின் வேடத்தில் இருந்த அருச்சுனன் உத்தரனுக்குத் தேர் ஓட்ட இசைந்து நின்றான். உத்தரன் மகிழ்ச்சியுடன் புறப்பட்டு வந்தான். ஆனால் எதிரிற் கடல் போல நின்ற சேனையைக் கண்டு

பயந்து, பேடிக்குத் தெரியாமல் தேரினின்று குதித்து ஓட்டம் பிடிக்கிறான். அப்போது அருச்சுனன் பகைவர்களுக்கு முதுகு காட்டாமல் பின் பக்கமாகவே ஓடிவந்து உத்தரனைப் பிடித்துக்கொண்டு அவனுக்குப் புத்தி கூறுகிறான். அதுவே கீழ்வரும் பாட்டு.

இராகம்-காம்போதி-தாளம் ஆதி

பல்லவி

என்ன காரியம் செய்தாய்? - உத்தரா நீ தான்!
என்ன காரியம் செய்தாய்?

அநுபல்லவி

தன்னை அறியாமலே சன்னத்தங்கொண்டங்கே பேசி
இன்னம் நிமிஷமில்லை இதற்குள் மறந்து சீசீ! - (என்ன

சரணங்கள்

1. பத்தனில் பதினொன்றாய் - நீயும் இராமல் வீம்பு
படித்தவர்கள் தலையைக் கிள்ளி - எறிந்து
பசுக்குலங்களை மீட்டு - வருகிறேன் என்று கெண்டை
பதைக்கிறாப்போல் பதைத்துத் துள்ளிச்
சுத்த வீரன்போல் வந்து சோர்வதுனக்குச் சீரோ?
துணைநானிருக்க இச்சத் துருக்கள் உனக்கு நேரோ?
பித்தன் போல் முதுகிட்ட பின்வீரன் என்று பேரோ?
பெண்கள் கூட உன்னைக் கண்டால் நகைத்
திடாரோ! (என்ன)

2. உலகில் ஆறிலும் சாவு - நூறிலும் சாவிந்த
உடல் நிலை யல்ல நீ யேன்மிக வெம்பிப் - படைக்கு
ஒடுகிறாய் வீரர் தம் உயிரைத் துரும்பா எண்ணி
ஒன்னாரை வெல்லவேணு மடதம்பி!
சொலக் கேள் இன்னஞ்சத் துருக்கள் தலையைத் துண்டு
துண்டாக்கி ஜெயமாலை சூடினுமதை விண்டு
புலிபோல் பாய்ந்து பின்னிட்டு போகாமல் திடங்
கொண்டு
போர் முகத்தினில் செத்துப் போனாலும் புகழ் உண்டு
(என்ன)

3. தேரை யாகிலும் ஐயா -- செலுத்திவா நான் சண்டை செய்துன் பகைவரை என் அம்பு -- தன்னால் சிதைத்துன் பசுக்களுடன் -- உனையும் ஊர்க் கிக்கணத்தில் சேர்க்கிறேன் என் சொல்லை நம்பு
வீரர்க்குரைத்த மனு விக்கியாவமு மறந்து
விட்டொளித் தாலுன் புகழ் விளங்கிடுமோ சிறந்து
சாரதி யாயினும் யான் சாற்றுகிறேன் திறந்து
தபனன் குலத்துக் கீனம் வந்ததே நீ பிறந்து (என்)

உத்தரன் பேடிக்குக் கூறுவது

இராகம்—பேகடை : தாளம்—சாப்பு

பல்லவி

நானென்ன சண்டைக்கு—வருவதென்ன எச்சு
நடவாதினி யுன் பேச்சு.

அநுபல்லவி

ஆனாலும் படையோ நீ டாழிபோல் துலங்குது
அப்பா திரும்பிப் பார்த்தால் கெர்ப்பமுங் கலங்குது
[நானென்ன

சரணங்கள்

1. நாடும் எனது; போன — மாடும் எனது; வந்த
நஷ்டமும் எனதாச்சே; உனக்கென்ன?
பாடி படைமேற் செல்ல — நீயேதோ எனை மோசம்
பண்ண அழைக்கிறாய் வே றில்லை உள்ள;
நாடகத் தொழில் செய்யும் பேடி உனக்கேனோ
ராஜ காரியம் நீதி பேச வும் நீ தானோ?
மூடி மிவர்க் கெதிரே நாடிச் செல்வது நானோ!
முப்புரத் தையு மெரித்த தற்பரனும்வரு வானோ;
(நானென்ன)

2. பதிகொடுக் கிறேன்; நின்சொற்—படி. நடக்கிறேன்
பையு மறவேனிப்போ ஒரு கோடி [நின்நட்
நிதிகொடுக் கிறேன்; கரி—பரிகொடுக்கிறே னென்னை
நீவிட்டு விட வேணும் அடி பேடி.
எது எப்படிக் கெட்டாலும் எனக்கென்ன நீ ஓது;
என்வாய்க் கொழுப்பே எனக் கிவ்விணை தரற்கேது
ததி இது மகராசி தயவு செய் தென் மீது
தாயாரிடத்தில் சேர்த்தால் நீயே தெய்வ
மிப்போது. (நானென்)

2. இராம நாடகம்

இராவணன் அநுமானை வரலாறு விசாரித்தல்

இராகம்—செஞ்சுருட்டி : தாளம்—ஆதி

பல்லவி

ஆடடா குரங்கே,— இங்கே வந்த நீ
ஆடடா குரங்கே.

அநுபல்லவி

ஆடடா குரங்கே அறிவாயோ லங்கை
வாசிங் காதனம் போல் வால்இட் டென்னிலும்
மேலிட்டிருக்கிறாய்—(ஆடடா)

சரணங்கள்

1. அச்சம் இல்லாமல், அடங்கிச் செல்லாமல்,
நிச்சய கிங்கரர் நிறுத்த மில்லாமல்,
நிசா சரர்களும், அசோக வனமும்,
திசா திசையில்விழ வீசி எறிந்த நீ (ஆடடா)

2. கம்பத்தின் மேலே காலனைப் போல
செம்புமாலியையும் சேனாதிபதியையும்
கொன்றொருக்காலே
சிட்சை செய்வேனென்று கட்சியுடனே வந்த
அட்சதனைக்கூட பட்சணம் செய்த நீ (ஆடடா)

3. நிந்தனை சீச்சீ! நீ ஒரு பூச்சி!
இந்திர சித்தன் உனை எதிர்க்கவே கண் காட்டி
இடிக்கவோ கட்டி அடிக்கவோ பல்லால்
கடிக்கவோ ரத்தம் குடிக்கவோ நீ (ஆடடா)

3. சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்

காவடிச் சிந்து

கழுகு மலைவளம்

இராகம் - காப்பி : தாளம் - ஆதி

தெள்ளுதமி ழுக்குதவு சீலன்; துதி
செப்பண்ணா மலைக்கநு கூலன்; வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகுமலை வளத்தைத்
தேனே சொல்லு வேனே. 1.

வெள்ளிமலை ஒத்தமாட மேடை முடி
மீதினிலே கட்டுகொடி ஆடை, அந்த
வெய்யவன் நடத்திவரும் துய்யவிரதப் பரியும்
விலகும் படி இலகும். 2.

வீதிதொறும் ஆதிமறை ஓதும் சிவ
வேதியர்க ளோதுசாம கீதம் அதை
மின்னுமலர் காவதனில் துன்னுபட்ட பூவையுடன்
பின்னும் கிள்ளைப் புள்ளும். 3.

சேணமுகிற் குவமை கூறும் உபரி
சிந்தூரங்கள் சிந்துபுக அறும் நின்ற
சித்திரம் சிகர்த்த மின்னார் பற்றிப்பூசும் குங்குமச்
சேறும் காதம் நாறும். 4.

முத்தமிழ்ச்சேர் வித்வசனக் கூட்டம் கலை
முற்றிலு முணர்ந்திடுங்கொண் டாட்டம் நெருங்கில்
முன்னுகின்ற போதுதொறும் தென்மலையில் மேவுகுறு
முனிக்கும் அச்சம் சனிக்கும். 5.

கள்ளவிழ் கடப்பமலர் வாசன் குறக்
கன்னியை விரும்பிடும்வி நோதன் வளர்
கழுகுமலை நகரின் வளமையென் நாவிலடங்
காதே மட மாதே! 6

பரதேசி பாட்டு

1. சித்திரப் பதுமை இது; சிங்காரக் கோயிலிது;
மற்றப் பதுமை எல்லாம் - தங்கமே!
மட்டிப் பதுமையடி - ஞானத் தங்கமே!
மட்டிப் பதுமையடி.

2. சாகுபடிக் கோட்டையிலே சந்தைக்காரன் பேட்டையிலே
ஏக ஜனக் கூட்டமடி - தங்கமே!
எமன் வந்தால் ஓட்டமடி - ஞானத் தங்கமே!
எமன்வந்தால் ஓட்டமடி.

3. தவத்துக் கொருவரடி தமிழுக் கிருவரடி
சவத்துக்கு நால்வரடி - தங்கமே!
சகத்தில் வழக்கமடி - ஞானத் தங்கமே!
சகத்தில் வழக்கமடி.

சுண்ணாம்பு இடிக்கும் பாட்டு

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டது வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி
காகிதம் போட்டான் தோட்டக்காரன்.
தோட்டக் காரன் பணம் வெள்ளிப் பணம்
அது வேடிக்கை காட்டுது சின்னப் பணம்!
வெள்ளிப்பணத்துக்கு ஆசைப்பட்டு
விதி குலைஞ்சாளாம் வீராயி!
பெரிய பணத்துக்கு ஆசைப்பட்டுப்
பதங் குலைஞ்சாளாம் வீராயி!
சின்னப் பணத்துக்கு ஆசைப்பட்டு
சீர் குலைஞ் சாளாம் வீராயி.

உழவுப் பாட்டு

சுற்றி வளைப் போட்டிச் சூரியனைத் தண்டனிட்டு —
சோ ஓ ஓ ஓ!
மடக்கி வளைப்போட்டி மாயவனைத் தண்டனிட்டு —
டிர்ர்ர்!
அடக்கி வளைப்போட்டி அச்சுதனைத் தண்டனிட்டு —
சோ ஓ ஓ ஓ!
போட்ட விரைகளெல்லாம் பொன்னாய் விளையாதோ. —
டிர்ர்ர்!

4. குற்றாலக் குறவஞ்சி

குறி சொல்லும் குறத்தி வருதல்

செங்கைமாத் திரைக்கோல் செங்கோல் நடாத்திக்
கன்னடந் தெலுங்கு கலிங்கராச் சியமும்
தென்னவர் தமிழால் செயத்தம்பம் நாட்டி
மன்னவர் தமக்கு வலதுகை நோக்கி
இன்னகை மடவார்க் கிடதுகை பார்த்துக்
காலமுன் போங்குறி கைப்பல னுங்குறி
மேலினி வருங்குறி வேண்டுவார் மனக்குறி
மெய்க்குறி கைக்குறி விழிக்குறி மொழிக்குறி
எக்குறி யாயினும் இமைப்பினி லுரைக்கும்
மைக்குறி விழிக்குற வஞ்சிவந் தனளே.

தரு

இராகம்—தோடி : தாளம்—சாப்பு

பல்லவி

வஞ்சி வந்தனளே ! மலைக்குற வஞ்சி வந்தனளே.

அநுபல்லவி

வஞ்சி, எழிலபரஞ்சி, வரிவிழி நஞ்சி முழுமற நெஞ்சி பல
வினில்
அஞ்சு சடைமுடி விஞ்சை யமலனை நெஞ்சில் நினைவொடு
மிஞ்சு குறிசொல (வஞ்சி)

1. மும்மையுல கெங்கும் வல்லச் செங்கண் மகளிர்க்கு
நல்ல
செம்மையாக் குறிகள் சொல்ல அம்மேயம்மே
என்று செல்ல (வஞ்சி)

2 சோலையில் வசந்தகாலம் வாலகோகி லம்வந் தாற்போல்
கோலமலை வில்லியார்குற்றாலமலை வாழுங்குற-(வஞ்சி

3. மாத்திரைக் கோலது தன்னைச் சாத்திரக்கண் பார்வை
பண்ணத்
தோத்திர வடிவம் மின்னப் பூத்தமலர்க் கொடி
என்ன (வஞ்சி)

சிவவாக்கியர் பாடல்

கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா ?
கோயிலுங் குளங்களும் கும்பிடுங் குலாமரே !
கோயிலு மனத்துளே குளங்களு மனத்துளே
ஆவதும் அருவதும் இல்லையில்லை யில்லையே.
நட்டகல்லை தேய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?

பட்டினத்தார் புலம்பல்

மெய்வாழ்வை நம்பி விரும்பிமிக வாழாமல்
பொய்வாழ்வை நம்பிப் புலம்பினேன் பூரணமே !
பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
உண்டென்று நம்பி யுடலழிந்தேன் பூரணமே !
மண்பெண்பொன் னாசை மயக்கத்தி லேவிழுந்து
கண்கெட்ட மாடதுபோல் கலங்கினேன் பூரணமே !
உடலுக்குள் நீநின்று உலாவினதைக் காணாமல்
கடுகிமலை தொறும்திரிந்து காலலுத்தேன் பூரணமே !

பாம்பாட்டி சித்தர் பாடல்

எட்டுநாகந் தன்னைக் கையால் எடுத் தாட்டுவோம்;
இந்திர னுலகத்தை இங்கே காட்டுவோம்;
கட்டுக்கடங் காதபாம்பைக் கட்டி விடுவோம்;
கடுவிஷம் தனைக்கக்கி ஆடு பாம்பே !
செப்பரிய மூன்றுலகும் செம்பொன் னாக்குவோம்;
செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம்;
இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம்;
எங்கள்வல் லபங்கண்டு ஆடு பாம்பே !

இடைக்காட்டுச் சித்தர் பாடல்

1. இல்லறமே யல்லவென்ன ஆடுமயிலே! - பத்தி
இல்லவர்க்கு முத்தி சித்தி இல்லைமயிலே!
நல்லறமே துறவறங் காணுமயிலே! - சுத்த
நாதாந்த வெட்டவெளி நாடுமயிலே!

2. கற்றாணைப் போல் மனதைக் கட்டுமயிலே! - வரும்
காலனையும் தூரத்தில் ஓட்டுமயிலே!
பற்றா டுறவலே பாயு மயிலே! - அகப்
பற்றுச்சற் றில்லாமற் பண்ணுமயிலே!

குதம்பைச் சித்தர் பாடல்

1. காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்கள் ஏதுக்கடி - குதம்பாய்!
கோலங்கள் ஏதுக்கடி ?

2. வெங்காய முண்டு மிளகுண்டு சுக்குண்டு
உண்காய மேதுக்கடி ? - குதம்பாய்!
உண்காய மேதுக்கடி ?

3. மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பார்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி ? - குதம்பாய்!
தேங்காய்ப்பால் ஏதுக்கடி ?

4. தாவார மில்லை தனக்கொரு வீடில்லை
தேவார மேதுக்கடி ? - குதம்பாய்
தேவார மேதுக்கடி ?

கடுவெளி சித்தர் பாடல்

1. நந்த வனந்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி,
கொண்டு வந்தா னொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!
2. நல்ல வழிதனை நாடு; - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு.
வல்லவர் கூட்டத்தில் கூடு; அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு!

அழுகணி சித்தர் பாடல்

எண்சாண் உடம்படியே! எழிரண்டு வாயிலடி!
பஞ்சாயக் காரர் ஐவர் பட்டணமுந் தானிரண்டு.
அஞ்சாமற் பேசுகிறாய் ஆக்கினைக்குத் தான்புகுந்து
நெஞ்சார நில்லாமல், என்கண்ணம்மா!
நிலைகடந்து வாடுரண்டி.
ஊத்தைச் சடலமடி! உப்பிருந்த பாண்டமடி!
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை.
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊத்தைச் சடலம் விட்டு
உன்பாதம் சேரேனோ.

பூசாரிப் பாட்டு

சாலையிலே என் ஐயா தங்கிடும் நல்
சப்பாணி என் ஐயா பிள்ளையாரே!
கயமுகனை என் ஐயா கருவறுத்த
கணபதியே என் ஐயா காருமையா!
பானைவயி றென் ஐயா தான்குலுங்க,
பாரதும்பி என் ஐயா முன்னசைய,
வீரமுடன் என் ஐயா கொம்பொடித்து
வியாசருக்கு என் ஐயா பாரதமும்
எழுதியருள் என் ஐயா விக்கினரே
எழுந்தருளும் என் ஐயா தீபமதில். —சாலையிலே.

ஆறெழுத்தே முருகையா ஆறுமுகம்!
அறுகோணம் முருகையா ஒருடல்தான்;
சரவணத்தில் முருகையா பிறந்ததனால்
சரவணராய் முருகையா முன்னமர்ந்தீர்.
கர்ப்பூர முருகையா காவடியை
கதிர்காமம் முருகையா ஏந்திவர,
இடும்பர் நல்ல முருகையா கடம்பருமாய்
இருபுறமும் முருகையா சூழ்ந்துவர,
வள்ளி நல்ல முருகையா வலதுபுறம்
தெய்வயானை முருகையா இடதுபுறம்
இவர் நடுவே முருகையா கானமயில்
இருந்து நல்ல முருகையா ஆடிவர. —ஆறெழுத்தே.

ஊஞ்சல் லாலி

இராகம் - ஆனந்த பைரவி

லாலி! கோபாலா லாலி! ஸ்ரீலலித
லாலி! ஸ்ரீசீல லாலி!
லாலி! வேங்கடேச லாலி! ஹரிஹரி
பாலனாய் வந்த லாலி.

1. ஆதியந்த மற்ற நாதா உந்தனுடை
பாதம் பணிந்தேன் ஸ்ரீதா!
வேத வேதாந்த போதா என்றனை
ஆதரிக்க வேணும் பாதா. (லாலி)

2. கல்லைப் பெண்ணாகக் கண்டீர்; ஜனகனுடை
கன்னியரை மாலை கொண்டீர்;
வல்ல பாசனைத் தீண்டி பலந்தன்னை
வாங்கி அயோத்தி சென்றீர். (லாலி.)

சேவல் பாட்டு

என்றன் சேவல் போன இடம் எனக்குத் தெரியாதே;
தெரிந் திருந்தால் என் றனக்குத் தெரியச் சொல்லுவீரே!
முத்து மணி கட்டி எந்தன் முன்னேவிட்ட சேவல்!
முன்னே விட்ட சேவல் தனை மூடிவைத்தவர் யாரோ?
பவழமணி கட்டி இப்போ பார்த்துவிட்ட சேவல்!
பார்த்து விட்ட சேவல் தனைப் பதுங்கவைத்தவ ராரோ?
பச்சை றெக்கை பளபளென்ன பறந்துவரும் சேவல்!
பறந்து வரும் சேவல் தனைப் பார்த்தணைத்தவர் யாரோ?
வண்ண மயில் ரேகை மின்ன வருகு மெந்தன் சேவல்!
வருகு மெந்தன் சேவல்தனை வழிமறித்தவர் யாரோ?
கூவுங் குயில் தொனியுடனே கூவிவரும் சேவல்!
கூவி வரும் சேவல் தனை கூப்பிட்டவர் யாரோ. ?

ஏற்றப் பாட்டு

பிள்ளையாரே வாரீர்; பெருமாளே வாரீர்!
வாருமுமை பாலா, காருமகா தேவா!
கருணை கடாக்ஷா கயிலைகிரி வாசா!
கம்பர்கொடி ஏற, நம்ப துணையாக
வந்த பிள்ளையார்க்கு என்னென்ன படைப்போம்!
பச்சரிசி தேங்காய் பயறு பணியாரம்
கொள்ளுடன் துவரை கோதுமை கடலை
எள்ளுடன் அவலு இரு நூறு கரும்பு
மூங்கில் மொகிபோல முந்நூறு கரும்பு
அரிவாள்பிடிபோல ஐந்நூறு கரும்பு
இத்தனையும் சேர்த்து செக்கினிலே கொட்டி
சேங்கன்றுகள் பூட்டி மூன்று சுற்றுய் ஓட்டி
மொத்தைகள் உருட்டிப் படைப்போமையா தேவா!

இருபதியா லொண்ணு—

9. செய்திகள் அனுப்புவதும், பெறுவதும்

நாம் அருகில் உள்ளவர்கட்கும், நமது குரல் ஒலி கேட்கக்கூடிய தொலைவில் உள்ளவர்கட்கும் வாயாற் செய்திகளை அறிவித்தல் எளிது. பேச்சொலி எட்டாத தூரத்தில் உள்ளவர்கட்கு குழூஉக் குறிகளின் மூலம் செய்தி அனுப்பலாம். குழூஉக்குறி என்பது என்ன ? ஒரு குழுவினர் பிறர் அறியாதபடி பேசிக்கொள்வதற்கும், செய்திகள் அனுப்புவதற்கும் ஏற்படுத்திக் கொள்ளும் குறிகளே குழூஉக் குறிகள் எனப்படும். இத்தகைய குழூஉக் குறிகள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவை போர்களேயாம். போர்களில் பற்பல இடங்களில் தங்கி இருக்கும் படை வீரர் தங்கள் பகைவர் அறியா வண்ணம் தம் குழுவினர்க்குச் செய்திகள் அனுப்பப் பல முறைகளைக் கையாண்டனர் என்பதை நூல்களின் வாயிலாக அறிகிறோம். அவற்றுள் சில உங்களுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

பண்டைக் காலத்தில் ஆப்பிரிக்காவில் மக்கள் சிறு சிறு கிராமங்களில் வசித்து வந்தார்கள். ஒரு கிராமத்தை நோக்கிப் பகைவர்கள் வருவதை அக் கிராமத்தார் அறிந்தால், உடனே அவர்கள் ஒரு குன்றின் மீதோ அன்றி உயர்ந்த மேட்டின் மீதோ தழைகளுக்கு நெருப்பிட்டுப் புகையைத் தோற்றுவிப்பார்கள். இரவாயின் கட்டைகளைக் குவித்து நெருப்பு மூட்டுவார்கள். இவற்றைக் கண்ட அடுத்த கிராமத்தார் அவ்வாறே செய்து மற்றக் கிராமத்தவர்க்கு அறிவிப்பர். இங்ஙனம் பகைவர் வரும் செய்தி எல்லாக் கிராமங்களுக்கும் பரவிவிடும்.


சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஆஸ்திரியப் படையைச் சேர்ந்த ஒரு படைத்தலைவர் இருந்தார். காப்டன் ஜான் ஸ்மித் (Captain John Smith) என்பது அவர் பெயர். அவர் தம்முடைய வீரர்க்குத் தீவர்த்திகளினால் அறிவிக்கத் தக்க குழூஉக் குறிகளைக் கற்பித்து

வந்தார். வீரர்களும் அவற்றை ஆர்வத்துடன் கற்றுத் தேர்ச்சி பெற்றார்கள்.

ஒரு சமயம் காப்டன் ஜான் ஸ்மித்தின் தலைமையில் இருந்த படைகளுள் ஒன்று துருக்கியரால் வளைத்துக் கொள்ளப்பட்டது. அவர்களுக்கு உதவி புரிய துணைப் படையொன்றைக் கொண்டுவந்த ஸ்மித் அதைச் சற்றுத் தூரத்தில் நிறுத்திவிட்டு, ஒரு குன்றின் மீது இரவில் ஏறிப் பகைவரால் வளைக்கப்பட்டிருந்தவர்கட்குத் துணைப் படை வந்திருந்த செய்தியையும், அவர் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்ற செய்தியையும் தீவர்த்திக் குறிகளால் தெரிவித்தார். அவற்றின் பொருளைப் பகைவர்களான துருக்கியர் அறியாமையால், அவர்களால் வளைக்கப்பெற்றிருந்த ஆஸ்திரிய வீரர்களுக்கு எளிதில் வெற்றியும் விடுதலையும் கிடைத்தன.

பல ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் நடைபெற்ற உள் நாட்டுப் போர் ஒன்றில் காப்டன் கிளேளரி என்பர் ஈடுபட்டார். அவர் சாரணர் இயக்கத்தைச் சேர்ந்தவர். மோர்ஸ் முறை எனப்படும் குழூஉக் குறி முறையிற் செய்திகள் அனுப்ப நன்கறிந்தவர். ஆதலால் அவர் தம் படையினர்க்கு அம்முறையில் நல்ல பயிற்சியளித்திருந்தார். போர் நிகழ்ந்துகொண்டிருந்தபோது அவர் வெள்ளப் பெருக்குற்றிருந்த ஓர் ஆற்றுக்கு அக்கரையில் இருந்த தம்முடைய வீரர்கட்கு ஒரு செய்தியனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. மோர்ஸ் முறையில் ஊது குழலாலும், டார்ச் விளக்காலும் செய்திகள் அனுப்ப முடியுமாயினும் அவை புயலும் மழையும் வீசிக் கொண்டிருந்த அத்தருணத்தில் பயன்படா என்றறிந்த கிளேளரி தமது அருகில் இருந்த நீராவி இயந்திரத்திற்குத் தீ மூட்டி, நீராவி உண்டாக்கி, அவ்வியந்திரத்தின் ஊது குழலின் மூலம் நீண்ட ஒலியும், குறுகிய ஒலியும் எழச் செய்து தாம் அனுப்ப விழைந்த செய்தியைத் தம் படையினர்க்குத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகள் குழூஉக் குறிகள் நமக்கு எவ்வகைகளில் உறுதுணையாக இருக்கும் என்பதை நன்கு விளக்குகின்றன. ஆதலால், சுதந்தர இந்தியாவில் வாழும் இளைஞர்களாகிய உங்களுக்கு இக்குறிகள் தெரிந்திருக்க வேண்டுவது அவசியமாகும். இக்காலத்தில் பெருவழக்கில் உள்ள இக்குறிகள் இரண்டாகும். ஒன்று செமபோர்முறை; மற்றொன்று மோர்ஸ் முறை. இவற்றுள் செமபோர் முறை எனப்படும் கைகாட்டிமர முறை மூன்றும் பாரத்துக்குரிய நூலில் நன்கு விளக்கப்பட்டிருப்பதாலும், அம்முறையில் நீங்கள் நன்கு பழகி இருப்பீர்கள் ஆதலாலும், அம்முறையை விளக்கும் ஈண்டு தரப்பட்டுள்ள படங்கள் நீங்கள் மறந்திருப்பினும் அதனை உங்களுக்கு எளிதில் நினைவுக்குக் கொண்டுவருமாதலாலும், அதனை விடுத்து மோர்ஸ் முறையைப் பற்றி மட்டும் இங்கே சில விளக்கங்கள் தரப்படுகின்றன. அவற்றை நன்கு கவனித்துப் பழக வேண்டுவது உங்கள் கடமையாகும்.




செமபோர் முறை

செமபோர் முறை



மோர்ஸ்முறை: 1872-ஆம் ஆண்டில் சாம்யுவல் மோர்ஸ் (Samuel Morse) என்பவரால் இக்குழூஉக்குறி முறை கண்டுபிடிக்கப்பட்டது. இம்முறையிற் செய்திகள் அனுப்பக் கொடிகள், ஊதுகுழல், டார்ச் விளக்கு, தந்தி அனுப்பும் கருவி ஆகியவற்றை உபயோகிக்கலாம். இம்முறையிற் செய்தி அனுப்புபவர் கவனிக்க வேண்டியவைகளாவன:

இது புள்ளிகளையும், குறுங்கோடுகளையும் கொண்ட முறையாகும். மூன்று புள்ளிகள் சேர்ந்தால் ஒரு கோடாகும். அதாவது மூன்று புள்ளிகளை ஒன்றன் பக்கத்தில் ஒன்று இருக்கும்படியும் ஒன்றை ஒன்று தொடும்படியும்



மோர்ஸ் முறையில் செய்தியனுப்பும் கருவி

வைத்தால் காணப்படும் நீளமே ஒரு குறுங்கோட்டின் நீளமாகும். 80-ஆம் பக்கத்திற் காட்டியுள்ளபடி ஒவ்வோர் ஆங்கில எழுத்தைக் காட்டவும், ஒவ்வோர் எண்ணைக் குறிக்கவும் புள்ளிகளும் கோடுகளும் அமைக்கப் பெற்றிருப்பதைக் கவனியுங்கள்.

மோர்ஸ் முறையில் செய்திகள் அனுப்பத் தொடங்கும்போது செய்தியைப் பெறுகின்றவன் செய்தியைத் தெரிவிக்கும் எழுத்துக் குறிகளையே எதிர் பார்ப்பான். ஆதலால் எண்களை அனுப்பவேண்டுமானால், "நான் எண் குறிகளை அனுப்புகிறேன்" என்பதற்கு அறிகுறியாக உள்ள இரண்டு புள்ளிகள், ஒரு கோடு, இரண்டு புள்ளிகளை (..—..) காட்டவேண்டும். அதே போலத் தவறாக அனுப்பப்பட்ட செய்தியை 'நீக்கிவிடு' அல்லது

‘அழித்துவிடு’ என்பதற்கு அறிகுறியாக எட்டுப்புள்ளிகளை (........) காட்டவேண்டும். இம்முறையைக் கொடிகளினாற் காட்ட வேண்டுமானால் முதலில் ஒரு கொடியை இரு கைகளிலும் பற்றி முகத்துக்கு நேரே பிடித்துக்கொண்டு தயார் நிலையில் நிற்க வேண்டும். பிறகு புள்ளியைக் காட்டவேண்டுமானால், தயார்நிலையில் முகத்துக்கு நேரில் பிடிக்கப்பட்ட கொடியை வலத்தோள் வரையிற் கொண்டுசென்று மீண்டும் முகத்துக்கு நேரில் நிறுத்த வேண்டும். கோட்டைக் காட்டவேண்டுமானால், முகத்துக்கு நேரில் உள்ள கொடியை முதலில் வலத்தோள் வரை கொண்டு சென்று மீண்டும் இடத்தோள்வரை கொண்டு சென்று பிறகு முகத்துக்கு நேரிற்கொண்டு நிறுத்தவேண்டும்.

மோர்ஸ் முறையில் அனுசரிக்கும் குழூஉக் குறிகள்

1	• — — — —	A	• —	N	— •
2	• • — — —	B	— • • •	O	— — —
3	• • • — —	C	— • — •	P	• — — •
4	• • • • —	D	— • •	Q	— — • —
5	• • • • •	E	•	R	• — •
6	— • • • •	F	• • — •	S	• • •
7	— — • • •	G	— — •	T	—
8	— — — • •	H	• • • •	U	• • —
9	— — — — •	I	• •	V	• • • —
10	— — — — —	J	• — — —	W	• — —
		K	— • —	X	— • • —
		L	• — • •	Y	— • — —
		M	— —	Z	— — • •

இம்முறையை ஊதுகுழலின் மூலம் உபயோகிக்கும்போது குறுகிய ஒலி புள்ளியையும், நீண்ட ஒலி கோட்டையும் குறிக்கும். இம்முறையில் டார்ச் லைட்டைக் கொண்டு செய்தியனுப்புவதாயின், புள்ளியைக் குறிக்க

ஒரு விநாடி நேரமும், கோட்டைக் குறிக்க மூன்று விநாடி நேரமும் விளக்கு எரிதல் வேண்டும்.

இம் மோர்ஸ் முறையில் கீழ்க் குறிக்கப்பட்டவை யும் அறியவேண்டியவை :

1. V E V E V E
   ...‒. ...‒. ...‒.
   இவை "செய்தியை வாங்க ஆயத்தமாக இரு," என்று பொருள் படும்.

2. K
   ‒.‒
   "நான் தயாராக இருக் கிறேன் ; நீ செய்தி தரலாம்" என்பது பொருள்.

3. Q
   ‒ ‒ .‒
   "சற்றுப் பொறு; செய் தியை வாங்க நான் தயாரா யில்லை," என்பது பொருள்.

4. A R
   .‒ ; .‒.
   "செய்தி முடிந்தது" என்பது பொருள்.

5. R
   .‒.
   "செய்தியைச் சரியாகப் பெற் றேன்" என்பது பொருள்.

6. ....
   "அழித்துவிடு" என்பது பொருள்.

7. G B
   ‒ ‒ . ; ‒...
   "வணக்கம், போய்வருகிறேன்" என்பது பொருள். செய்தி முடிந்த பிறகு குறிக்கப் பெறு வது.

செய்திகள் அனுப்புபவரும், பெறுபவரும் கவனிக்க வேண்டிய பிற விதிகள் :

1. செய்தி அனுப்புபவருக்கும், பெறுபவருக்கும் இடையில் மறைக்கத் தக்க தடைகள் இருத்தல் கூடாது.

2. கொடிகளால் செய்திகள் அனுப்பும்போது கைகளை வளைக்காமல் நேரே பிடிக்க வேண்டும்.

3. தவருகச் செய்தி அனுப்பினல் அதை அவ்வப் போது திருத்தி விடவேண்டும்.

4. ஒரு நிமிஷத்திற்கு முப்பது எழுத்துகள் அனுப் பப் பழகுதல் வேண்டும்.

5. செய்தி சரியாக இல்லை என்ற சந்தேகம் ஏற் பட்டால் உடனே திருப்பிச் சொல்லும்படி கேட்க வேண்டும்.

6. செய்தி அனுப்பும்போது கைகளைத் தவிர, உட லின் எப்பாகமும் அசையக் கூடாது.

7. செய்தி பெறுவது முடிந்தவுடனே மீண்டும் அத னைக் கூறச்சொல்லி ஒப்பிட்ட பிறகு, "போய் வருகிறேன், வணக்கம்" என்னும் சொற்களை அனுப்ப மறத்தல் கூடாது.

பொதுவாக, "செமபோர்" முறையைக் காட்டிலும், "மோர்ஸ்" முறையில் செய்தி யனுப்புவதற்கு அதிகப் பயிற்சிவேண்டும். ஆதலால் அடிக்கடிப் பழகுதல் அவசிய மாகும்.

10. பொது ஸ்தாபனங்கள்

குடிமக்களுக்கு எல்லாத் துறைகளிலும் நன்மை புரிவதே அரசியலாரின் கடமை. ஆதலால் நமது இந்திய யூனியன் அரசியலாரும், நமது சென்னை இராச்சியத்தை ஆட்சிபுரியும் அரசியலாரும் குடிமக்களின் நன்மைகளைக் கோரி, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பல ஸ்தாபனங்களை நிறுவியுள்ளார்கள். அவற்றுள்



முக்கியமானவை இருப்புப்பாதை, தந்தி தபால் ஸ்தாபனங்கள், ஊர்ப்பாதுகாப்புச் சாவடிகள் (போலீஸ்), நீதி மன்றங்கள், ஸ்தலஸ்தாபனங்கள், நிதி நிலையங்கள் முதலியனவாம். இவற்றுள் ஒவ்வொன்றைப் பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும்.

இருப்புப் பாதை :

ஒரு நாட்டின் முன்னேற்றத்து இன்றியமையாதவற்றுள் வாணிகமும் ஒன்று. நாட்டின் ஓரிடத்தில்

இருந்து தொலைவில் உள்ள பிற இடங்களுக்கு வாணிகப் பொருள்களை விரைவில் அனுப்ப உதவியாக இருப்பது இருப்புப்பாதையே. அன்றியும், நாட்டில் குழப்பங்கள் எற்பட்டால் குழப்பமேற்படும் இடங்களுக்கு இராணுவ வீரர்களை அனுப்பி, அக்குழப்பங்களை எளிதில் அடக்குவதற்கு அரசியலாருக்குத் துணைபுரிவது இருப்புப் பாதையே. மேலும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு விரைவில் தபால்களை அனுப்ப உதவியாக இருப்பதும் இருப்புப்பாதையே. இவையன்றி நாட்டு மக்கள் தாங்கள் விரும்பிய இடங்களுக்குக் காலதாமதமின்றிக் குறிப்பிட்ட நேரத்தில் செல்வதற்குத் துணையாக இருப்பதும் இருப்புப் பாதையே. ஆதலால் ஒரு நாட்டின் நலனுக்கு இருப்புப்பாதை எத்துணை பயனுள்ளது என்பதை வற்புறுத்த வேண்டுவதில்லை. நமது நாட்டு இருப்புப்பாதைகள் சமீபகாலம் வரையில் தனிப்பட்ட கம்பெனிகளின் ஆதிக்கத்திலும் பராமரிப்பிலும் இருந்தன. இப்போது இருப்புப்பாதைகளை நமது இந்திய யூனியன் அரசியலார் கைக்கொண்டு பராமரித்து வருகின்றனர்.

இருப்புப்பாதைகளிற் பலவகை உண்டு. 'பிராட்கேஜ்' எனப்படும் அகன்ற பாதையும், மீட்டர்கேஜ் எனவழங்கும் பாதையும், நாரோகேஜ் (Narrow Gauge) எனவழங்கும் குறுகிய பாதையும் அவற்றுள் முக்கியமானவை. இப்பாதைகளிற் செலுத்தப்படும் வண்டிகளில் நான்கு வகை உண்டு. தபால்களைக் கொண்டு செல்வது மெயில் (Mail) எனப்படும். துரிதமாகச் செல்ல விரும்பும் பிரயாணிகள் ஏறிச் செல்வது எக்ஸ்பிரஸ் (Express) எனப்படும். மெயிலும் எக்ஸ்பிரஸும் வேகமாகச் செல்ல வேண்டியவை. ஆதலால், அவை எல்லாப் புகைவண்டி நிலையங்களிலும்நிற்பதில்லை. பெரியநிலையங்களில் மட்டுமே நிற்கும். அன்றியும் இவற்றிற் பிரயாணம் செய்யக் கட்டணமும் சிறிது அதிகம் தரவேண்டும். இவையன்றி

எல்லா நிலையங்களிலும் நின்று செல்லும் வண்டிக்குப் பாஸஞ்சர் (Passenger train) என்பது பெயர். மெயில் எக்ஸ்பிரஸ் வண்டிகளின் வேகத்தைக் காட்டிலும் பாஸஞ்சரின் வேகம் சிறிது குறைவாகவே இருக்கும். அன்றியும் கட்டணமும் குறைவுதான். இம் மூவகை வண்டித் தொடர்களிலும் சாதாரண மக்கள் செல்வதற் குரிய மூன்றும் வகுப்பு வண்டிகள் தவிர, நடுத்தர வகுப்பு (Inter class), இரண்டாம் வகுப்பு (Second class), முதல் வகுப்பு (First class), என்று கூறப்படும் உயர்தர வகுப்பு வண்டிகள் இணைக்கப்பட்டிருக்கும். இவற்றுள் ஒவ் வொன்றிலும் பிரயாணிகள் இருக்கவும் படுக்கவும் மெத்தைகளும், மின்சார விசிறிகள், முகம் பார்க்கும் கண்ணாடிகள், முகம் கைகால் சுத்தம் செய்ய நீர்த் தொட்டிகள் முதலிய வசதிகள் அமைக்கப் பெற்றிருக் கும். இவ்வசதிகள் நடுத்தர வகுப்பைவிட இரண்டாம் வகுப்பில் அதிகமாகவும், இரண்டாம் வகுப்பைவிட முதல் வகுப்பில் அதிகமாகவுமிருக்கும். இவ்வசதிகளுக்கு ஏற்றவாறே கட்டணங்களும் அதிகம் செலுத்த வேண் டும். செல்வர்கள் தங்கள் செல்வ நிலைக்கேற்றவாறு இவற்றிற் பிரயாணம் செல்வார்கள். இதுவரையில் குறிக்கப்பட்ட மூவகைப் பிரயாணி வண்டிகள் தவிர, சாமான்களை மட்டும் ஏற்றிச் செல்லும் வண்டிகளும் உண்டு. இவை சரக்கு வண்டி (Goods Train) எனப் பெயர் பெறும். நம் நாட்டு வாணிகப் பொருள்களும் பிறவும் இவ்வண்டிகளில் குறைந்த செலவில் சுருங்கிய நேரத்தில் தொலை விடங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

புகைவண்டித் தொடரில் பிரயாணம் செய்பவர் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் மேலும் பல உண்டு. அவற்றைக் கவனிப்போம். பிரயாணிகள் தாங்கள் செல்ல விரும்பும் புகைவண்டி நிலையத்தில் நிற்கக் கூடிய வண்டிகள் எவை என்றும், அவை எந்த நேரத்தில்

புறப்படுகின்றன என்றும் அறிதல் வேண்டும். மெயில், எக்ஸ்பிரஸ் வண்டிகட்கும் பாஸஞ்சர் வண்டிகட்கும் கட்டணங்கள் வேறுபாடுமாதலால், கட்டணத்தையும் தெரிந்து கொள்ளவேண்டும். அன்றியும் தாங்கள் செல்லும் இடத்திற்கு இடைவழியில் எங்கேனும் வண்டிமாற்ற வேண்டுமா என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். இவ்விஷயங்கள் அனைத்தும் அடங்கிய விளக்கப் புத்தகங்கள் (Guide books) பெரிய புகைவண்டி நிலையங்களில் குறைந்த விலைக்குக் கிடைக்கும். இவை பிரதேசமொழிகளிலும் கிடைக்கும். ஆதலால் எம்மொழியைக் கற்றவராயினும் அம்மொழியிலுள்ள 'கைட்' புத்தகங்களை வாங்கித் தங்களுக்கு வேண்டிய விஷயங்களை அவற்றினின்று அறிந்து கொள்ளலாம். கல்வியறிவில்லாதவர் புகைவண்டிநிலையங்கள் பெரியவையாயின் அவற்றில் அமைக்கப் பெற்றிருக்கும் விசாரணை அலுவலகத்தில் (Enquiry office) விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். நிலையங்கள் சிறியவையாயின் அவற்றின் அதிகாரிகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியம்.

நமது நாட்டில் இன்னும் திருந்திய சமூகப்பழக்கங்கள் மக்களுக்கு ஏற்படவில்லை. இக்குறையால் ஏற்படும் இன்னல்கள் எண்ணற்றவை. இரயில் பிரயாணம் செய்பவர் தாங்கள் ஏறிச் செல்லவேண்டிய வண்டி புறப்படும் நேரத்துக்குக் குறைந்தது அரைமணி முன்னதாகவே செல்லவேண்டும். அவ்வாறுசென்று, கேட்டறியவேண்டியவற்றை அறிந்துகொண்டு, ஒருவர் பின் ஒருவராக வரிசைமுறை (queue) யில் நின்று ஒருவரை ஒருவர் தள்ளாமலும், நெருக்காமலும், மிதிக்காமலும் அமைதியாகப் பிரயாணச் சீட்டு (Ticket) வாங்க வேண்டும். திருந்திய நாகரிக முள்ளவர் இவ்வாறு செய்வர். ஆனால் நமது நாட்டில் கல்விகற்ற மக்களுங்கூட ஒழுங்கு மீறி நடப்பதை நாம் காண்கிறோம். பிரயாணச்சீட்டு வாங்கு மிடத்தில்

பிரயாணிகள் ஒருவரை யொருவர் தள்ளுவதும், நெருக்கு வதும், மிதிப்பதும், அவற்றால் ஏற்படும் சச்சரவுகளும், சண்டைகளும், கூக்குரலும் கவனித்துப் பார்ப்பவர் களுக்கு மிகமிக அருவருக்கத்தக்க செயல்களாகத் தெரி யும். அன்றியும் மக்கள் ஒற்றுமை உணர்ச்சியும் ஒழுங்கு உணர்ச்சியுமின்றி நடந்து கொள்வதால் ஜேப்படிக்காரர் கள் ((Pick - pockets) தங்கள் தொழிலை எளிதில் நடத்த வாய்ப்புண்டாகிறது. ஆதலால் மாணவர்களாகிய நீங்கள் இக்குறைகளை அகற்றித் திருந்திய சமூகப் பழக் கங்களை மேற்கொள்ளவேண்டும்.

பிரயாணச்சீட்டு வாங்கு மிடத்தில் காணப்படும் கோரக் காட்சியை விட நம் மக்கள் புகைவண்டிகளில் ஏறும்பொழுது ஏற்படும் இன்னல்கள் விவரிக்க முடி யாதவை. வண்டிகள் பல இருந்தாலும் எல்லாரும் ஒரே வண்டியில், ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டும், மிதித் துக்கொண்டும், இடித்துக் கொண்டும் ஏறுவது மதியீன மான செயல். ஒரு வண்டியில் கூட்டம் எத்துணை அதிகமிருந்தாலும் அதன் கதவுகள் திறக்கப்பட்டிருப் பதைக் கண்டு, அதிலேயே ஏறுவதும், கூட்ட மின்றிக் கதவுகள் மூடப்பட்டிருக்கும் அடுத்த வண்டிக்குச் செல்ல எண்ணுமையும் அவர்களின் அறிவீனத்தை நன்கு விளக்கும்.

இங்ஙனம் ஒருவரை யொருவர் தள்ளிக்கொண்டு வண்டியினுள் ஏறிவிட்ட சிலர் தாங்கள் அமரும் பீடம் முழுவதையும் தங்களுக்கே உரிமையாக்கிக்கொள்ள விரும்பி, அப்பீடங்களின் மீது மூட்டைகளை வைத்தும், படுக்கைகளை விரித்தும், தாங்களே படுத்துக் கொண்டும், பிற பிரயாணிகளுக்கு இடம் தர மறுப்பது அறிவீனத் தின் சிகரமெனக் கொள்ளலாம். இத்துறப் பழக்கங்கள் கல்லாதவரைக் காட்டிலும் கற்றவர்களிடமே வேரூன்றிக்

கிடக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. புகை வண்டி, பிரயாணிகள் அனைவருக்கும் உரியது என்பதையும், அதில் தமக்கு எத்துணை உரிமை உண்டோ, அத்துணை உரிமை ஒவ்வொரு பிரயாணிக்கும் உண்டு என்பதையும் கற்றவரும் மற்றவரும் உணர வேண்டுவது அவசியமாகும்.

புகைவண்டித் தொடர் போய்க் கொண்டிருக்கும் போது, வண்டியினுள் ஏதேனும் கலகம், குழப்பம் போன்ற காரணங்களுக்காக வண்டியை நிறுத்த வேண்டுமானல் அபாய அறிவிப்புச் சங்கிலியின் கைப்பிடியை இழுத்தல்வேண்டும். உடனே வண்டி நின்று விடும். சங்கிலி இழுக்கப்பட்ட வண்டியின் அடையாளத்தைக் காட்ட ஒரு சட்டம் அவ்வண்டியினின்று கை காட்டி போல நீட்டிக்கொண்டு நிற்கும். அதன் உதவியால் அதிகாரிகள் சங்கிலி இழுக்கப்பட்ட வண்டிக்கு வந்து விடுவார்கள். தக்க காரணமின்றிக் குறும்புக்காக எவரேனும் சங்கிலியை இழுத்தால் அவருக்கு ஐம்பது ரூபாய் வரையில் அபதாரம் விதிக்கப்படும்.


நெடுந்தூரம் பிரயாணம் செய்யவேண்டியவர்கள் இடைவழில் உணவு விடுதிகள் உள்ள புகை வண்டி நிலையத்தில் உணவு கொள்ளலாம். எக்ஸ்பிரஸ், மெயில் போன்ற வண்டிகளில் சிற்றுண்டிகள் விற்பதற்கென ஒரு பெட்டி சேர்க்கப் பெற்றிருக்கும்.

ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் பிரயாணிகள் தங்குவதற்கெனத் தனி விடுதிகள் உண்டு. புகைவண்டியில் தினந்தோறும் பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்கட்கும், மாணவர்க்கும் தினந்தோறும் பிரயாணச்சீட்டு வாங்கும் தொல்லையை அகற்ற 'சீசன் டிக்கட்டு' (Season Ticket) முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது எல்லா வகுப்புகளுக்கும் ஒரு மாதம் அல்லது மூன்று மாதங்கட்கு

வழங்கப்படும். இம் முறையால் தினந்தோறும் பிர யாணச் சீட்டு வாங்குவதால் ஏற்படும் செலவைவிடச் செலவு குறையும். இத்தனை வசதிகள் இருப்பினும் நமது நாட்டு வண்டிகளில் இன்னும் மேல் நாட்டுப் புகைவண்டி களில் பிரயாணிகளுக்குக்கிடைக்கும் வசதிகள் அனைத்தும் அமைக்கப்படவில்லை. அவை விரைவில் கிடைக்கலாம்.

தபால் இலாக்கா :

தபால் இலாக்காவால் நாம் அடையும் நன்மைகள் போற்றத் தக்கவை. உள் நாட்டிலும் அயல் நாடுகளிலும் உள்ளவர்களோடு மிகக் குறைந்த செலவில் கடிதப்



போக்கு வரவு செய்யவும், சிறு பொருள்களை அனுப்ப வும், பணம் அனுப்பவும், பணத்தைச் சேமித்து வைக்க வும் இத்தபால் இலாக்கா உதவியாக இருக்கிறது. இதிற் பல பிரிவுகள் உண்டு. அவற்றைப் பற்றிக் கவனிப்போம் :

தபால் பில்லைகள் (Stamps) : தபால் நிலையத்தில் தபால் கார்டுகள், உறைகள், எல்லா வகையான பில்லை கள், மற்றுமுள்ள நமூனக்கள் அனைத்தும் "தபால் பில்லை கள்" என்று குறிக்கப்பட்டுள்ள இடத்திற் கிடைக்கும்.

பதிவுக் கடிதங்களும், சிப்பங்களும் (Registered letters and packets) : நாம் சாதாரணமாக அனுப்பும் கார்டுகளும் கடிதங்களும் விலாசதாரர்களுக்குப் போய்ச் சேருமென்றாலும், நிச்சயமாக அவை போய்ச் சேர்வதற்கும், விலாசதாரர்களிடமிருந்து கடிதம் சேர்ந்ததென அத்தாட்சி பெறுவதற்கும் அனுசரிக்க வேண்டிய முறை ஒன்று உண்டு. அதற்குப் 'பதிவு முறை' என்பது பெயர். இவ்வாறு பதிவு செய்யப்படும் கடிதத்திற்கு நான்கணா தபால் பில்லை ஒட்டவேண்டும. அத்தாட்சி ரசீது (Acknowledgement receipt) வேண்டுமானால் மேலும் ஓரணா பில்லை ஒட்டவேண்டும். விலையுயர்ந்த பொருள்களையும் இம் முறையில் அனுப்பலாம். ஆனால் அவற்றின் மதிப்பு 3,000 ரூபாய்க்கு மேலிருத்தல் கூடாது. இதற்கு ரிஜிஸ்தர் இன்ஷ்யூர் (Insure) முறை என்பது பெயர். இம்முறைப்படி ரிஜிஸ்தர் கட்டணமாகிய நான்கணாவுடன் நூறு ரூபாய் வரையில் நான்கணாவும், நூறுமுதல் இருநூறு வரை ஐந்தரை அணாவும், இருநூறு முதல் முன்னூறுவரை எட்டணாவும் கட்டணம் செலுத்த வேண்டும். இக்கட்டணங்கள் தபால் பில்லைகளாகவே ஒட்டப்படவேண்டும். ரூபாய் முன்னூறுக்கு மேல் ஆயிரம் வரை ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இரண்டணா பில்லையும் ஆயிரத்துக்கு மேல் மூவாயிரம் வரை ஒவ்வொரு நூறுக்கும் ஓர் அணா தபால் பில்லையும் ஒட்டப்படவேண்டும்.

மணி ஆர்டர் (Money order): இது வெளி நாடுகளில் உள்ளவர்களுக்கும், உள் நாட்டில் உள்ளவர்கட்கும் பணம் அனுப்பி வைத்தற்குரிய முறை. பணம் அனுப்ப விரும்பும் ஒருவன் தபால் ஆபீஸ் சென்று மணியார்டர் நமூனா (Money Order form) ஒன்று தரும்படி கேட்கவேண்டும். அதில் கண்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்து, தாம் அனுப்பும் பணத்திற்கு ஒவ்வொரு பத்து ரூபாய்க்கு


இரண்டணு விதம் கட்டணம் செலுத்திப் பணத்தை அனுப்பலாம். இது சாதாரண மணியார்டர் முறையாகும். மற்ெருரு முறை தந்தி மூலம் பணம் அனுப்புவது. மணியார்டர் நமூனவை வாங்கி அதில் தந்தி மணியார்டர் என்று தலைப்பில் நன்ருகத் தெரியும்படி எழுதி, அனுப்ப வேண்டிய தொகையையும், அதற்குரிய கட்டணத்தையும் மணியார்டர் பெறுபவரிடம் தந்து, பதிவு செய்து கொண்டால், தந்தி மூலம் பணம் மிக விரைவில் போய் குறிப்பிட்டவரைச் சேரும். இதற்கு மணியார்டர் கட்டணத்தோடு தந்தி யனுப்புவதற்குரிய கட்டணமும், மேலும் இரண்டணுவும் கட்டணம் செலுத்த வேண்டும். தந்தி மணியார்டரிலும் சாதாரண மணியார்டர். எக்ஸ்பிரஸ் மணியார்டர் என இருவகை உண்டு. எக்ஸ்பிரஸ் மணியார்டர் மிக விரைவில் செல்லும்.

தந்தி (Telegram) : உள் நாட்டிலோ அல்லது வெளி நாட்டிலோ உள்ளவர்களுக்கு மிக அவசரமான செய்தி அனுப்புவதற்குத் தந்தியனுப்பும் முறை உதவியாக இருக்கிறது. இதில் இருவகை உண்டு. ஒன்று சாதாரணத் தந்தி (Ordinary); மற்ெருன்று துரிதத் தந்தி (Express). அனுப்பப்படும் செய்தியைக் குறிப்பிட்ட நமூனுவில் எழுதிச் சாதாரணத் தந்தியா, துரிதத் தந்தியா என்று குறித்து, அதற்குரிய அலுவலாளரிடம் தந்தால், அவர் அதிலுள்ள சொற்களை எண்ணிக் கணக்கிட்டுக் கட்டணம் இவ்வளவென்று தெரிவிப்பார். அதைச் செலுத்தினுல் அவர் அதைப் பதிவு செய்து கொண்டு ரசீது தருவார். தந்தியனுப்பும் செய்தி மிகவும் சுருக்கமாக இருக்கவேண்டும். என்னெனில் செய்தியில் உள்ள சொற்களைக் கணக்கிட்டுக் கட்டணம் வசூலிக்கப் படுவதால் தந்தியில் அனுவசியமான சொற்களைச் சேர்க்காமலும் செய்தி தெளிவாக இருக்கும்படியும் எழுதி அனுப்ப வேண்டும். தந்தி மிக விரைவில் செல்ல வேண்டுமானுல் எக்ஸ்பிரஸ் தந்தி அனுப்புவது நலம்.

சேமிப்பு [Savings]: சிக்கன வாழ்க்கையைநடத்தி மிச்சம் பிடிக்கும் ஒருவன் தனது பணத்தைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமானால் தபால் ஆபீஸில் உள்ள சேமிப்பு நிதியில் இட்டுச் சேர்த்து வைத்தல் நல்லது. இதில் ஒருவன் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமாயின் ஐந்து ரூபாய்க்குக் குறையாத தொகையை முதலில் செலுத்திச் சேமிப்புப் புத்தகத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்! இதற்குப் "பாஸ் புத்தகம்" என்பது பெயர். அவ்வப்போது பணம் செலுத்தும் போது இதைக் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும்: சேமிப்பு நிதியில் எப்போது வேண்டுமானாலும் எவ்வளவு குறைந்த தொகையும் செலுத்தலாம். நீங்கள் போடும் தொகைக்குரிய வட்டியை ஆண்டுதோறும் உங்களது கணக்கில் சேர்த்து விடுவார்கள். இதில் இருந்து பணம் பெற வேண்டுமானால் வாரத்திற்கு ஒரு முறைதான் பெற முடியும்: ஒரு வாரம் என்பது திங்கட்கிழமையிலிருந்து சனிக்கிழமை வரையாகும். தபால் சேமிப்பு நிதியிலிருந்து தமது தேவைக்குப் பணம் வாங்குபவர் அதற்குரிய நமூனாவை வாங்கி அதில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களை எழுதி, அதனோடு தன்னிடமுள்ள பாஸ் புத்தகத்தையும் கொடுத்துப் பணம் பெற வேண்டும்.

டெலிபோன் அலுவலகம் [Telephone office]: நீங்கள் அனைவரும் டெலிபோன் பார்த்திருப்பீர்கள். டெலிபோன் அமைப்புள்ள ஓரிடத்திலிருந்து, அவ்வமைப்பு உள்ள எல்லா இடங்களுக்கும் டெலிபோன் மூலம் பேச முடியும். ஒருவர் சில மைல் தொலைவில் உள்ள மற்றொருவரோடு ஏதேனும் பேச விரும்பினால் அவர் வீட்டுக்குச் சென்றுதான் பேச வேண்டும். இதற்குப் பணமும் காலமும் விரையமாகும். இவ்விரண்டையும் தவிர்த்துக் குறைந்த செலவில் பேச வசதி

யளிப்பது டெலிபோனே யாகும். இதை எப்படி உப யோகிப்பதென்பதே உங்களுள் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இதை உப யோகிக்கும் முறைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு கவனிக்கவும் :—



1. முதலில் யாருடன் பேச விரும்புகிறோமோ அவ ரிடத்தில் டெலிபோன் இருக் கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். இருந்தால் அவரது போன்(Phone) எண் என்னவென்பதை டெலி போன் தகவல் புத்தகத்தில் இருந்து அறிந்து கொள்ள வேண்டும். உங்களிடத்தில் டெலிபோன் தகவல் புத்தகம் இல்லை யென்றால் ரிசிவரை (Receiver) கையில் எடுத்து 'என்கொயரி' (Enquiry) என்று கேட்க வேண்டும். அவர்கள் உங்களை அழைக் கும் போது உங்களுக்கு வேண்டியவரதுபெயரையோ, வேலை செய்யும் இடத் தையோ, கம்பெனியையோ சொல்லி எண் என்ன வென் பதைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும்.



2. பிறகு டெலிபோனின் முன்னால் உள்ள எண் வட்டத்தில் உள்ள எண்களில் உமக்கு வேண்டியவரது டெலிபோனுக்குரிய எண்ணை ஒன்றன்பின் ஒன்றாகச் சுற்றி விட வேண்டும்.

3. பிறகு போனில் யாராவது பேசுவது கேட்டால் அவர்களை யார் என்று வினவ வேண்டும். பேசுபவர் தங்களுக்கு வேண்டியவரா என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகுதான் அவரிடம் பேசுதல் வேண்டும்.

4. டெலிபோனில் பேசும்போது கூச்சலிட்டுப் பேசுதல் கூடாது. மெதுவாகவும், நிதானமாகவும், திருத்தமாகவும் சுருக்கமாகவும் பேசுதல் வேண்டும்.

5. டெலிபோனில் நீண்ட நேரம்பேசிப் பிறருக்கு இடையூறாக இருக்கக்கூடாது. விரைவில் பேசி முடித்தால்தான் பிறர் அவ்வழியில் உள்ள மற்றோர் இடத்திற்குப் பேச முடியும்.

6. பொது டெலிபோன் [Public Telephone] களில் பேச விரும்புவோர் முதலில் டெலிபோன் அலுவலகத்தில் உள்ள விசாரணை (Enquiry) க்குரியவரை அழைத்து தனக்கு வேண்டிய எண்ணுக்கு இணைப்புத் தரும்படி கேட்க வேண்டும். அவ்வெண் பேசுவதற்குத் தடையின்றி இருக்குமானால் டெலிபோனுக்கு அருகில் உள்ள பெட்டியில் இரண்டு ஒரு அணா நாணயங்களைப் போடும்படி அவர் கூறும்போது நாணயங்களைப் அதில் இடுதல் வேண்டும். பிறகுதான் பேசுதல் வேண்டும். நாணயங்களைப் போடாமல் பேச முடியாது.

7. நீங்கள் சிம்லாவில் உள்ள உங்களது நண்பர் ஒருவரிடம் பேச விரும்பினால் டெலிபோன் அலுவலகமோ அல்லது பொது டெலிபோன் இருக்குமிடமோ அல்லது உங்களிடம் இருக்கும் டெலிபோனிலோ "டிரங்க் கால்" (Trunk - call) என்று அழைக்க வேண்டும். அவர்கள் பேசும்போது உங்களுக்கு வேண்டிய எண்ணைக் கூறி அத்துடன் பேச இணைப்புத் தரும்படி கோர வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பேசலாம் என்று அறிவிப்பார்கள். அம்மணி நேரத்தில் அதற்குரிய கட்ட

ணத்தைச் செலுத்திவிட்டுப் பேசவேண்டும். அதற்குக் கட்டணம் மூன்று நிமிடத்திற்கு இவ்வளவு என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். அதை நீங்கள் அங்குச் சென்று அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

போலீஸ் இலாக்கா [Police]: ஒரு இராச்சியத்தின் முதுகெலும்பு போன்றது போலீஸ் இலாக்கா. இராச்சியத்தில் யாதொரு கலகமும், குழப்பமும், சண்டை சச்சரவுகளும் இல்லாமல் பாதுகாத்து வருவது இவ்விலாக்காவே யாகும். திருடு, கொலை, கொள்ளை, மோசடி ஆகியவற்றினின்று மக்களை ஓரளவுக்கு பாதுகாத்து வருவது இவ்விலாக்காவே ஆகும். இலாக்காவில் பணியாற்றும் உத்தியோகஸ்தர்களுக்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதாவது ஒரு குற்றவாளியைக் கைதுசெய்யவோ அன்றிச் சந்தேகப்பட்டவர்மீது தக்க நடவடிக்கை எடுக்கவோ, அவர்களது வீட்டைப் பரிசோதிக்கவோ இவர்களுக்கு உரிமையும் அதிகாரமும் உண்டு. ஒவ்வொரு கிராமத்திற்கும், குக்கிராமத்திற்கும், பிரிவிற்கும் [Divisons] ஒரு போலீஸ் சாவடி [Station] உண்டு. இது இரவும் பகலும் பணியாற்றி வருகிறது. இது என்றும் மூடப்படுவதே இல்லை. இதில் எப்போதும் எந்நேரமும் சில சேவகர் இருந்துகொண்டே யிருப்பர். இதற்கு அதிகாரி சப் இன்ஸ்பெக்டர் [Sub-Inspector]. அவர்தான் இன்னின்னவர் இங்கிங்கே இவ்வளவு நேரம் இன்ன கடமையைச் செய்தல்வேண்டும் என்று வகுப்பார். அதை அவருக்கு அடுத்தபடியாக உள்ள ஹெட் கான்ஸ்டேபிள் [Head-Constable] அதில் கண்டுள்ளபடி வேலையைப் பகிர்ந்து கொடுப்பார். கொடுக்கப்பட்ட வேலையைச் சேவகர் குறித்த நேரத்தில் போய் ஒப்புக்கொண்டு செய்யவேண்டும். இத்தகைய சாவடிகள் நான்கு அல்லது ஐந்திற்கு ஒரு தலைவர் இருப்பார். அவருக்கு இன்ஸ்பெக்டர் [Inspector] என்பது பெயர்.

இவ்விலாக்காவிற்குத் தலைவர் கமிஷனர் [Commissioner]. அவருக்குக்கீழ் சில உதவி கமிஷனர் இருப்பர். அவர்களுள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவைத் தலைமை தாங்கி நடத்துவர். இவர்கள் அனைவரும் அவ்வப்போது போலீஸ் சாவடி தோறும் சென்று தணிக்கை செய்யும் அதிகாரம் உள்ளவர்கள்.

இவர்கள் பணியாற்றும் வகையைக் கவனிப்போம்: குற்றம் இழைத்தவன் முதலில் போலீஸ்காரரால் போலீஸ் சாவடிக்கு அழைத்துச் செல்லப்படுவான். ஆங்கு வைக்கப் பட்டுள்ள பெரிய குற்றப் பதிவுப் புத்தகத்தில் அவன் செய்த குற்றம் பதிவு செய்யப்படும். கொலை, களவு, கொள்ளை, போன்ற பெருங் குற்றம் இழைத்தவனாக இருப்பின் உடனே காவல் (Lock-up) வில் வைக்கப்படுவான், சிறு குற்றங்கள் செய்தவனாயின் அவ்விடத்தில் யாராவது ஒரு பெரிய மனிதனின் உத்திரவாதம் (ஜாமீன்) பெற்று விட்டுவிடப்படுவான். பிறகு அதிகாரிகள் தீங்கிற் குள்ளானவனையும், தீங்கிழைத்தவனையும் அழைத்து விசாரணை செய்து அவைகளைப் பதிவு செய்து கொள்ளுவர். பின்பு இரு பாலருக்கும் குற்றச் சாட்டுச் சீட்டு (Summons) அனுப்பப்படும். அதில் கண்டுள்ள தேதியின்படி குறிப்பிட்ட நீதிஸ்தலத்திற்குச் செல்ல வேண்டும். போகத் தவறினால் ஆட்சியாளரை ஏமாற்றிய குற்றத்திற்கு ஆளாகி அவதிப் படவேண்டிநேரும். இது ஒரு சாதாரண போலீஸ்சாலை செய்யும் வேலையாகும். உங்களுக்கு யாராவது தீங்கிழைத்தாலோ, பயமுறுத்தினாலோ, அடிக்க வந்தாலோ உடனே போலீஸ்சாலைக்குச் சென்று அவர்களுக்கு அறிவித்து அவர்கள் உதவியைப் பெறலாம்.

கொலை, கொள்ளை, திருடு முதலியவைகளைச் செய்து விட்டுத் தலை மறைந்துகொண்டு இருக்கும் நபர்களையும், தலை மறைந்திருக்கும் தீவிர அழிவு வேலைக்கு ஆக்கம் செய்து வரும் அரசியல் தலைவர்களையும், தொண்டர்

சந்தர்ப்பத்திற்கும் ஏற்றபடி நடிப்பதில் கைதேர்ந்தவர்க ளாக இருப்பார்கள். இவர்கள், தங்களை எவரும் அறியா வண்ணம் புலனறிந்து, தலைமறைந்து இருக்கும் குற்ற வாளிகள் இருக்கும் இடம் தெரிந்துகொண்டு தலைவர் களுக்குத் தெரிவித்துத் தக்க ஆள், ஆயுத பலத்தோடு அவ்விடத்திற்குச் சென்று அவர்களைக் கைது செய்வார் கள். இத்துறையில் வேலை பார்ப்பவர் எதிர்பாரா இன்னல் களுக்கு ஆளாக நேரிடுவதும் உண்டு. இத்துறையில் இருப் பவர் அழுத்தமான நெஞ்சுறுதி உடையவராக இருப்பர். பொதுவாகப் போலீஸ் உத்தியோகமே இன்னல்கள் நிறைந்தது. இவற்றை ஒரு சிறிதும் பொருட் படுத்தாமல் இனிது பணியாற்றிவரும் நம் நாட்டின் போலீஸ் உத்தி யோகஸ்தர்களுடைய திறமையும் அஞ்சாமையும் பாராட்டற்குரியவையாம்.

நீதி மன்றம்

குடிமக்களின் உடல், உயிர், பொருள் ஆகியவற் றிற்குப் பிறரால் எத்தகைய தீங்கும் நேரிடாதபடி பாது காக்க வேண்டுவது அரசாங்கத்தின் முதல் கடமை யாகும். இக்கடமை நீதிமன்றங்களின் மூலமாக நிறை வேற்றப்படுகின்றது. எனவே, இராச்சியத்தில் தோன்றும் குற்றங்களை விசாரித்து நீதி வழங்குவதே நீதி மன்றங் களின் கடமையாம்.

வழக்குகள் இருவகைப்படும். அவை 'சிவில்' வழக்கு கள், 'கிரிமினல்' வழக்குகள் என்பன. பணம் கொடுத்தல், வாங்கல் சம்பந்தமாக ஏற்படும் பிணக்குகள், நிலம் வீடு முதலிய சொத்துக்கள் காரணமாக ஏற்படும் தகராறுகள் முதலியன சிவில் வழக்குகள் எனப்படும். இவற்றை விசாரணை புரிந்து நீதிவழங்கக் கிராமப் பஞ்சா யத்துக் கோர்ட்டும், அதற்கடுத்தபடி ஜில்லா முன்சீப் கோர்ட்டும், அடுத்தபடி சப்ஜட்ஜ் கோர்ட்டும், அதற்கு மேல் ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டும், அடுத்தபடி ஹைகோர்ட்

டும், இறுதியாக சமஷ்டி கோர்ட்டுமாகப் பலவகையான நீதி மன்றங்கள் உள்ளன. ஒரு நீதிமன்றத்தில் வழங்கப் பட்ட நீதி, அநீதியாகக் கருதப்பட்டால், அதற்கு அடுத்த மேல் நிலையில் உள்ள நீதிமன்றத்துக்குப் புனர் விசாரணை செய்யும்படி வேண்டுகோள் விடுக்கலாம். இது ஆங்கிலத்தில் 'அப்பீல்' செய்வது என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்நீதி மன்றங்களுள் ஒவ்வொன்றும் ஒரு குறித்த தொகைக்குட்பட்ட வழக்குகளை மட்டுமே விசாரிக்கலாம்.

சண்டை, கொலை, கலகம், மோசடி, களவு, கொள்ளை முதலியவை சம்பந்தமான வழக்குகள் கிரிமினல் வழக்கு




சென்னை—உயர் நீதி மன்றம்

கள் எனப்படும். இத்தகைய வழக்குகளின் தன்மைக்கு ஏற்றவாறு விசாரணை செய்து நீதி வழங்குவன பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள், ஜில்லா செஷன்ஸ் கோர்ட்டுகள், ஹைகோர்ட்டு, பெடரல் கோர்ட்டு ஆகியவை. இவை ஒன்றுக்கொன்று உயர்ந்தவையாம்.

நமது நாட்டில் மக்கள் அனைவரும் கல்வி பயின்று நல்லறிவு பெற்றால் இத்தனை வகையான நீதி மன்றங்களுக்கு இடம் இராது. அவசியமற்ற வழக்குகளில் ஈடுபட்டு, அரிதில் திரட்டிய பொருளை இழந்து, மக்கள் துன்புறுவதும் குறையும் என்பது திண்ணம்.

நகர பரிபாலன சபைகள் (Municipalities)

கிராமமக்களின் நன்மைக்குரிய பொதுக் காரியங்களைச் செய்யக் கிராமங்கள்தோறும் கிராமப் பஞ்சாயத்துக்கள் நிறுவப்பட்டுள்ளன. அவ்வாறே பெரிய பட்டணங்களில்



சென்னை—கார்ப்பரேஷன்

வாழும் மக்களின் நன்மைக்கான பொதுக் காரியங்களைக் கவனிக்க நகர சபைகள் இருக்கின்றன. 20000 மக்களுக்கு மேல் வசிக்கும் பட்டணங்களின் பொதுநன்மைக்கான காரியங்களைச் செய்வதற்கு எற்படுத்தப்பட்டுள்ள சபைக்கு நகர பரிபாலன சபை அல்லது முனிஸிபாலிட்டி என்பது பெயர். நமது இராச்சியத்தில் இத்தகைய சபைகள் 80-க்கு மேல் உள்ளன.

ஜனத்தொகைக்கும் விஸ்தீரணத்துக்கும் தக்கபடி நகர பரிபாலன சபையின் அங்கத்தினர் தொகை பதினாறு முதல் முப்பத்தாறுவரை இருக்கும். இச்சபையின் அங்கத்தினர்கட்குச் சம்பளம் இல்லை. இவர்கள் தங்களுக்குள் தலைவர் ஒருவரையும், துணைத் தலைவர் ஒருவரையும் தேர்ந்து கொள்வார்கள். தலைவருக்குச் 'சேர்மேன்' என்றும், துணைத் தலைவருக்கு 'வைஸ் சேர்மேன்' என்றும் பெயர்கள் வழங்குகின்றன. இவர்களுக்கும் சம்பளம் இல்லை. முனிசிபல் சபையின் உறுப்பினர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் மூன்றாண்டுகள் வரையில் பதவி வகிக்கலாம்.

இச்சபையினர் பட்டணங்களின் நன்மையைக் கோரி, கொண்டுவரும் மசோதாக்கள் சபையின் கூட்டத்தில் நன்கு பரிசீலனை செய்யப்பட்டுத் தீர்மானங்களாக நிறைவேறும். இவற்றை அமுலுக்குக் கொண்டுவருபவர் கமிஷனர் என்னும் அதிகாரி. ஒவ்வொரு முனிஸிபாலிட்டிக்கும் கமிஷனர் ஒருவர் இருப்பார். இவருக்குச் சம்பளம் உண்டு. இவர் அரசியலாரால் நியமிக்கப்படுவார். இவருக்கு உதவி புரிய அநேக உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள்.

முனிசிபாலிட்டிகள் செய்யும் வேலைகள் பல. அவை பட்டணத்தில் வசிக்கும் மக்கள் நன்மைகளைக் கோரியவை. அவற்றுள் முக்கியமானவை பள்ளிக்கூடங்கள் நடத்தல், வைத்தியசாலைகள் அமைத்தல், தெருக்களுக்கு விளக்குகள் அமைத்தல், சாலைகளைச் செப்பனிடுதல், குடிநீர் வசதிசெய்தல், வாசகசாலைகள் நிறுவல், பூங்காக்கள் அமைத்தல் முதலியனவாம்.

இவற்றை நடத்தி வைக்கப் பலவகை வரிகள் வசூலிக்கப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை வீட்டு வரி, குறட்டுவரி, தண்ணீர்வரி, விளக்குவரி, தொழில்வரி முதலியனவாம்.

ஐந்து லட்சம் மக்களுக்குமேல் வசிக்கும் நகரத்தில் உள்ள நகரசபை கார்ப்பரேஷன் எனப்படும். நம் இராச்சியத்தின் தலைநகரமான சென்னையில் உள்ள நகரசபை மட்டுமே கார்ப்பரேஷன் எனப்படும். இதுவும் மற்ற முனிசிபல் சபைகளைப்போன்ற அமைப்புள்ளதே. ஆனால் இதன் தலைவருக்கு மேயர் என்பது பெயர். துணைத் தலைவருக்கு டேபுட்டி மேயர் என்பது பெயர்.

உணவுப்பங்கீட்டு அலுவலகம் (Ration Office)

நமது இராச்சியத்தில் சில ஆண்டுகளாகப் பருவ மழை இல்லாமையால், உணவுப் பொருள்கள் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. இத்தகைய உணவுப் பொருள்களை அனைவரும் சமமாகப்பெற நமது அரசியலார் உணவுப் பங்கீட்டுமுறையைப் புகுத்தியுள்ளனர். இம்முறை, மக்கள் அனைவரும் நிறைந்த அளவில் இல்லையென்றாலும், ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவிலேனும் உணவுப்பொருள்களைப் பெறுவதற்கு உதவிபுரிகின்றது. உணவுப் பங்கீட்டு முறை இல்லாவிடில் மக்களுக்கு இன்னல்கள் ஏற்படுவது நிச்சயம். அதிலும் ஏழை மக்கள் பேரளவில் பாதிக்கப்படுவார்கள். இக்காலத்தில் நமது நாட்டில் தனவந்தர்களும், வியாபாரிகளும் தன்னலம் மிக்கவர்களாக விளங்குகின்றார்கள். அவர்கள் எளியவர்களிடம் இரக்கம் காட்டுவதே இல்லை. ஆதலால், தனவந்தர்களாக உள்ள நிலச் சுவான்தார்கள் தாங்கள் பயிர்செய்யும் உணவுப் பொருள்களை அதிக விலைக்கு விற்க ஆசைகொண்டு, அவற்றைப் பதுக்கி விடுவார்கள். வர்த்தகர்களும் தங்கள் வசம் உள்ள உணவுப் பொருள்களை அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை லாபம் பெற ஆசைகொண்டு பதுக்கிவிடுவார்கள். எனவே இவர்களிடம் உள்ள பொருள்கள் நிரம்பப் பணம் படைத்தவர்கட்கு மட்டுமே கிடைக்கும். ஏழைகள் பட்டினிக்கு இரையாகி இறக்க நேரிடும். இக்கொடுமையைத் தவிர்ப்பதற்காகவே இப்பங்கீட்டு முறையும், அதனை நடத்தி

வைக்கப் பல அலுவலகங்களும் அரசியலாரால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் தலைமைக் காரியாலயம் சென்னைநகரில் இருக்கிறது. இதன் கிளைக் காரியாலயங்கள் பல நகரின் பல பாகங்களில் உள்ளன. இங்ஙனமே பிற பட்டணங்களிலும், ஜில்லாக்கள் தாலுக்காக்கள் ஆகியவற்றின் பிரதான பட்டணங்களிலும் உணவுப்பங்கீட்டு அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் ஓர் அதிகாரியும், அவருக்குத் துணைபுரியப் பல அலுவலாளர்களும் இருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் தலைமைக் காரியாலயத்துத் தலைமை அதிகாரிக்கு உட்பட்டவர்கள். இவ்வுணவுப் பங்கீடுமுறை செவ்வனே நடைபெறுதற்பொருட்டு அவ்வப்போது விதிகளைத் திருத்தியும் புதுக்கியும் அமைக்க ஓர் ஆலோசகர் குழுவும் உண்டு. இவர்கள் அனைவரும் உணவு அமைச்சரின் ஆணைக்கு உட்பட்டவராவர்.

ஒருவன் தனக்கு உணவுப் பங்கீட்டுச் சீட்டுப் பெறவேண்டுமானால், அவன் தன் இருப்பிடத்திற்குரிய வட்டார உணவுப் பங்கீடு அலுவலகத்துக்குச் சென்று, அலுவலாளர்களிடம் தெரிவித்து மனு நமூனவைப் பெறவேண்டும். அதில் தன் பெயர், வயது, வேலை, ஊதியம் ஆகிய விவரங்களையும், தம் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் பெயர் முதலிய விவரங்களையும் குறித்துத் தமது கையொப்பமிட்டு அலுவலகத்தில் அதற்கென இருக்கும் கணக்கரிடம் தரவேண்டும். பிறகு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குள் பங்கீடு விசாரணை உத்தியோகஸ்தர் ஒருவர் மனுதாரர் வீட்டுக்கு வந்து மனுவிற் குறிக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தையும் விசாரித்தறிந்து, மனுதாரர் கொடுத்த நமூனவில் தாம் விசாரித்தறிந்த விஷயத்தைக் குறித்து அலுவலகத்துக்கு அனுப்புவார். பிறகு விண்ணப்பதாரருக்குரிய பங்கீட்டுச் சீட்டுத் தயாரிக்கப்பட்டு அதிகாரியின் கையொப்பமிடப் பெற்று விண்ணப்பதாரருக்குத் தரப்படும்.

அதன்பிறகு அச்சீட்டைப் பெற்றவர், அதைக் கொண்டுபோய் அரசியலாரால் நியமிக்கப்பெற்றதும் தமது இல்லத்துக்கு அருகில் உள்ளதுமான உணவுப் பங்கீட்டுக் கடையில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அன்றுமுதல் அக்கடையில் உணவுப் பொருள்களை வாங்கிக்கொள்ளலாம்.

ஒரு குடும்பத்தில் எவரேனும் வெளியூருக்குச் சென்றுவிட்டாலும், காலகதி யடைந்துவிட்டாலும், நோய்ப்பட்டு மருத்துவ நிலையத்தில் இருந்தாலும் உடனே பங்கீட்டு அதிகாரிக்குத் தெரிவித்து அவருக்குரிய உணவுப் பொருளைக் குறைத்துக்கொள்ள வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறுபவர் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டால் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள்.

நிதி நிலையங்கள் (Banks)

ஒருவர் சேமித்துவைத்திருக்கும் நிதியையும், அணிகலன்களையும், விலை உயர்ந்த தஸ்தாவேஜுகளையும் கள்ளர் பயமின்றிப் பாதுகாப்பாக வைக்கத்தக்க இடம் நிதி நிலையமாகும். இது ஆங்கிலத்தில் 'பாங்க்' எனப்படும். நிதி நிலையங்கள் பலவகைப்படும். அவற்றுள் **வாணிகத் துறை நிதிநிலையங்கள்** (Commercial Banks), **கூட்டுறவு நிதி நிலையங்கள்** (Co-operative Banks) ஆகிய இரண்டுமே அதிகமாகக் காணப்படுவன. இவற்றில் பொருள் வைப்பு முறையும், பொருள் வாங்கும் முறையும் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியவை.

பொருள்வைப்பு (Deposit) என்பது மூன்று வகைப்படும். அவை **நிரந்தரவைப்பு** (Fixed Deposit), **நடப்புவைப்பு** (Current Deposit), **சேம வைப்பு** (Savings Deposit) என்பனவாம். ஒருவர் தாம் வைக்கும் பொருளை ஒரு குறிப்பிட்ட காலம்வரையில் திருப்பி வாங்காமல் இருக்க உடன்பட்டு வைப்பது நிரந்தர வைப்பு. ஒருவர் தம்

பொருளை வைப்பாக்கித் தமக்கு வேண்டியபோதெல்லாம் அதினின்று பொருளைத் திருப்பிப் பெறுவதும், பொருள் கிடைத்தபோதெல்லாம் வைப்பாக்குவதுமாகிய முறைகளை உடையது நடப்புவைப்பு. சேம வைப்பென்பது தனவந்தராக இல்லாதவர் அவ்வப்போது மிச்சப்படுத்தி வைப்பாக்குவது. இம் முறையில்ஒரு



நிதி நிலையம்

வாரத்தில் ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் திருப்பிப் பெறமுடியாது. வாங்கும் தொகை வெவ்வேறு நிதி நிலையத்துக்குரிய விதிகட்கு ஏற்றவாறு இருக்கும். தபால் அலுவலகத்தைச் சேர்ந்த சேமிப்பு நிதியில் வாரத்தில் ஒரு முறைக்குமேல் பணம் திருப்பிப் பெற முடியாதென்பதை முன்னரே நீங்கள் அறிவீர்கள்.

நிதி நிலையங்களில் பொருளை வைப்புச் செய்யும் முறையைப்பற்றியும், **திருப்பிப் பெறல்** (withdrawal) முறையைப் பற்றியும் கவனிப்போம்: பொருளை நிரந்தர

வைப்பாக்க விரும்புபவர், நிதிநிலைய டைரெக்டரிடம் விஷயத்தைத் தெரிவித்து, அதற்குரிய வைப்பு நமூனு (Remittance Chalan)வைப் பெற்று, அதில் குறிக்கப் பெற்றுள்ள விவரங்களைப் பூர்த்திசெய்து, அந்நமூனுவை யும் வைப்புக்குரிய பொருளையும் நிதி நிலையத்தில் அதற் குரிய அதிகாரியிடம் கொடுக்கவேண்டும். அவற்றைப் பெற்றுக்கொண்ட அதிகாரி பதிலுக்கு ஒரு பொறுப்புச் சீட்டைத் தருவார். அதில் வைப்புத் தொகையும், அதற்கு வட்டி விகிதமும், அதைத் திருப்பிப் பெற வேண்டிய காலமும், வைப்பு வைத்தவர்பெயரும் குறிக்கப் பெற்றிருக்கும். ஆதலால் அப் பொறுப்புச்சீட்டைச் சாக்கிரதையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

நடப்புவைப்பு எனப்படும் 'கரண்ட் அக்கவுண்ட்' முறை வேறுனது. வைப்பு வைக்க விரும்புபவர், நிதி நிலையத்தில் தம் எண்ணத்தைத் தெரிவித்து, அதற்குரிய விண்ணப்பத் தாளைப் பெற்று, அதில் தேவைப்படும் விவரங்களைப் பூர்த்திசெய்து அவ்விண்ணப்பத் தாளோடு, வைப்பு வைக்க விரும்பும் தொகையையும், மாதிரிக் கை யொப்பங்கள் மூன்றிடப்பட்ட தாளையும் கொடுக்க வேண் டும். அவற்றைப் பெற்றுக்கொண்டு, ஒரு பாஸ் புத்தகத்தை யும், ஒரு செக் புத்தகத்தையும் நிதி நிலையத்தார் வைப்பு வைத்தவரிடம் தருவர். பாஸ் புத்தகத்தில் வைப்புத் தொகை, அதை வைத்தவர் பெயர், முகவரி முதலியன குறிக்கப் பெற்றிருக்கும். வைப்புப் பணத்தினின்று தாம் பணம் வாங்க விரும்பும்போது, உபயோகிப்பதற்காகவே செக் புத்தகம் தரப்படுகிறது. அதில் சாதாரணமாக இருபது தாள்கள் இருக்கும். அதிகமும் இருப்பதுண்டு. பணம் வாபஸ் பெறவேண்டுமானுல், செக்குப் புத்த கத்தில் உள்ள தாள்களுள் ஒன்றில் தேதியும், வாபஸ் பெறுகின்றவர் பெயரும், வாபஸ் பெறவிரும்பும் தொகை யும் குறிப்பிட்டுக் கீழே கையொப்பமிட்டு அத்தாளை நடப்பு வைப்புக் கணக்கரிடம் கொடுக்க வேண்டும். அவர்

அதைப் பெற்றுக்கொண்டு ஒரு பித்தளை அல்லது செம்புப் பில்லையைத் வருவார். அதில் ஏதேனும் ஓர் எண் குறிக்கப் பட்டிருக்கும். சிறிது நேரத்தின்பின் பணம் செலுத்தும் கணக்கர் பில்லையில் குறிக்கப்பட்ட எண்ணைச் சொல்லிக் கூப்பிடும்போது அவரிடம் சென்று பில்லையைக் கொடுத்துவிட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சேம வைப்பினின்று பணம் பெறும் முறையும் இதுவே. ஆனால் அங்குச் செக்குத் தரும் வழக்கமில்லை. வாபஸ் நமூனு (Withdrawal form)வில் தொகையையும், தேதியையும் குறித்துக் கையொப்பமிட்டுத் தர வேண்டும். சேமவைப்பு முறையில் பொருளை வைப்பு வைத்தவர் மட்டுமே பொருளை வாபஸ் பெற முடியும். பிறருக்குப் பொருள் தரவிரும்பினால் அவர்களுக்கு நடப்பு வைப்பு முறையில் தருவது போலச் 'செக்' தர முடியாது.


நிதி நிலையங்களின் நடைமுறைகளைப் படித்தறிவதைக் காட்டிலும், நேரிற் சென்று கண்டறிவதே நன்றாகும். ஆதலால், நீங்கள் உங்கள் ஊரிலுள்ள நிதி நிலையங்களுள் ஒன்றுக்குச் சென்று அங்கு வருகின்றவர்கள் பணம் செலுத்துவதையும், பணம் வாங்குவதையும், இவை சம்மந்தமாக மேற் கொள்ளப்படும் நடைமுறைகளையும் கவனித்து அறிய வேண்டுவது உங்கள் கடமையாகும். இன்றே சென்று கவனியுங்கள்.

11. முடிகளும் கட்டுகளும்

இளம்படை வீரர்களே, நீங்கள் எல்லாரும் சில முடிகளைப்பற்றியும், அவற்றின் உபயோகங்களைப்பற்றியும் படித்தும், செய்தும் பழகியுள்ளீர்கள். "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பது முதுமொழி. அதற்கிணங்க நீங்கள் அம்முடிகளையே மீண்டும் பழகி வெறுப்படையாதிருக்கவும், வாழ்க்கையில் மேலும் நற்பயன் அடைதற்கும் சில புதிய முடிகளையும், கட்டுகளையும்பற்றி இங்குப் படித்தும், பழகியும் அறியலாம்:

சதுரக்கட்டு (Square Lashing):

இக்கட்டு இரண்டு கம்பங்களையோ அல்லது இரண்டு தடிகளையோ குறுக்கும் நெடுக்குமாக வைத்துக் கூட்டல் குறி போலக் கட்டுவதற்குப் பெரிதும் உபயோகப்படும்.





இதை எப்படிக் கட்டுவது என்பதைக் கவனியுங்கள். முதலில் கட்டப்படவேண்டிய இரண்டு கம்பங்களைக் கூட்டல் குறிபோல வைக்கவேண்டும். பிறகு நெடுக்கு மரத்திலேனும் குறுக்கு மரத்திலேனும் கயிற்றின் ஒரு முனையைக் கொண்டு பந்தற்காரன் முடிபோட்டு, எஞ்சி நிற்கும் கயிற்றைப் படத்திற் காட்டியுள்ளபடி முறுக்கி விடவேண்டும். இம் முடிக்குக் கீழே குறுக்குக் கம்பம் இருத்தல் அவசியம். பிறகு கயிற்றைக் குறுக்கு மரத்தின்

மேற் பக்கமாகக் கொண்டுபோய் நெடுக்கு மரத்தின் கீழே சுற்றி மீண்டும் குறுக்கு மரத்தின்மேல் வருமாறு கொண்டுபோய்ப் படத்திற் காட்டியுள்ளபடி சேர்த்துக் கட்ட வேண்டும். இவ்வாறு செய்வதனால் இரண்டு கம்பங்களும் இறுகப் பிணிக்கப் பட்டு அசைவின்றி நிற்கும். கயிற்றைக் கம்பங்கள் அசையாதிருப்பதற்கு வேண்டிய அளவு சுற்றியபின், இறுதியில் இரண்டு மரத்துண்டுகளுக்கும் இடையில் உள்ள கயிற்றை வெட்டுவதுபோல மீதமாக உள்ள கயிற்றைச் சுற்றிப் பிறகு, முதலிற் போட்டதுபோல பந்தற்காரன் முடியைப் போடவேண்டும். இக்கட்டு வாழ்க்கையிற் பெரிதும் பயன் படத்தக்கது. ஆதலால் அடிக்கடி செய்து பழகுதல் வேண்டும்.

மூலைக்கட்டு (Diagonal Lashing):

இது இரண்டு கம்பங்களையோ அல்லது தடிகளையோ பெருக்கற் குறிபோல வைத்துக் கட்ட மிக்க உபயோக






மானது. இக்கட்டும் மிகவும் எளிதானதே. முதலில் கட்டப்படவேண்டிய இரண்டு கம்பங்களைப் பெருக்கல்

குறிபோல வைத்து, இரண்டையும் சேர்த்துப் பந்தற் காரன் முடி போடவேண்டும். பிறகு கயிற்றின் குறுகிய முனையைக் கம்பங்களோடு சேர்த்துப் படத்திற் காட்டியுள்ளபடி மூன்றல்லது நான்கு சுற்றுகள் சுற்றவேண்டும். பிறகு அச்சுற்றுகளை வெட்டுவதுபோல எதிர் மூலைகளின் மூலம் கயிற்றைச் செலுத்திப் படத்திற் காட்டியுள்ளபடி மூன்றல்லது நான்கு முறை சுற்றவேண்டும். இறுதியில் பந்தற்காரன் முடிபோட வேண்டும். எஞ்சிய கயிற்றைப் படத்திற் காட்டியுள்ளபடி நன்றாகச் சுற்றிவிடவேண்டும் இக்கட்டைப் படித்தறிவதைக் காட்டிலும், பழகி அறிதல் வேண்டும்.


பாலம் கட்ட உபயோகிக்கும் சுமைதாங்கிகள் (Trestles):

ஒரு சிறு ஆற்றையோ அல்லது ஓர் அகன்ற ஆழம் மிக்க கால்வாயையோ நீங்கள் கடக்க வேண்டுமானால், மூங்கில்களால் பாலம் அமைத்துக் கடக்கலாம். அத்தகைய மூங்கிற் பாலத்தைத் தாங்குவதற்குப் படத்திற் காட்டியுள்ளபடி சுமைதாங்கிகள் கட்ட




வேண்டும். எனவே சுமைதாங்கியை எவ்வாறு கட்டுவது என்பதைக் கவனிப்போம். இதனைக் கட்ட இரண்டு முறைகள் உண்டு. ஒன்று வருமாறு: முதலில் இரண்டு மூங்கில்களை, அல்லது வேறு கழிகளைப் பெருக்கல் குறி போல வைத்து மூல வாட்டக் கட்டுக் கட்டவேண்டும்.

பிறகு அம் மூங்கில்களின் நான்கு முனைகளிற் பொருந்தும்படி இரண்டு நீண்ட மூங்கில்களை நெடுக்கிலும், இரண்டு மூங்கில்களைக் குறுக்கிலும் கட்டவேண்டும். இவற்றைச் சதுரக் கட்டுகளாற் கட்டவேண்டும்.



கயிற்றால் ஏணி அமைக்கும் முறை.

நெடுக்கு மூங்கில்களுள் ஒன்று பெருக்கற் குறிபோல் அமைந்த இரண்டு மூங்கில்களில் ஒன்றின் மேலும், மற்றொன்றின் கீழுமாக இருக்க வேண்டும். இது




கயிற்றின் நீளத்தைக் குறைக்க உபயோகிக்கும் முடி.

முக்கியமாக நினைவில் இருக்கவேண்டும். சுமைதாங்கியை வேறு விதமாகவும் கட்டலாம். அதாவது, முதலில் நீண்ட சதுர அமைப்பைக் கட்டிக் கொண்டு, பிறகு


பெருக்கல் குறிபோன்ற குறுக்கு அமைப்பைச் சதுர அமைப்போடு இணைத்துக் கட்டலாம். எம்முறையிற் கட்டினாலும் சுமைதாங்கி மிகவும் அழுத்தமாகக் கட்டப் படவேண்டும். முடிகள் இறுகி இருக்கவேண்டும். இன்றேல் ஆற்றைக் கடக்கும்போது விபத்துக்குள்ளாக நேரிடும். இச்சுமைதாங்கிகளை உபயோகித்துப் பாலம் கட்டும் முறையை ஆசிரியரிடம் அறிந்து கொள்ளுங்கள்.

குடிசையும், பாதுகாப்பிடமும் அமைத்தல் (Building Huts and Shelters):

நீங்கள் வெளியிடங்களுக்குச் சென்றால் அங்குத் தற்காலிகமாகத் தங்கி இருக்க நேரிடும். அப்போது உங்களை வெயிலின் கொடுமையினின்றும், மழையினின்றும்,



பனியினின்றும் பாதுகாத்துக் கொள்வதற்கேற்ற குடிசைகளை நீங்களே அமைத்துக் கொள்ள அறிந்திருக்க



வேண்டும். தற்காலிகமான குடிசைகள் அமைக்கும் முறைகள் பல உண்டு. அவற்றைக் கவனிப்போம்:

குடிசையை அமைப்பதற்குக் கம்பங்கள், கழிகள், பனைநார் அல்லது தேங்காய் நார்கயிறு, ஓலை அல்லது தழை முலியனவேண்டும். இவற்றைச் சேகரித்துக் கொண்ட பிறகு அவற்றிற்குத் தக்கபடி குடிசையின் அகல நீளங்களை நிர்ணயித்துக் கொண்டு குடிசை அமைக்கத்தொடங்க வேண்டும். முதலில் இரண்டு கம்பங்களைக் குடிசை எவ்வளவு நீளமிருக்க வேண்டுமோ, அவ்வளவு தூரத்தில் நடவேண்டும். இக்கம்பங்கள் குறைந்தபட்சம் இரண்டடி ஆழத்தில் நடப்படவேண்டும். பிறகு இக் கம்பங்களின் முனைகளிற் பொருந்தும்படி ஒரு குறுக்குக் கழியை நன்ருகக் கட்டவேண்டும். அதன் பின்னர், பல கழிகளை தரையிலிருந்து குறுக்குக் கழியின்மீது சார்த்தி, அதனுடன் பிணைக்க வேண்டும். பிறகு சார்த்தப்பட்ட கழிகளின் குறுக்கே அதிக பட்சம் இரண்டடி தூரத்துக் கொன்ருகக் கழிகளைக் கட்ட வேண்டும். பிறகு அவற்றின் மீது ஓலைகளையோ அல்லது தழைகளையோ நெருங்கப் பரப்ப வேண்டும். இவற்றை முன் பக்கத்தில் உள்ள படத்தில் பார். வசதிகள் இருந்தால் இரண்டு பக்கங்களிலும் கழிகள் சார்த்திக் கட்டலாம். இல்லாவிடில் ஒரு பக்கத்தோடு நிறுத்திக்கொள்ளலாம். ஓலைகள் கிடைத்து நெருக்கமாக வேயப்பட்டால் குடிசை மழைக்கும் பாதுகாப்பாக இருக்கும். தழைகள் வேயப்பட்டால் வெயிலுக்கும் பனிக்கும் மட்டும் பாது காப்பாக இருக்கும். தழைகூட மிக நெருக்கமாக வேயப்பட்டால் சாதாரண மழைக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

குடிசை கட்டுவதில் எத்தனையோ வகைகள் உண்டு. நாம்செல்லும் இடங்களில் எல்லாம் மேலே கூறப்பட்டது போலக் கம்பங்களும், கழிகளும், கயிறுகளும், ஓலை முதலிய பிற பொருள்களும் கிடைக்கும் என்ற நிச்சயம் இல்லை. இவை கிடைக்கா இடத்தில் என்ன செய்வது? நம்மிடத்தில் சில கைத்தடிகளும், கயிறுகளும் இருக்கு

மல்லவா? அவற்றை உபயோகித்துக் குடிசைகள் அமைக்க முயல வேண்டும். ஒரு சிறு மரத்தின் குறுக்கே ஒரு கைத்தடியை வைத்துக் கயிற்றால் கட்டவேண்டும். நம்மிடமிருக்கும் ஜமக்காளங்களின் முனைகளை அக்கைத் தடியோடு சேர்த்துக் கட்டவேண்டும். மற்ற முனைகளைக் கூடாரம் அடிப்பது போலத் தரையில் சிறு முளைகளை அடித்து, அவற்றுடன் இணைத்துக் கட்டவேண்டும். இவ்வாறு மரத்துக்கு ஒன்றாகப் பல குடிசைகளை அமைத்துக் கொள்ளலாம். இவற்றை 111-ஆம் பக்கத்தில் பார். இவை எல்லாம் அந்தந்த இடத்துக்கும், நமக்குக் கிடைக்கும் பொருள்களுக்கும் ஏற்றவாறு சிந்தித்து அமைக்கத் தக்கவையே யன்றி, முன்கூட்டித் திட்டம் வகுத்துக் கற்பிக்கத் தக்கவை அன்று.

12. திறந்த வெளியில் தீ மூட்டுதலும் உணவு சமைத்தலும்

தீ மூட்டல்:

குடிமைப் பயிற்சி சம்பந்தமாகவும், சமூக அறிவுப் பாட சம்பந்தமாகவும், சாரண இயக்கம் சம்பந்தமாகவும் நீங்கள் அடிக்கடிப் பல இடங்களுக்குச் செல்ல நேரிடும். அவ்விடங்களிற் சில சமயங்களில் திறந்த வெளிகளில் தங்க நேரிடும். அச் சமயங்களில் சமையல் செய்வதற்கோ, அன்றிப் பிற காரியங்களுக்கோ தீ மூட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். திறந்த வெளியில் தீ மூட்டுவது எளிதன்று. அதற்குப் பயிற்சி வேண்டும்.

முதலில், தீ மூட்டவேண்டிய இடத்தைத் தேர்ந்து கொள்ளவேண்டும். அந்த இடம் நாம் தங்கியுள்ள கூடாரங்களுக்குச் சற்றுத் தூரத்தில் இருக்கவேண்டுவது அவசியம். தீ மூட்டப்படவேண்டிய இடத்தில் உலர்ந்த புல்லோ, அல்லது உலர்ந்த செடி கொடிகளோ

குடிசையை அமைப்பதற்குக் கம்பங்கள், கழிகள், பனைநார் அல்லது தேங்காய் நார்கயிறு, ஓலை அல்லது தழை முதலியனவேண்டும். இவற்றைச் சேகரித்துக் கொண்ட பிறகு அவற்றிற்குத் தக்கபடி குடிசையின் அகல நீளங்களை நிர்ணயித்துக் கொண்டு குடிசை அமைக்கத்தொடங்க வேண்டும். முதலில் இரண்டு கம்பங்களைக் குடிசை எவ்வளவு நீளமிருக்க வேண்டுமோ, அவ்வளவு தூரத்தில் நடவேண்டும். இக்கம்பங்கள் குறைந்தபட்சம் இரண்டடி ஆழத்தில் நடப்படவேண்டும். பிறகு இக் கம்பங்களின் முனைகளிற் பொருந்தும்படி ஒரு குறுக்குக் கழியை நன்றாகக் கட்டவேண்டும். அதன் பின்னர், பல கழிகளை தரையிலிருந்து குறுக்குக் கழியின்மீது சார்த்தி, அதனுடன் பிணைக்க வேண்டும். பிறகு சார்த்தப்பட்ட கழிகளின் குறுக்கே அதிக பட்சம் இரண்டடி தூரத்துக் கொன்றாகக் கழிகளைக் கட்ட வேண்டும். பிறகு அவற்றின் மீது ஓலைகளையோ அல்லது தழைகளையோ நெருங்கப் பரப்ப வேண்டும். இவற்றை முன் பக்கத்தில் உள்ள படத்தில் பார். வசதிகள் இருந்தால் இரண்டு பக்கங் களிலும் கழிகள் சார்த்திக் கட்டலாம். இல்லாவிடில் ஒரு பக்கத்தோடு நிறுத்திக்கொள்ளலாம். ஓலைகள் கிடைத்து நெருக்கமாக வேயப்பட்டால் குடிசை மழைக்கும் பாதுகாப்பாக இருக்கும். தழைகள் வேயப் பட்டால் வெயிலுக்கும் பனிக்கும் மட்டும் பாது காப்பாக இருக்கும். தழைகூட மிக நெருக்கமாக வேயப்பட்டால் சாதாரண மழைக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

குடிசை கட்டுவதில் எத்தனையோ வகைகள் உண்டு. நாம்செல்லும் இடங்களில் எல்லாம் மேலே கூறப்பட்டது போலக் கம்பங்களும், கழிகளும், கயிறுகளும், ஓலை முதலிய பிற பொருள்களும் கிடைக்கும் என்ற நிச்சயம் இல்லை. இவை கிடைக்கா இடத்தில் என்ன செய்வது? நம்மிடத்தில் சில கைத்தடிகளும், கயிறுகளும் இருக்கு

மல்லவா? அவற்றை உபயோகித்துக் குடிசைகள் அமைக்க முயல வேண்டும். ஒரு சிறு மரத்தின் குறுக்கே ஒரு கைத்தடியை வைத்துக் கயிற்றால் கட்டவேண்டும். நம்மிடமிருக்கும் ஜமக்காளங்களின் முனைகளை அக்கைத் தடியோடு சேர்த்துக் கட்டவேண்டும். மற்ற முனைகளைக் கூடாரம் அடிப்பது போலத் தரையில் சிறு முளைகளை அடித்து, அவற்றுடன் இணைத்துக் கட்டவேண்டும். இவ்வாறு மரத்துக்கு ஒன்றாகப் பல குடிசைகளை அமைத்துக் கொள்ளலாம். இவற்றை 111-ஆம் பக்கத்தில் பார். இவை எல்லாம் அந்தந்த இடத்துக்கும், நமக்குக் கிடைக்கும் பொருள்களுக்கும் ஏற்றவாறு சிந்தித்து அமைக்கத் தக்கவையே யன்றி, முன்கூட்டித் திட்டம் வகுத்துக் கற்பிக்கத் தக்கவை அன்று.

12. திறந்த வெளியில் தீ மூட்டுதலும் உணவு சமைத்தலும்

தீ மூட்டல்:

குடிமைப் பயிற்சி சம்பந்தமாகவும், சமூக அறிவுப் பாட சம்பந்தமாகவும், சாரண இயக்கம் சம்பந்தமாகவும் நீங்கள் அடிக்கடிப் பல இடங்களுக்குச் செல்ல நேரிடும். அவ்விடங்களிற் சில சமயங்களில் திறந்த வெளிகளில் தங்க நேரிடும். அச் சமயங்களில் சமையல் செய்வதற்கோ, அன்றிப் பிற காரியங்களுக்கோ தீ மூட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். திறந்த வெளியில் தீ மூட்டுவது எளிதன்று. அதற்குப் பயிற்சி வேண்டும்.

முதலில், தீ மூட்டவேண்டிய இடத்தைத் தேர்ந்து கொள்ளவேண்டும். அந்த இடம் நாம் தங்கியுள்ள கூடாரங்களுக்குச் சற்றுத் தூரத்தில் இருக்கவேண்டுவது அவசியம். தீ மூட்டப்படவேண்டிய இடத்தில் உலர்ந்த புல்லோ, அல்லது உலர்ந்த செடி கொடிகளோ

இருந்தால், அவற்றை நமக்கு வேண்டிய அளவுக்கு நெருப்பிட்டு எரித்துவிடவேண்டும். ஆனால் நமக்கு வேண்டிய அளவுக்குமேல் நெருப்பைப் பரவவிடாமல் அணைத்துவிட வேண்டும். வேண்டிய அளவுக்கு மேலும் தீ படர்ந்து செல்லுமானால் அதை மரக்கிளைகளைக் கொண்டோ, மண்ணைக் கொண்டோ அணைத்துவிட வேண்டும். தண்ணீர் ஊற்றி அணைத்தால் அந்த இடம் சேறாகிவிடும்.

இடத்தைத் தெரிந்தெடுத்த பிறகு, தீ மூட்டுவது எப்படி என்பதைப்பற்றிக் கவனிப்போம்: வெளியிடத்தில் தீ மூட்டுவதற்குச் சில பொருள்கள் வேண்டும். உலர்ந்த சருகு, உலர்ந்த சிறு சுள்ளிகள், பெருஞ் சுள்ளிகள்,



தடித்த கட்டைகள் இவற்றைச் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு சருகுகளைத் தரையிற் பரப்ப வேண்டும். அவற்றின் மீது சிறு சுள்ளிகளைக் கோபுர வடிவமாக இருக்கும்படி அடுக்கவேண்டும். அவற்றின் மீது பெருஞ்சுள்ளிகளைக் கோபுர வடிவமாக இருக்கும்படி சார்த்தவேண்டும். அவற்றிற்கு மேலே படத்திற் காட்டியுள்ளபடி பெருங் கட்டைகளை வைக்கவேண்டும்.

பிறகு தீக்குச்சியைக் கிழித்துத் தரையிற் பரப்பப் பட்டுள்ள உலர்ந்த சருகுகளைப் பற்றவைக்க வேண்டும். சருகுகள் தீப்பற்றியவுடனே, அவற்றின் மீதிருக்கும் சுள்ளிகளும், பிறகு கட்டைகளும் தீப்பற்றி எரியத் தொடங்கும். சிறிது நேரத்தில் சிறு சுள்ளிகள் எரிந்து விடுமாதலால், பெருங்கட்டைகள் தரையிற் படிந்து எரியும். அப்போது அக்கட்டைகளைச் சக்கரத்தின் ஆரைக்கால்களைப்போல இருக்குமாறு அரை வட்ட மாகவோ, அன்றி முழு வட்டமாகவோ பரப்பி, எரியும் முனைகள்மட்டும் ஒன்றோடொன்று நெருங்கி இருக்கும் படி வைக்கவேண்டும். இந்த நெருப்பைச் சமைப்ப தற்கும், இரவில் குளிர் காய்வதற்கும், பிற காரியங்கட்கும் பயன் படுத்திக்கொள்ளலாம்.

சமைத்தல்:

நீங்கள் வெளியிடங்களுக்குக் காலையிற் சென்று மாலையில் திரும்பிவிடுவதாக இருந்தால் உணவுக்கு என்ன செய்கிறீர்கள்? போகும் இடத்தில் சிற்றுண்டிச் சாலையோ, உணவு விடுதியோ இருப்பின் அவற்றில் பகல் உணவை உட்கொள்ளுகின்றீர்கள். சிற்றுண்டிச்சாலை இல்லாத இடங்களுக்குச் செல்வதாக இருந்தால் உங்கள் வீடுகளிலிருந்தே உணவுச் சிப்பங்களைக் கொண்டு செல்கிறீர்கள். காலையிற் சென்று, மாலையில் வீடு திரும்பும் பிரயாணங்களுக்கு இம்முறையை மேற் கொள்வது தகுதியானதே. அவ்வாறின்றி, உணவு விடுதிகள் இல்லா இடங்களுக்குச் சென்று, இரண்டு மூன்று நாட்கள் தங்கவேண்டிய பிரயாணத்தை நீங்கள் மேற்கொண்டால், உணவுக்கு என்ன செய்வீர்கள்? ஒன்று, சமையற்காரர்களை உடனழைத்துச் செல்ல வேண்டும்; அல்லது, நீங்களே சமைக்க வேண்டும். சமையற்காரர்களை உடனழைத்துச் செல்வதால் செலவு அதிகப்படும். ஆதலால் நீங்களே சமைத்துக்கொள்வது சாலச் சிறந்ததாம்.

உங்கள் உணவை நீங்களே சமைத்துக் கொள்வ தால் சில நன்மைகள் உண்டு. முதலாவதாகச் செலவு குறைகிறது. இரண்டாவதாகச் சிற்றுண்டிகளையும், உணவு வகைகளையும், பானங்களையும் தயாரிக்க அறிந்து கொள்கிறீர்கள். மூன்றாவதாக உணவு படைக்கும் முறை களையும் தெரிந்துகொள்கிறீர்கள். மேலும், நீங்கள் சமைத்த உணவை உண்ணுவதில் ஒரு தனித்த மகிழ்ச்சி தோன்றும். ஆகவே உணவு சமைக்கும் முறைகளை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். பொதுவாக, சோறு சமைத்தல், குழம்பு ரசம் வைத்தல், ஒன்றிரண்டு கறிவகைகள் செய்தல், சிற்றுண்டிக்கு உப்புமாவும், தேநீரும் தயாரித்தல் ஆகிய இவற்றை மட்டும் நீங்கள் அறிந் திருந்தால் போதும். அவற்றைத் தயாரிக்கும் முறை களைக் கவனிப்போம்:

சோறு சமைத்தல்:

ஒரு படி அரிசி சமைக்க வேண்டுமானால், குறைந்த பட்சம் இரண்டுபடி கொள்ளக் கூடிய பானையை அடுப் பின் மீதேற்றி, அதில் அரை பாகத்துக்கு மேலும் முக்கால் பாகத்துக்குக் குறைவாகவும் இருக்கும் படி நீரை விடவேண்டும். நீர் கொதிப்பதற்குள்ளாக அரிசியைக் கல் நெல் முதலியவற்றைப் போக்கி, ஒரு பாத்திரத்தில் இட்டு, ஒரு முறை நீர் விட்டு நன்றாகக் கழுவி வைத்துக்கொள்ள வேண்டும். அரிசியைப் பல முறை கழுவி நீரை வடிப்பதால், சீவசத்து குறைந்து விடும் என்பது ஆராய்ச்சியாளரின் துணிபு. ஆதலால் பல முறை கழுவுவது நலமன்று. உலை நன்றாகக் கொதித்த பின், கழுவிவைத்திருக்கும் அரிசியை அதிலிடவேண்டும். சிறிது நேரத்தின் பிறகு, கரண்டியால் கிளறித் தரல் வேண்டும். அரிசி வெந்து சோற்றுருவம் அடையும் போது, கரண்டியில் சில பருக்கைகளை எடுத்து,

விரல்களால் அழுத்திப் பதம் பார்க்க வேண்டும். சோற்றின் இடையில் வேகாத பாகம் தட்டுப் படாத நிலையில் பானையை இறக்கிக் கீழே வைத்து வடிதட்டைக் கொண்டோ, அல்லது பானையின் வாயைக் கோணித் துண்டாற் கட்டியோ கஞ்சி நீரை வடித்து விடவேண்டும். சற்று நேரம் கழித்து ஒரு துணியை ஒரு பாய்மீது பரப்பி, சோற்றை அதன் மீது கொட்டிப் பரப்புதல் நலம்.

சாம்பார் செய்தல்:

"பசி ருசி யறியாது," என்பது பழமொழி. இதற்கிணங்கப் பசியைத் தணித்துக் கொள்வதற்குச் சோறு மட்டும் போதும். அதனுடன் மோரோ அன்றி நீரோ கலந்து சிறிது உப்பைச் சேர்த்து உண்டு பசி தணித்துக் கொள்ளலாம். ஆனால் இத்தகைய உண்டி பசியைத் தணிக்குமேயன்றி, இன்பம் பயவாது. ஆதலால் சாம்பார் மிகவும் அவசியமாகும். அதைச் செய்யும் விதத்தைக் கவனிப்போம்:

'பருப்பின்றிக் கலியாணமில்லை' என்பது போலப் பருப்பின்றிச் சாம்பார் இல்லை. இரண்டாழாக்குத் துவரம் பருப்பைக் கல் முதலியன இன்றிப் பொறுக்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு பாத்திரத்தில் சுமார் நான்கு அல்லது ஐந்து ஆழாக்கு நீரைவிட்டுச் சிறிது மஞ்சட் பொடியைப் போட்டு அடுப்பிலிட்டுக் கொதித்த பிறகு, அக்கொதி நீரில் பருப்பைப் போட்டால் அது விரைவில் வெந்து விடும்.

பிறகு நாம் எந்தக் காயைச் சாம்பாரில் சேர்க்க விரும்புகிறோமோ அந்தக் காயை வேண்டிய அளவு எடுத்து நறுக்கிச் சுத்தம் செய்து கொள்ளவேண்டும். உதாரணமாக முருங்கைக் காயை எடுத்துக் கொள்ளலாம்: சுமார் பத்து அல்லது பதினைந்து முருங்கைக்காய்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிச் சுத்தம் செய்து, அவற்

றுடன் சுமார் ஐந்து பலம் வெங்காயத்தையும் அறிந்து எடுத்துக் கொண்டு, கொஞ்சம் கறிவேப்பிலையும், ஒரு கட்டுக் கொத்துமல்லிக் கீரையும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் நீர்விட்டு வேகவைக்க வேண்டும். முருங்கைக்காய் வெந்த பிறகு, சுமார் ஒரு பலம் புளியைக் கரைத்து அதில் கால் ஆழாக்குக்குச் சற்று அதிகமாக உப்பைச் சேர்த்து முருங்கைக் காயுடன் கலந்து கொதிக்கவைக்க வேண்டும். சாம்பார் நன்றாகக் கொதிக்கத் தொடங்கியவுடனே வேகவைத்த பருப்பை அதிலிட்டு ஒரு பாத்திரத்தால் மூடிவிடவேண்டும். அப்போதே ஆட்களின் எண்ணிக்கைக்கு - அதாவது சுமார் இருபது பேர்க்கு - தக்கபடி குழம்பின் அளவை அதிகமாக்கிக்கொள்ள வேண்டும். சுமார் ஒன்றரைப்படி சாம்பாராவது வேண்டும். குழம்பு நன்றாகக் கொதித்த பிறகு, சிறிது பெருங்காயமும், சிறிது சீரகமும், சிறிது பூண்டும் சேர்க்கலாம். சாம்பார் நன்றாகக் கொதித்த பிறகு, ஒரு பாத்திரத்தில் எண்ணெயைக் கொதிக்க வைத்து, அதில் சிறிது கடுகும், கால் ஆழாக்கு உளுத்தம் பருப்பும் போட்டுத் தாளிதம் செய்து அடுப்பினின்றும் இறக்கி விடவேண்டும்.

உருளைக்கிழங்கு கறி:

முக்கால் அல்லது ஒரு வீசை உருளைக் கிழங்கைக் கொதி நீரில் வேகவைத்து எடுத்துத் தோலை உரித்து, சிறிது மஞ்சள் பொடியில் பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும். பத்துப்பலம் வெங்காயத்தையும் இரண்டரைப் பலம் பச்சை மிளகாயையும் அரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு வாணலை அடுப்பேற்றி, அதில் ஐந்து பலம் எண்ணெயை விட்டு நன்றாகக்காய்ந்த பிறகு சிறிது கடுகையும், காலாழாக்கு உளுத்தம் பருப்பையும் போட்டுச் சற்றுக் கழித்து, வெங்காயத்தையும் பச்சைமிளகாயையும் அதிலிட்டு வதக்க வேண்டும். அவை நன்கு வதங்கிய பிறகு, உழக்குத் தண்ணீரை

விட்டு, அதில் பிசைந்து வைத்திருக்கும் உருளைக் கிழங்கைச் சேர்த்துக் கரண்டியால் நன்கு கிளறித் தண்ணீர் சுண்டியவுடனே இறக்கி விடவும். உருளைக் கிழங்கு கறி சமைக்கும் முறைகளுள் இதுவே மிக எளிய முறை.

இது வரையில் உணவுக்கு அவசியமான சோறு வடித்தல், சாம்பார் தயாரித்தல், உருளைக் கிழங்குகறி செய்தல் ஆகிய முறைகள் கூறப்பட்டன. இவையே முடிவானவை அன்று. உங்களுள் எத்தனையோ பேருக்குப் பல வகையான கறிகள் செய்யத் தெரியலாம்; சாம்பார் வகைகளும், ரசவகைகளும் செய்ய தெரிந்திருக்கலாம். ஆயினும் சமைக்கவே அறியாத சிலர் சேர்ந்து வெளியிடங்களில் சமைக்க வேண்டுமாயின் அவர்களுக்கு உதவியாக இருக்கவே மேலே கூறப் பெற்ற முறைகள் தரப்பட்டுள்ளன. இனி, சிற்றுண்டிவேளைக்கு ஏதேனும் செய்யத் தெரிய வேண்டுமல்லவா? அதற்கு உப்புமா செய்யும் முறையும், அதோடு தேநீர் தயாரிக்கும் முறையும் கீழே தரப்படுகின்றன:

உப்புமா செய்தல் :

ஒரு படி ரவையை நன்கு சுத்தம் செய்து கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் அரை ஆழாக்கு உளுத்தம் பருப்பையும் நன்றாய்ச் சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவும். சுமார் ஐந்து பலத்துக்குமேல் பத்து பலத்துக் குள்ளிருக்குமாறு வெங்காயத்தை அரிந்து வைத்துக் கொள்ளவும். இரண்டரை பலம் பச்சை மிளகாயையும் அரிந்து வைத்துக் கொள்ளவும். ஒரு கொத்துக் கறிவேப்பிலையையும் எடுத்துக் கொள்ளவும். ஒரு பெரிய வாணலில் முதலில் குறைந்த பட்சம் ஐந்து பலம் எண்ணெயைவிட்டு, அது காய்ந்த உடனே, அதிற் சிறிது கடுகைப் போட்டுப் பிறகு உளுத்தம் பருப்பையும்

ஐந்து பலம் முந்திரிப் பருப்பையும், பிறகு வெங்காயத்தையும் மிளகாயையும் கறிவேப்பிலையையும் போட்டு அவை நன்ருக வதங்கும்படி கிளற வேண்டும். பிறகு ஒன்றரைப் படி தண்ணீரை விட்டு அதில் ரவையைக் கொட்டிக் கிளறிக் கொடுக்க வேண்டும். 'அரிசிரவையாக இருந்தால் இரண்டுபடி தண்ணீர் விடவேண்டும். தண்ணீர் குறைவாகக் காணப்பட்டாலும், எண்ணெய் குறைவாகக் காணப்பட்டாலும் சிறிது சேர்த்துக் கொண்டு, உப்புமா நன்கு வெந்த பிறகு இறக்கிவிட வேண்டும்.

தேநீர் தயாரித்தல்:

இது மிக எளிது. எத்தனை ஆட்களுக்குத் தேநீர் வேண்டுமோ, அத்தனை ஆழாக்குத் தண்ணீரை அடுப்பிலேற்றி ஒரு மூடியிட்டுக் கொதிக்க வைக்கவேண்டும். நீர் நன்ருகக் கொதித்தபின் பாத்திரத்தை இறக்கிக் கீழே வைக்கவும். இருபது பேருக்கு அரைக்கால் பவுன் அல்லது சிறிது அதிகம் தேயிலையை கொதி நீரில் இட்டு மூடிவிடவேண்டும். இரண்டு நிமிஷம் கழிந்த உடனே மூடியைத் திறந்து கஷாயத்தை வடிகட்டிக் கொள்ள வேண்டும். அதில் அரைப்படி பாலைக்கலந்து பத்துப் பலம் சர்க்கரையைச் சேர்த்தால் தேநீர் மணமாகவும் உருசியாகவும் இருக்கும்.

மாணவர்களே! இவற்றைத் தவிர வேறுபல பாகங்களை நீங்கள் செய்ய அறிந்திருப்பது மிகவும் நலம். இன்றேல் மேலே கூறப்பட்டவைகளையேனும் செய்யக் கற்றிருப்பது சாலச் சிறந்ததாகும்.

13. குழந்தை வளர்ப்பும் பாதுகாப்பும்

நமது நாட்டில் குழந்தை இறப்பு மிக மிக அதிகம். அதற்குக் காரணங்கள் பல உள. அவற்றுள் ஒன்று நம்மவர் எப்படிக் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும், எப்படி வளர்க்க வேண்டும் என்பதை அறியாததேயாம். நமது நாட்டில் இன்று இருந்துவரும் அதிகப்படியான குழந்தை இறப்பை ஓர் அளவுக்குக் குறைக்க வேண்டுமானால், ஆண், பெண் ஆகிய இருபாலரும் குழந்தை வளர்ப்பைப் பற்றிய நூல்கள் பலவற்றைப் படித்து, அவற்றின்படி நடைமுறையில் செய்தல் வேண்டும்.





இங்ஙனம் செய்வார்களேயாயின் கூடிய விரைவில் நம் நாட்டிற் குழந்தை இறப்பை வெகுவாகக் குறைக்க முடியும். நமது நாட்டவர் குழந்தை வளர்ப்பை அறியாததோடு மட்டுமன்றி அவர் மனத்தில் ஒரு தவறான எண்ணமும் இருந்து வருகிறது. அதாவது, பெண்கள் குழந்தைகளைப் பெற்று வளர்க்கவே பிறந்தவர்கள். ஆகவே அவர்களைத் தவிர ஆண்கள் ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை என்று நம்மில் பெரும்பாலோர் கருதுகின்றனர். அவ்வாறு செய்வது இழிவென்றும் கருதுகின்றனர். குழந்தையைப்

பெறுவது எளிது, வளர்ப்பது கடினம். வருங்காலத்தில் பெற்றோர்களாக ஆகப் போகும் நீங்களும் இத்தகைய குற்றம் செய்யாதிருக்க வேண்டும் என்று எண்ணியே இப்பாடம் புகுத்தப் பட்டது.

நீங்கள் எப்படிக் குழந்தைகளைச் சீரிய முறையில் வளர்த்துப் பாதுகாத்து வரவேண்டும் என்பதைக் கீழே படித்து அறிந்து கொள்ளுங்கள்:

குழந்தைகளை எடுக்கவும், படுக்க வைக்கவும் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். குழந்தையைக் கையில் எடுக்கும் போது, ஒரு கையைக் கழுத்தில் கொடுத்துத் தலையைச் சற்றுத் தூக்கினாற் போலப் பிடித்துக்கொள்ள வேண்டும். மற்றொரு கையை இருமுட்டிக் கால்களுக்கு அடியில் கொடுத்து மேலுக்கு எடுக்கவேண்டும். இவ்வாறு எடுக்கும் போது முரட்டுத்தனமாக எடுக்கக் கூடாது. முரட்டுத்தனமாக எடுத்தால் குழந்தையின் உடலில் எப் பாகத்திலாயினும் பிடிப்பு ஏற்படும். இதைத்தான் பெரியவர்கள் 'உரம் விழுந்து விட்டது' என்கிறார்கள். குழந்தை தக்க பருவம் அடைந்து தானே தலையை மேலுக்குத் தூக்கும் வரையில் குழந்தையை அக்குளில் கை கொடுத்து மேலுக்குத் தூக்கக் கூடாது.

குழந்தை நன்றாக வளர வேண்டுமானால் தாய்ப் பாலைத் தவிர வேறெவ்வித பாலையும் கொடுக்கலாகாது. தாய், பால் கொடுக்க முடியாத நிலையில் இருப்பாளானால், சுத்தப் பசும்பால் தருதல் வேண்டும். வெறும் பசும் பாலை மட்டும் கொடுக்கக் கூடாது. பால் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு சுத்த நீர் விட்டுக் கலந்து காய்ச்சித் தருதல் வேண்டும். தாய் நோய்வாய்ப் பட்டிருக்கும் போது தாய்ப்பால் கொடுக்கலாகாது. அவ்வாறு கொடுப்பதனால் தாய்க்கு உள்ள நோய் குழந்தைக்கும் ஏற்படும். குழந்தைகளுக்குத் தாய்ப் பாலுடன் பழ ரசங்கள் கொடுப்பது மிகவும் நல்லது. ஒரு முறை

குழந்தைக்குப் பாலூட்டிய பிறகு, குறைந்தது மூன்று மணி நேரம் கழித்துதான் மறுபடியும் பாலூட்ட வேண்டும்.. குழந்தை அடிக்கடி அழுமானால் முதலில் அதற்கு என்ன ஏற்பட்டது என்பதை அறிந்த பிறகு தான் அதற்கு செய்ய வேண்டியதைச் செய்யவேண்டும். உதாரணமாகக் குழந்தையினது படுக்கை நனைந்து விட்டிருக்கலாம். அதனால் குழந்தை அழுவதும் உண்டு. அதைக் கவனியாமல் வயிற்றுவலி என்று எண்ணிச் சிகிச்சை செய்வீர்களானால் அது ஆபத்தில்கொண்டு போய்விடும்.

குழந்தையை நீராட்டும் போது அதிக வெப்ப மான நீரினாலோ அல்லது மிகக் குளிர்ந்த நீரினாலோ குளிப்பாட்டலாகாது. வெந்நீரில் தண்ணீரை விட்டுக் கலக்கக் கூடாது. முதலில் தண்ணீரை வேண்டிய அளவு பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அதற்குத் தகுந்த அளவில் வெந்நீரைக் கலந்துவிட வேண்டும். பிறகு குழந்தையைக் கால்களின்மேல் முதுகுப்புறம் பொருந்தும்படி கிடத்தி வெந்நீரை விரைவாகக் கொட்டாது, மெதுவாகக் கொட்ட வேண்டும். தூய ஆடையினால் நன்றாகத் துடைக்க வேண்டும். இவ்வாறு குளிப்பாட்டும் போது நாடோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்ட வேண்டும். குழந்தை யினது உச்சியில் தினந்தோறும் ஆமணக்கு நெய் இட்டுத் தேய்க்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் குழந்தைக்கு ஏற்படும் சூடு தணியும். குழந்தை யின் வயிற்றில் எவ்விதக் கோளாறும் ஏற்படாமல் இருக்கச் சித்தா, ஆயுர்வேத, யுனனி முறைப்படி தயாரிக்கப்பட்ட சில மருந்துகளை வாரத்துக்கு ஒரு முறையாவது கொடுத்தல் வேண்டும்.

குழந்தைகளை எப்போதும் தூக்கி வைத்துக் கொண்டே இருக்கக் கூடாது. அவைகளை இயற்கையில்

வளர்த்தல் வேண்டும். அவைகளைத் தரையில் விட்டு விளையாடச் செய்தல் வேண்டும். குறைந்தது ஒரு மணி நேரமாகிலும் குழந்தையைக் கதிரவனின் மாலை ஒளி படும்படி விட்டு வைக்க வேண்டும். குழந்தைகளுக்குத் தடித்த துணிகளினால் தைக்கப் பட்ட ஆடைகளை அணிவிக்கக் கூடாது. மெல்லிய துணியினால் ஆன உடையையே உடுத்துவிக்க வேண்டும். குழந்தைக்குப் போடப் படும் உடைகள் இறுக்கமானதாக இருக்கக் கூடாது. குழந்தையின் உடலில் ஈரமான துணியை அணியக் கூடாது. அழுக்கான ஆடைகளையும் அணியக் கூடாது. கண், மூக்கு, செவி, வாய் ஆகியவைகளை அடிக்கடி சுத்தப் படுத்திக்கொண்டிருக்க வேண்டும். அவைகளுடைய கைகளில் அசுத்தம் தங்காது பார்த்துக் கொள்ள வேண்டும். விரலைச் சப்பும் பழக்கத்தைக் கூடிய வரை நீக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு எவ்விதமான பயமும் காட்டக் கூடாது. அவை கேட்கும் கேள்விகளுக்குத் தக்க பதிலை உடனுக்குடனே எவ்வித வெறுப்பும் இன்றிச் சொல்ல வேண்டும். குழந்தைகளிடத்தில் எப்போதும் சிரித்துக் கொண்டே பேச வேண்டும். குழந்தைகளிடத்தில் அதட்டிப் பேசக் கூடாது. அவைகளிடத்தில் மெது வாகவும் சாந்தமாகவும் பேசுதல் வேண்டும். தெய்வத்தி னிடத்தில் எத்தனை பயபத்தியுடன் நடந்து கொள்வீர் களோ, அதே போல, அத்துணை பயபத்தியுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

குழந்தைகள் விளையாடுவதற்காக வேண்டி பெரிய இலேசான, பல நிறங்கள் பூசப்பட்ட விளையாட்டுக் கருவிகளைத் தருதல் வேண்டும். கண்ணாடிக் கருவி, கூரிய முனைகளைக் கொண்ட கருவி, மிகச்சிறிய கருவி முதலியவைகளைக் கொடுக்கக் கூடாது. குழந்தைகளுக்கு நோய் ஏற்படுமானால் உடனே மருத்துவரிடத்தில்

காட்டித் தக்க சிகிச்சை அளித்தல் வேண்டும். குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படக்கூடிய சிறு நோய்களுக்கு நீங்களே சிகிச்சை செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். குழந்தைகள் இருக்கும் இடத்திற்கு அருகில் இருக்கும் அசுத்தங்களை அவ்வப்போது அகற்றிவிட வேண்டும். காற்று ஓட்டம் அதிகமாய் இருக்கிற இடங்களிலும், சூரிய வெளிச்சம் படும் இடங்களிலும் குழந்தைகளைப் படுக்கவைத்து உறங்கச் செய்ய வேண்டும்.

மாணவர்களே! மேற் கூறியவைகளைத் தவிர குழந்தை வளர்ப்பைப் பற்றி இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவைகளை நீங்கள் நன்கு அறிதற்குரிய புத்தகங்கள் பலவற்றைப் படித்து அறிந்துகொண்டு அவற்றின்படி நடத்தல் வேண்டும். அங்ஙனம் படித்து அறிந்தவைகளை அண்டை வீட்டாருக்கும், நண்பர்களுக்கும் சொல்லி, அவர்களையும் அறியச் செய்து, அவற்றின் முழுப்பயனையும் அடையுமாறு செய்தல் வேண்டும்.

14. நாடகக் காட்சிகள்



1. பரதனும் குகனும் (நாட்கம்)

களம் : கங்கையின் இரு கரை.
காலம் : முற்பகல்.
நடிகர் : பரதன், சத்ருக்கினன், குகன், சுமந்திரர், கோசலை, கைகேயி, சுமித்திரை முதலியவர்கள்.

[தசரதரிடம் கைகேயி பெற்ற வரத்தால் இராமன், இலக்குவனும் சீதையும் பின்வரக் காட்டை அடைந்தான். அத்தருணம் தாய்மாமன் வீடுசென்றிருந்த பரதன் அயோத்தியை அடைகிறான்; விஷயத்தை அறிந்து தாயைக் கடிந்துவிட்டுச் சத்துருக்கினனுடனும், மூன்று தாய்மாருடனும், சேனையுடனும் புறப்பட்டுக் கங்கையின் வடகரையை அடைந்தான். அப்போது, தென்கரையில் குகன் என்னும் வேட்டுவ அரசன் தன் சேனையுடன் நிற்கிறான். ஒரு பெரிய சேனையுடன் பரதன் வருவதைக் கண்ணுற்ற குகன், காட்டையடைந்த இராமனுடன் பரதன் போர் புரிய வந்துள்ளான் என நிச்சயிக்கிறான்.]

குகன் : (மிகுந்த கோபத்துடன் தன் படை வீரர்களை நோக்கி) தோழர்களே, அதோ வருகின்ற படையைப் பார்த்தீர்களா? அது பரதனுடைய படையாகத்தான் இருத்தல் வேண்டும். முடி துறந்து காட்டை அடைந்த நம் இராமபிரானை இக்காட்டிலும் வாழவொட்டாமல் பொருது அழிக்க அவன் வந்துள்ளான் போலும்! இருக்கட்டும். இச்சேனை எனக்கு எம்மாத்திரம்! இப்படை எலி; அரவம் யான். பரதன் அரசனாயிருந்தால் என்ன? அவன்மீது வேடனாகிய என் அம்பு பாயாதோ? வீரர்களே, எழுங்கள்; வாருங்கள். என் ஆருயிர்த் தலைவன் இராமபிரானுக்கு இன்றே அரசைத் தரப்போகின்றேன். துடியைக் கொட்டுங்கள். பகைவர் ஆற்றைக் கடவாதபடி துறைகளை அழியுங்கள். இராமபிரான் அன்று என்னைத் தன் தோழன் என்று கூறிய ஒருசொல் போதாதோ! என் நாயகனது உரிமையை வஞ்சனையாற் கவர்ந்த இவர்கள், நான் உயிருடன் இருக்கும்வரை, என்னைக் கடந்து போய் விடுவார்களோ? என்னே இப்பரதனுக்கு அரசுரிமையில் உள்ள ஆசை! (ஏளனச் சிரிப்பு) இராமனைத் தன் அண்ணன் என்று சிறிதும் கருதினானில்லையே! என் துணைவன் காடாள இவன்மட்டும் நாடாள்வதோ? பரதனை வென்று இராமபிரானுக்குப் பார் ஈந்தது வேடர் குலம், என்னும் புகழை நீங்கள் அடையவேண்டாவோ?

[தென்கரையில் குகன் இவ்வாறு வஞ்சினங்கூற, வடகரையில் நின்ற பரதனுக்கு அமைச்சர் சுமந்திரர் குகனைக் காட்டுகின்றார்.]

சுமந்திரர் : சூரியகுலத் தோன்றலே, அதோ நிற்பவன் இக் கங்கை யாற்றின் இரு கரைகளையும் தனக்கு உரிமையாக உடைய வேடர்குலத் தலைவன்; வலிமையில் ஆண் யானையை ஒத்தவன்; கடலினும் பெரிய சேனையை உடையவன்; உன் தமையனாகிய இராமபிரானுக்கு ஆருயிர் நண்பன்; குகன் என்னும்பெயரை உடையவன்; தன்சேனையைப் புறத்தே நிறுத்தித் தான்மட்டும் தனியே வருகின்றான். உன்னைக் காண்பதே அவன் நோக்கம் போலும்!

குகன் : (கோசலையைப் பரதனுக்குச் சுட்டி) வெற்றி வீர, இவர் யார்?

பரதன் : அன்பரே, இவர் எந்தையாரின் மூத்த தேவியார்; இராமர் பிறந்ததால் அடைய வேண்டிய பாக்கியத்தை, யான் பிறந்ததால் இழந்த பெரியார்.

[உடனே குகன் கோசலையின் அடியில் வீழ்ந்து வணங்குகிறான்.]

கோசலை : (பரதனை நோக்கி) மைந்த, இவன் யார்?

பரதன் : அம்மா, இக்குரிசில் இராகவருக்குத் துணைவர். இலக்குவனுக்கும் எனக்கும் இளையவனுக்கும் மூத்தவர். இவர் பெயர் குகன் என்பது.

[குகனும் பரதனும் வருந்துகின்றனர்.]

கோசலை : (வருந்துகின்ற குகனையும் பரதனையும் நோக்கி) மைந்தீர், வருந்தவேண்டா. நாட்டைவிட்டுக் காட்டுக்கு வந்ததும் நலமாகவே முடிந்தது. இதுவரையில் நால்வராய் இருந்த நீவிர், ஐவராய்க் கலந்து வாழ்வீராக!

குகன் : (கோசலையின் அருகிருந்த சுமித்திரையைக் காட்டி) அரசே, இவர் யார்?

பரதன் : புளினர்குலத் தலைவரே, இவர் எந்தையாரின் இளைய தேவியார்; 'இராமன்பின் பிறந்த தம்பியும் உளன்,' என்று உலகத்தவர் உரைக்கும்படி இராமரைப் பிரியாது உடன் உறையும் இலக்குவனைப் பயந்த பெரியார்; (குகன் அவளையும் வணங்குகிறான்; பின்னர் பரதன், சுமித்திரையின் அருகில் நின்ற கைகேயியைக் காட்டி) இவர்யார் என நீர் அறிய விரும்பினால் கூறுவல். இத்துன்பங்களுக்கெல்லாம் பிறப்பிடம் இவரே. இவர் வயிற்றில் நீண்ட நாள் கிடந்ததன் பயனாகவே இத்தனை துன்பங்களையும் அனுபவிக்கின்றேன். இவரை இன்னும் நீ அறியவில்லையெனில், இவரே என்னை ஈன்றவர்.



2. குமணவள்ளல்

(நாடகம்)

காட்சி—1

களம் :	முதிரமலை
காலம் :	பிற்பகல்
நடிகர் :	குமணவள்ளல், அமைச்சர், புலவர் முதலியோர்

(முதிர மலைத்தலைவனை குமணவள்ளல் தன் அரசமண்டபத்தில் இருக்கின்றான். அமைச்சர், சேனைத்தலைவர், முதலியோர் இருக்கின்றனர்.)

குமணன் : (முதல் அமைச்சரைப் பார்த்து) முதல் அமைச்சரே, நீர் நமது நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து மீண்டீர் அல்லவா ?

முதல் அமைச்சர்: ஆம், அரசரே!

கும: இவ்வாண்டில் பயிர் விளைவு எப்படி இருக்கிறது?

மு. அ: இவ்வாண்டு தொடக்கத்தில் நாம் பெரிய குளங்களைப் பல இடங்களில் வெட்டுவித்தோம்; வயல்கட்கு நீர் கொண்டு செல்லத் தக்க கால்வாய்கள் பலவற்றைப் புதியனவாக வெட்டுவித்தோம். ஆதலால் சென்ற ஆண்டு விளைவைவிட இந்த ஆண்டு விளைவு மிகுதியாகும் என்பதில் ஐயமில்லை.

கும: மிக்க மகிழ்ச்சி! நம் குடிகள் நமது அரசாட்சியைப்பற்றி என்ன பேசுகிறார்கள்?

மு. அ: குடிமக்கள் நமது அரசாட்சியை மனமாரப் பாராட்டுகிறார்கள். நாம் ஆண்டுதோறும் அவர்கள் நன்மைக்காகப் பலதுறைகளிலும் பாடுபட்டுவருவதே அவர்கள் பாராட்டுக்குக் காரணம் ஆகும்.

கும: நமது நாட்டில் வீடு இல்லாத மக்களுக்கு வீடுகள் கட்டித்தர ஆணை பிறப்பித்தோமே. அந்த ஆணைப்படி அனைவரும் வீடுகளைப் பெற்றனரா?

மு. அ: அரசே, அத்திட்டம் சென்ற ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று வந்து, இந்த ஆண்டில் முடிவுற்றது. இப்பொழுது வீடற்ற ஒரு குடும்பமும் நமது நாட்டில் இல்லை. எல்லா மக்களும் இத்திட்டத்தைப் பாராட்டிப் பேசுகின்றார்கள்.

கும: (எல்லோரையும்) அமைச்சர்களே, தானைத் தலைவர்களே, பெருமக்களே, உங்கள் மனமார்ந்த ஒத்துழைப்பினால் நான் நம் குடிகட்குக் காவலனாக இருந்து வருகிறேன். எனது எட்டாண்டு ஆட்சியில் கரம்பு நிலங்கள் விளை நிலங்களாக மாறின. தண்ணீர் இல்லாப் பல ஊர்கள் நன்னீர்க் குளங்களைப் பெற்றன; ஆண்டுதோறும் விளைவு மிகுதிபட்டு வருகிறது. கைத்

தொழில்களும் வளர்ச்சி பெற்று வருகின்றன. இவ்விரண்டினாலும் நம்மக்கள் வருமையின்றி வாழ்வதைக்காண நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். (முதல் அமைச்சரைப் பார்த்து) நமது நாட்டில் கல்வி நிலை எப்படி இருக்கிறது?

மு. அ: பெருமானே, ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடம் இருக்கின்றது. சிறுவர் மிக்க ஆவலுடன் கல்விகற்று வருகின்றனர், 'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' என்பதைக் கிராம மக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றார்கள்.

கும: நமது தாய் மொழியாகிய தமிழ் நன்றாக வளர வேண்டும் என்பது எனது ஆவல். நமது தமிழ் இயல்—இசை—நாடகம் என மூவகைப்படும் அல்லவா? இயற்றமிழுக்கு உரிய புலவரும், இசைத் தமிழுக்குரிய பாணரும், நாடகத் தமிழுக்கு உரிய கூத்தரும் நன்கு போற்றப்பட்டால்தான் முத்தமிழும் செழித்து வளரும். நாம் இதுவரை இம்மூவகையையும் போற்றி வந்திருக்கின்றோம்; இனியும் அவ்வாறே செய்வோம். தமிழைப் போற்றி வளர்க்காதார் தமிழர் ஆகார் அன்றோ?

மு. அ: அரசே, முத்தமிழ் அறிஞரை நாம் போற்றிப் பாதுகாக்கும் அளவு, வேறு எந்த அரசரும் பாதுகாப்பதில்லை என்று நம் அரண்மனைக்கு வந்து மீண்ட முத்தமிழ் அறிஞர்களே சொல்லக் கேட்டிருக்கின்றேன். தங்கள் தொண்டர்களாகிய நாங்களும் தமிழர்கள் ஆதலால், எங்களால் இயலும் அளவு முத்தமிழ் அறிஞரை ஆதரித்து வருகிறோம் என்பதைத் தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

[திரை]

காட்சி—2

களம் : முதிர மலைக்காடு
காலம் : பிற்பகல்
நடிகர் : குமணன், பெருந்தலைச் சாத்தனர்

[குமணன் தம்பியாகிய **இளங்குமணன்** குமணனைக் கொன்று அரசைக் கைபற்றச் சூழ்ச்சி செய்தான். அதனை உணர்ந்த குமணன் காட்டிற்கு ஓடிவிட்டான். இளங்குமணன் அரியணை ஏறினன். குமணன்மீது பற்றுக் கொண்ட பெருமக்கள் சிலர் அவனுக்குவேண்டிய உணவினை மட்டும் தவருது அனுப்பிவந்தனர். அந்நிலையில் குமணனைக் கண்டு பரிசில்பெற விரும்பிப் பெருந்தலைச் சாத்தனர் என்ற புலவர் அரண்மனைக்குச் சென்ருர். தாம் தேடிவந்த வள்ளல் அரசு துறந்து காட்டில் இருந்ததைக் கேள்வியுற்ருர்; இளங் குமணனைக் காண மனம் வாராது காடு சென்ருர்; மிக அரிதின் முயன்று குமணனைக் கண்டார்.]

புலவர் : அரசர் பெருமானே, நான் ஒரு புலவன். தங்களைக் காணத் தலைநகரம் சென்றேன். தாங்கள் இங்கு இருப்பதை அறிந்து வந்தேன்.

கும : புலவரே, உமது வரவு நல்வரவாகுக! நீர் எந்த நாட்டீர் ? எவ்வூரீர் ?

புல : அரசரே, நான் புலவர் மரபில் வந்தவன். நானும் ஓரளவு தமிழ் வாசித்தவன். என்னையும் புலவர் என்று மக்கள் கூறுவர்.

கும : ஐயா, நீர் புலவர் மரபினர் என்று கேட்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

புல : பெருமானே, புலமை இருந்து பயன் என்ன? புலமையுடன்வறுமைதொடர்ந்து வருகின்றதே! வறுமைக் கொடுமை புலவரை அன்ருே அடைக்கலமாகக் கொண்டிருக்கின்றது! என் வீட்டில் சமைத்தல் தொழில் இல்லாமையால் அடுப்பில்காளான்பூத்துக்கிடக்கின்றது. போதிய உணவு இல்லாததால் என் மனைவி உடல் வற்றிக் கிடக்கின்ருள். அவள் அந்த நிலையில் இருப்பதால் தாய்பால் பருக வழியின்றி என் குழந்தை அழுகை ஓயவில்லை. இவ்வாறு அழும் குழந்தை தாய்முகம் நோக்க, தாய் இதற்கு என்ன செய்வது ?' என்ற முறையில் என்முகம் நோக்க, யான் தங்கள் முகம் நோக்க ஓடிவந்தேன்; வந்த நேரம்

சரியன்று. தாங்கள் முடிதுறந்து அடிநோவக் காட்டில் அலைகின்றீர்கள். இந்தக் காலத்தில் வர நேர்ந்தமை என் தவக்குறையே ஆகும்.

கும:—புலவரே. உமது வறிய நிலையைக்கேட்டு உள்ளம் உருகுகின்றது. நான் அரியணைமீது இருந்து புலவர் மனம் குளிரப் பொருள் கொடுத்த காலத்தில் நீர் வரவில்லை. நான் உயிருக்கு அஞ்சிக் காட்டில் அலையும் இத்துன்பக் காலத்தில் நீர் வந்து துன்புறுகின்றீர். உமது துன்பத்தை எவ்வாறு போக்குவேன்? (சிறிது நேரம் யோசித்து) சரி, நான் கூறுவதைக் கேளும். என் தலையைக் கொண்டுவருபவர்க்குத் தக்க பரிசு தருவதாக என் அருமைத் தம்பி அறிவித்திருக்கிறான். ஆதலால், நீவிர் என் தலையை அறுத்துச் சென்று அவனிடம் கொடும்; அவன் பரிசளிப்பான்; உமது வறுமை நீங்கும், கொலை யஞ்சான் ஒருவன் என்னைக் கொன்று என் தலையைக் காட்டிப் பரிசு பெறுவதைவிட, அறிவும் கல்வியும் ஒழுக்கமும் உடைய புலவராகிய நீர் என்னைக் கொல்லின், அஃது எனக்குப் பெருமை அளிக்கும். என் தலை ஒரு புலவர் குடும்பத்தின் வறுமையைப் போக்கியது என்று உலகம் உயர்வாக என்னைப்பற்றிப் பேசும். ஆதலின் ஐய, அன்பு கூர்ந்து, மறுமொழி கூறாது, என் தலையை இந்த வாளால் அரிந்து எடுத்துச் செல்லும்.

(அரசன் வாளைத் தருதல்)

புல: (நாம் இந்த வாளை வாங்காவிடில் இவ் வரசர் இதனால் தம் தலையை அறுத்துக் கொள்ளக்கூடும் என்று எண்ணி வாளை வாங்கிக் கொண்டார்.) அரசர் பெருமானே, நான் இந்த வாளுடன் செல்வேன்; தங்கள் தம்பியை இங்கு அழைத்து வருவேன்; தம்மை அரியணையில் இருத்துவேன்; போய் வருவேன்.

(குமணனை வணங்கிப் போதல்)

[திரை]

CITIZENSHIP TRAINING

Syllabus for Form IV

1. *The National Flag*:-History and significance-Hoisting the Flag. Flags of other nations.

2. *Orderly movement*:-Formations. Movements. Use of the whistle signals. Correct posture and gait.

3. *First-aid*:-

    i. First-aid as prescribed for Form 111.
    ii. Knowledge of circulation of blood and treatment for bleeding.
    iii. Artificial respiration-The Schafer method.
    vi. Rescuing from fire-proper treatment.
    v. Rescuing from drowning-Proper treatment.
    vi. First-aid treatment for electric shock.
    vii. How to stop a mad dog and how to tackle a run away animal.

4. *Observation and tracking*:-Making rough intelligible sketches. Reading one-inch maps.

5. *Map making and map-reading*:-Making rough intelligible sketches. Reading one-inch maps

6. *Path finding*:-Detailed knowledge of locality and of useful institutions like hospitals, dispensaries, pharmacies, residences of doctors, nurses, midwives. Ability to guide others to such places.

7. *Folk dances and folk songs and Community singing.*

8. *National songs.*

9. *Signalling*:-Advanced field work.

10. *Knowledge of civilinstitutions*:-How to make us of-The post office-The Telegraph office-The Telephone. The working of Ration-offices Ration-shops Railways-banks municipal office-Police stations-Village headman's offices-Courts-How to speak on the telephone where this is available.

11. *Knots and lashings*:-In addition to what is prescribed for Form 111, square lashing, diagonal lashing, trestle building, building huts and shelters.

12. *Fire lightings*:-In the open, cooking a simple meal.

13. *Child nursing and looking after children.*

14. **Farces and dramas.**

CITIZENSHIP TRAINING

BOOK IV For FORM IV

(TAMIL)

BY

T. S. UMAPATHI M.A., L.T. (Dip-in-Geog.)

Headmaster, O. Abdul Hakim Hindu-Muslim High School, Madras.

THE NATIONAL PUBLISHING CO.,

6, KONDI CHETTY STREET, MADRAS-1

 1951 [Re. 1.